DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
WHAT'S YOUR HOME WORTH?
FOR FREE HOME EVALUATION
Please Call me
Selva Karthigesu
Sales Representative
416-648-9757
www.selva-karthigesu.c21.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

25 வது வெள்ளி விழா 2021

# UTHAYAN
# உதயன்

$1.00
416-752-1524
www.uthayanews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1315
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday June 18, 2021



## "யார் இந்த ஸ்டீபன் டெல் டுகா"
## Who is Steven Del Duca?
## ஒன்ராரியோ வாக்காளர்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றது மாகாண என்.டி.பி கட்சி



யார் இந்த ஸ்டீபன் டெல் டுகா என்ற தலையங்கத்தோடு ஒன்ராரியோ என்.டி.பி கட்சியின் பிரச்சாரப் பிரிவு ஒரு விளம்பரத்தை வெளியிட்டுள்ளது இதன் மூலம் ஒன்ராரியே என்.டி.பி கட்சி வெளியிட்டுள்ள விளம்பரத்தில் லிபரல் தலைவர் ஸ்டீவன் டெல் டுகாவை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றது. தற்போதைய ஒன்ராரியோ லிபரல் கட்சியின் தலைவர் ஸ்டீபன் டெல் டுகா யார் என்று ஒன்டேரியர்களுக்குத் தெரியாது - எனவே என்டிபி அவரை ஒரு புதிய விளம்பரத்தின் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்து அவரின் உண்மையான முகத்தை காட்ட விரும்புகின்றது. இவ்வாறு தெரிவித்துள்ளது ஒன்ராரியோ என்.டி.பி கட்சியின் பிரச்சாரப் பிரிவு. *(உள்ளே விபரமான செய்தி 2ம் பக்கத்தில்)*

## தாக்கம் அதிகம் உள்ள டெல்றா கிருமி தொற்று அதிகமாக உள்ள பிரதேசங்களில் இரண்டாவதுமுறை தடுப்பூசியை துரிதப்படுத்த ஒன்ராரியோ அரசு முடிவு



தாக்கம் அதிகம் உள்ள டெல்றா கிருமி தொற்று தாக்கம் அதிகமாக உள்ள ஹாமில்டன், டுர்ஹாம் மற்றும் சிம்கோ-முஸ்கோகா - ஒன்ராறியோ ஆகியவையே பிரதேசங்களில் இரண்டாவது முறை தடுப்பூசியை துரிதப்படுத்த ஒன்றாரியோ அரசு முடிவு செய்துள்ளதாக ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அறிவித்துள்ளார்

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

**சிறு விளம்பரங்கள் 4ம் பக்கத்தில்**
Classified Advertisements On Page 4

'உதயன்' சிறு விளம்பரங்கள் மூலம் அதிக பயனடையுங்கள். குறைந்த கட்டணத்தில் நிறைந்த பலன். தற்போது புதுப் பொலிவுடன் 4ம் பக்கத்தில் பாருங்கள், படியுங்கள்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8
416.568.4301, 905.471.4050

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

கனடிய செய்திகள்
Canadian News

# “யார் இந்த ஸ்டீபன் டெல் டுகா” Who is Steven Del Duca?

## ஒன்றாரியோ வாக்காளர்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றது மாகாண என்.டி.பி கட்சி



லிபரல் தலைவர் ஸ்டீவன் டெல் டுகா யார் என்று ஒன்டேரியர்களுக்குத் தெரியாது - எனவே என்டிபி அவரை ஒரு புதிய விளம்பரத்தில் அறிமுகப்படுத்துகிறது.

“ஸ்டீவன் டெல் டுகா யார், அவரது பதிவு என்ன, அவர் யார் என்பதற்காக மக்கள் அறிய உரிமை உண்டு என்று நாங்கள் நினைக்கிறோம”, என என்டிபி பிரச்சார இயக்குனர் மைக்கேல் பாலகஸ் கூறினார். “டெல் டுகா மற்றும் தாராளவாதிகள் 15 ஆண்டுகள் அரசாங்கத்தில் இருந்தனர். மக்களுக்கு வாழ்க்கையை சிறப்பாக மாற்றுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது, ஆனால் அவர்கள் மருத்துவமனை நிதியை முடக்குவதற்கும், செவிலியர்களை பணிநீக்கம் செய்வதற்கும், ஹைட்ரோ ஒன் தனியார்மயமாக்குவதற்கும் தேர்வு செய்தனர். ஸ்டீவன் டெல் டுகா தனது பதிவில் இயங்க விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது”.

புதிய 30 மற்றும் 15 வி-னாடி விளம்பரங்கள் டெல் டுகாவை அறிமுகப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளன - அவர் காத்லீன் வெய்னின் அமைச்சரவை அமைச்சராக இருந்தபோதும் பெரும்பாலும் அறியப்படாதவர் - மற்றும் அவரது சாதனையை வெளியிட்டார்.



கோடை மற்றும் வீழ்ச்சி பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக என்டிபி தலை-வர் ஆண்ட்ரியா ஹார்வத்தின் செய்தியைக் கொண்ட நேர்மறையான, நம்பிக்கையான விளம்பரங்களையும் என்டிபி இயக்குகிறது. அந்த விளம்பரங்கள், மக்களுடன் இணைந்து செயல்படுவதற்கு, அவர்களுக்கு எதிராகப் பதிலாக, மற்றும் வெட்டுவதற்குப் பதிலாக சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் பள்ளிகள் போன்றவற்றில் முதலீடு செய்யும் ஒரு அரசாங்கத்திற்கான எங்கள் ஹார்வத்தின் பார்வையை வைக்கின்றன.

# எழுத்தாளர் தம்பிஐயா தேவதாஸ் அவர்களுக்கு கனடாவில் "சமூக நற்பணி ஊடகவியலாளர்” பட்டம்

பிரபல இலங்கை எழுத்தாளரும் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஈழ தம்பிஐயா தேவதாஸ் அவர்களுக்கு கனடாவில் ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானம் “சமூக நற்பணி ஊடகவியலாளர்” பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.



தற்போது தனிப்பட்ட பயணமாக கனடாவிற்கு வந்துள்ள அவர் தனது குடும்பத்தினரோடு தங்கியிருந்து இங்குள்ள கலை இலக்கிய பத்திரிகை நண்பர்களை சந்தித்து வருகின்றார்கள். புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்பர்கள் பலர் அவரை சந்தித்தும் மகிழ்வித்தும் அன்பு பாராட்டி வருகின்றனர்.



இந்த வரிசையில் கனடா ஸ்ரீ ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாய-கர் தேவஸ்த்தானத்தின் ஸ்தாபகரும் பிரதம சிவாச்சாரியாரும் சமூக சேவையாளருமான சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள், எழுத்தாளர் தம்பிஐயா தேவதாஸ் அவர்களை தனது ஆலயத்திற்கு அழைத்து, ஏனைய சிவாச்சாரியார்கள் சகிதம் அவரைக் கௌவித்தார்கள்.

அன்றைய தினம் அவருக்கு பொன்னாடை போர்த்தி. அவரது பன்முக ஊடகப் பணி, ஆசிரியர் பணி, சமூகப் பணி ஆகியவற்றை எடுத்துரைத்து பின்னர் மேற்படி “சமூக நற்பணி ஊடகவியலாளர்” பட்டத்தையும் வழங்கினார்கள்.

# கனடா வாழ் சிவாகம கலாநிதி, சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்களுக்கு தமிழ்நாட்டில் வழங்கப்பெற்ற "வாழ்நாள் சாதனையாளர் விருது”



கனடா வாழ் சிவாச்சாரியப் பெருமகனார் சிவாகம கலாநிதி, சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சாரியார் (சுன்னாகம்) அவர்களுக்கு தமிழ்நாட்டில் வழங்கப்பெற்ற “வாழ்நாள் சாதனையாளர் விருது” கனடா இந்துப் பெருமக்களை மாத்திரமல்ல ஏனைய மதங்களைப் பின்பற்றும் பல அன்பர்களுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது.





இலங்கை சைவ சமய குரு மரபி-ல், கடந்த ஐந்து தசாப்தங்களாக சிவாச்சாரியர்களுக்கு, சைவ மக்களுக்கு வழிகாட்டியாக, ஆசா-னாக அகிலம் எங்கும் வழிகாட்டியபடி, பிரகாசிக்கும் (MHC-Modern Hindu Culture.Org) இந்து ஆகம நவீன கலை கலாச்சார நிறுவன ஸ்தா-பகர், சிவாகம கலாநிதி, சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சாரியார் (சுன்னாகம்) அவர்களுக்கு அண்மையில் தமிழகத்தில், சிவ-புரம் குளோபல் சிவாகம அக்கடமி சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தமை இலங்கை வாழ் அனைத்து இந்து, சைவ ,மக்களுக்கும், இலங்கை மற்றும் அனைத்துலக சிவாச்சாரியார்களுக்கும் கிடைத்த பெருமையாகும்.

இந்த விருது வழங்கும் வை-பவம் சிவபுரம் குளோபல் சிவாகம அக்கடமி சார்பில் தமிழ்நாட்டில் நடைபெற்றாலும், கனடாவில் இந்த சிறப்பு விருது வழங்கும் வைபவத்தை தனது ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடத்தினார். அன்றைய தினம் சிவாகம கலாநிதி, சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சாரியார் (சுன்னாகம்) அவர்களுக்கு ஆலயத்தின் அனைத்து சிவாச்சாரியப் பெருமக்களும் கூடி நிற்க,வரசித்தி வேதாகம பயிலும் இளம் மாணவர்கள் வேதபராயணத்தை உச்சரிக்க உயர்ந்து கௌவரம் வழங்கப்பெற்றது.

*இங்கு காணப்படும் படங்கள் அன்றைய தினம் எடுக்கப்பெற்றவையாகும்.*

**செய்தி: சத்தியன்**
**படங்கள்: ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானம்**

உதயன் கதிரோட்டம்

# அசல் 'கலாநிதி' ஒருவரை எம்மிடமிருந்து அநியாயமாகப் பறித்தானே எமன்!

கனடிய தமிழர் சமூகத்தின் தூண்களில் ஒன்று சில நாட்களுக்கு முன்னர் திடீரெனச் சரிந்தது. கொரோனா என்னும் கொடிய நோயின் தாக்கத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அனைவரும் முடங்கிப் போயிருந்த வேளையில் எமன் என்னும் கொடியவன் எப்படி நுழைந்தான் எங்கள் கோட்டைக்குள் என்று துயரத்தோடும் கோபத்தோடும் கேட்கத் தோன்றுகின்றது.

கனடிய தமிழ்ச் சமூகம் என்னும் கொட்டகையின் ஒரு தூணாகத் திகழ்ந்தவரை ஏன் நாம் இழக்க நேரிட்டது? அவர் எம்மை விட்டு நீங்கி தொலை தூரம் சென்றுவிட்டார் என்பதை நம்ப முடியாமல் இருக்கின்றது. இதுவரையில் எமக்கு ஊக்கியாக இருந்தவரை ஒருவன் தூக்கிச் சென்றுவிட்டானே என்பதை பொறுத்துக் கொள்ள முடியாமலும் தாங்கிக் கொள்ள முடியாமலும் அழுகின்ற ஆயிரம் ஆயிரம் இதயங்கள் எம்மைச் சுற்றி இருப்பதைக் காண்கின்றேம்.
உலகெங்கும் தரங்குன்றாத நண்பர்களைக் கொண்டிருந்த ஒரு தாராளவாதியை இழந்தவர்களாய் நண்பர்கள் பலர் அனைத்து நாடுகளிலிருந்தும் கனடாவைத் தொடர்பு கொண்ட வண்ணம் உள்ளார்கள்.

ஆமாம்! எம் மத்தியில் வாழ்ந்து வரலாறு படைத்திட்ட அசல் 'கலாநிதி' த. வசந்தகுமார் இயற்கையெய்தினார் என்ற செய்தி சில நாட்களுக்கு முன்னர் 'இடியோசை' போன்று எம் காதுகளில் வந்து விழுந்தது. என்ன அவசரம் இவருக்கு என்று ஏக்கத்துடன் நாம் அதிர்ச்சியுற்றவராய் அங்கலாய்த்தோம். எப்போதும் சிரித்தும் சிந்தித்தும் பொறுப்புடன் பணிகளை ஏற்று அவற்றை நிறைவேற்றும் ஒரு வெற்றியாளன் எப்படி கவர்ந்து சென்றவனிடம் தோல்வியுற்றார் என்ற கேள்விகள் எழுப்பியவர்கள் இன்னும் ஆயிரம் பேர்.
கனடாவில் வாழ்ந்தாலும் தமிழர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர்களோடு தொடர்புகளைப் பேணியவண்ணம் தங்கள் அனைவரும் கல்விச் செல்வத்தை தந்த கல்லூரியின் வளர்ச்சிக்காய் தன்னை அர்ப்பணித்த ஒரு 'அற்புதன்' கலாநிதி வசந்தகுமார் அவர்களின் இழப்பு இன்று உலகளவில் பலரை உருக்கிவிட்ட ஒன்றாய் அமைந்துவிட்டது.

ஒரு மின்சாரப் பொறியியலாளராய் பட்டம் பெற்று தாயகத்தில் பல உயர் பதவிகளை வகித்தும் பின்னர் கனடாவில் குடியேறி தன்னால் இயன்றளவில் கல்வித் தரத்தை அதிகரித்து அதே தொழில்நுட்ப, பொறியியல் கல்வியை மற்றவர்களுக்கும் ஊட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு கணணித் தொழில் நுட்பத்தை போதிக்கும் 'கொம்பியுரெக்' கல்லூரியை ஆரம்பித்து அதிலும் வெற்றி கண்டு சில வளாகங்களையும் நிறுவியவர் நெஞ்சுறுதி கொண்ட கலாநிதி வசந்தகுமார் அவர்கள்.
பல சமூக அமைப்புக்கள், ஊர்ச் சங்கங்கள், தொழிற் ஸ்தாபனங்கள், முன்னணி சேவை நிறுவனங்கள் என எமது சமூகம் சார்ந்த அனைத்து தளங்களிலும் தெளிந்த மனதோடு தோள் கொடுத்து உதவியவர்தான் நாம் பிரிந்து தவிக்கும் கலாநிதி வசந்தகுமார் அவர்கள். அவரது வாழ்வு எமக்கு ஒரு வரலாறாகட்டும், அவரிடம் நாம் கேட்டறிந்தவை சிறந்த பாடங்களாக எம் மனதில் பதியட்டும், அவரிடம் நாம் அவதானித்த நற்பண்புகள், எமக்கு வழிகாட்டும் நெறிகளாக அமையட்டும்.
அமரர் த. வசந்தகுமார் பற்றிய பல ஆக்கங்கள், இவ்வார 'உதயன்' பக்கங்களில், கனத்த இதயங்களினால் வடிக்கப்பெற்று வாசகர்களாகிய உங்கள் பார்வைக்காக படைக்கப்பெறுகின்றன.

அன்னாராது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், மேலும் அவரை இழந்து தவிக்கும் நண்பர்கள் அன்பர்கள் அனைவரோடும் எமது ஆறுதலைப் பகிர்ந்து கொள்கின்றோம்.


## 'உதயன்' 25வது ஆண்டு வெள்ளி விழாச் சிறப்பிதழ் 06 — 08 — 2021 வெள்ளிக்கிழமை மலர்கிறது

உங்கள் அபிமானத்திற்குரிய உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் எதிர்வரும் 06-08-2021 வெள்ளிக்கிழமை வெளிவருகின்றது. தமிழ் பேசும் நல்லுலக நாடுகளிலிருந்து சிறப்புக் கட்டுரைகள், இலக்கியப் படைப்புக்கள் வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றோடும் அதிக பக்கங்களோடும் வாசகர்களையும் வர்த்தக அன்பர்களையும் எழுத்தாள நண்பர்களையும் மகிழ்விக்க வருகின்றது 'உதயன்" வெள்ளி விழாச் சிறப்பிதழ். இந்த சிறப்பிதழில் தங்கள் படைப்புக்கள் இடம்பெற விரும்பும் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களை அனுப்பலாம். மேலும் தங்கள் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரித்து எமக்கு ஆதரவளிக்கவும் வாழ்த்தவும் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும். 416 732 1608 அல்லது 416 752 1524. Email: uthayannews@yahoo.com



பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


# பக்தர்கள் வேடத்தில் சென்று சிவசங்கர் பாபாவை கைது செய்த சென்னை போலீஸ்



செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கத்தில் சொகுசு பங்களா, கல்வி நிலையங்கள், கோயில், மசூதி என அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய வகையில் ஆசிரமம் நடத்திவருபவர் 72 வயதாகும் சிவசங்கர் பாபா. இவரின் இயற்பெயர் சிவசங்கரன். கையை உயர்த்தியபடி டான்ஸ் ஆடுவதே சிவசங்கர் பாபாவின் ஸ்டைல். அதனால் இவரை "டான்ஸ்" சாமியார் என்று பக்தர்கள் அழைப்பதுண்டு. மேலும் இவருக்கு இந்தியா முழுவதும் பக்தர்கள் இருக்கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டத்திலேயே குறைந்த கல்விக் கட்டணம் வசூலித்ததால், சிவசங்கர் பாபா நடத்திவந்த சுசீல் ஹரி இன்டர்நே'னல் பள்ளியில், பாபாவின் பக்தர்கள் உட்பட ஏராளமானவர்கள் தங்களின் குழந்தைகளைச் சேர்த்தனர். பாபாவின் பக்தர்கள்தான் இந்தப் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றிவந்தனர்.

சென்னை கே.கே.நகர், பி.எஸ்.பி.பி பள்ளியின் வணிகவியல் ஆசிரியர் ராஜகோபாலன் மீது மாணவிகள் பாலியல் குற்றச்சாட்டுகளைக் கூறியதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பான புகார்கள் வரத் தொடங்கின. அவற்றில் சிவசங்கர் பாபா நடத்திய சுசீல் ஹரி இன்டர்நே'னல் பள்ளியில் படித்த மாணவிகளும், சிவசங்கர் பாபா மீது பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். சிவசங்கர் பாபா "ஆசீர்வாதம்" என்ற பெயரில் தங்களுக்கு முத்தம் கொடுத்ததாகவும், தங்களைக் கட்டிப்பிடித்ததாகவும் குற்றம்சாட்டினர். இது தொடர்பாக மாமல்லபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மாணவிகள் சிலர் புகாரளித்தனர். அதன்பேரில் சிவசங்கர் பாபா, சுசீல் ஹரி இன்டர்நே'னல் பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மீது போக்சோ உள்ளிட்ட எட்டு பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி-க்கு மாற்ற டி.ஜி.பி திரிபாதி உத்தரவிட்டார். உடனடியாக சிவசங்கர் பாபா தொடர்பான வழக்கு ஆவணங்கள் சி.பி.சி.ஐ.டி போலீஸாரிடம் மாமல்லபுரம் அனைத்து மகளிர் போலீஸார் ஒப்படைத்தனர். விசாரணை அதிகாரிகளாக டி.எஸ்.பி குணவர்மன், இன்ஸ்பெக்டர் ஜெயசங்கர் ஆகியோரை நியமித்து டிஜிபி 'கில்அக்தர் உத்தரவிட்டார். எஸ்.பி விஜயகுமார் மேற்பார்வையில் சிவசங்கர் பாபாவின் வழக்கை போலீஸார் விசாரணை நடத்தினர். இந்த வழக்கை கடந்த 13-ம் தேதி கையில் எடுத்த டி.எஸ்.பி குணவர்மன், இன்ஸ்பெக்டர் ஜெயசங்கர் தலைமையிலான போலீஸார் சிவசங்கர் பாபாவிடம் விசாரணை நடத்த முடிவு செய்தனர். ஆனால், கேளம்பாக்கம் ஆசிரமத்தில் பாபா இல்லை என்ற தகவல் கிடைத்தது. உடனடியாக அவர் எங்கு சென்றிருக்கிறார் என்ற விவரத்தை போலீஸார் சேகரித்தனர். அப்போது சிவசங்கர் பாபா, உத்தரகாண்ட் மாநிலம், டேராடூனிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறும் தகவல் போலீஸாருக்குக் கிடைத்தது. உடனடியாக போலீஸார் விமானம் மூலம் அங்கு சென்றனர். மருத்துவமனைக்குச் சென்று விசாரித்தபோது சிவசங்கர் பாபா அங்கு இல்லை. சி.பி.சி.ஐ.டி போலீஸார் வருவதையறிந்த சிவசங்கர் பாபா தலைமறைவாகிவிட்டதால், அவரை வடமாநிலத்திலுள்ள தமிழக ஐ.பி.எஸ் அதிகாரிகள் மூலம் தேடத் தொடங்கினர். அப்போதுதான் சிவசங்கர் பாபாவுக்கு உதவிய ஒருவரின் தகவல் போலீஸாருக்குக் கிடைத்தது. அவரிடம் சிவசங்கர் பாபாவின் பக்தர்கள் என்று சி.பி.சி.ஐ.டி போலீஸார் கூறியதோடு, பாபாவை உடனடியாகச் சந்திக்க வேண்டும் என்ற விவரத்தையும் கூறினர்.

அதை உண்மையென நம்பிய சிவசங்கர் பாபாவுக்கு அடைக்கலம் கொடுத்தவர், பாபாவைச் சந்திக்க டெல்லியில் ஏற்பாடு செய்தார். சிவசங்கர் பாபா,டெல்லியிலுள்ள சித்தரஞ்சன் பூங்கா அருகில் உள்ள விடுதியில் தங்கியிருக்கும் தகவல் தெரிந்ததும், டி.எஸ்.பி குணவர்மன் தலைமையிலான போலீஸார் அங்கு சென்றனர். அப்போது பக்தர்கள் வேடத்தில் சென்ற போலீஸார் முதலில் சிவசங்கர் பாபாவைச் சந்தித்தனர். அடுத்த சில நிமிடங்களில் டி.எஸ்.பி குணவர்மன் தலைமையிலான போலீஸார் அங்கு சென்று பாபாவிடம் விவரத்தைக் கூறினர். விடுதிக்குள் பக்தர் வேடத்தில் போலீஸார் வந்தது அப்போதுதான் பாபாவின் டெல்லி பக்தருக்குத் தெரியவந்தது. போலீஸாரைப் பார்த்ததும் சிவசங்கர் பாபா அதிர்ச்சியடைந்தார். பின்னர் அவரை போலீஸார் டெல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, சென்னைக்கு விமானம் மூலம் நேற்றிரவு அழைத்துவந்தனர்.

கனடிய செய்திகள் Canadian News

# எங்கள் "வசந்தம்" ஓய்வு பெற்றது

**- சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் (கனடா)**



"வசந்தன்" என நாம் அனைவரும் அன்போடு அழைக்கும் எங்கள் அற்புதமான அன்பர் கலாநிதி வசந்தகுமார் காலமானார் என்ற செய்திகேட்டு என் இதயன் ஒரு தடவை நின்று போனது. தமிழ்ர் சமூகத்தின் வழிகாட்டியாகவும், கல்வி மேம்பாட்டாளராகவும். பிரதான செயலூக்கியாகவும் விளங்கிய எங்கள் "வசந்தன்" எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு ஓய்வு பெற்றார்.

நெருநல் உளளொருவன் இனறில்லை என்றும் பெருமையுடைத்து இவ்வுலகு என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளிற்கு இணங்க அவர் இல்லை என்பதை எமது மனது ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

வசந்தன் எனக்கொரு அரிய நண்பராக விளங்கினார். அவர் உருவாக்கிய "கொம்பியுரெக்" கல்லூரியுடன் நான் பல தடவைகள் தொடர்பு கொண்டதன் மூலம் கிடைத்த நட்பு இறுதிவரை நீடித்தது. இன்று அந்த நட்பு என்னோடு தங்கியிருக்கின்றது. ஆனால் வசந்தன் என்ற நல்லுள்ளம் நீண்ட தூரம் போய்விட்டது.

புலம்பெயர்ந்து வந்த தமிழ் இளையோர்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கியவர் வசந்தகுமார் அவர்கள். கொன்பியுரெக் கல்லூரியின் வளாகங்கள் சிலவற்றை நிறுவி, எமது இளையோருக்கு கணணி அறிவினை ஊட்டியவர். அவர் ஒரு சமூக செயற்பாட்டாளர் மட்டுமல்ல, எமது சமூகத்தின் கல்விக் கண்களாக விளங்கியவர். இதனால் எமது இளையோர்கள் தொழில் வாய்ப்பு பெற்று கணணித்துறையில் முன்னேற்றங்களைக் காண அவர் தனது முழுக்கவனத்தையும் மூலதனமாக்கி பாடுபட்டார்.

இலங்கையின் வட பகுதியில் உள்ள உடுப்பிட்டி கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட வசந்தகுமார் அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் உயர் கல்லூரியில் கல்வி கற்று வரும் காலத்தில் கல்வியில் மட்டுமல்ல சிறந்த மாணவர் தலைவராகவும் சாரணர் இயக்கத்தின் தீவி-ரமான உறுப்பினராகவும் விளங்கினார்.
தனது கல்வியில் கவனஞ் செலுத்திய காரணத்தால், இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்திற்கு அனுமதி பெற்று அங்கு மின்பொறியியலாளராகப் பட்டம் பெற்று வெளியேறினார்.

தொடர்ந்து இலங்கை மின்சார சபையில் மாவட்ட பொறியியலாளர் தரம் வரையில் உயர்வு பெற்று விளங்கினார். கனடாவிற்கு வந்த பின்னர் யோர்க் பல்கலைக் கழகத்திலும் விரிவுரையாளரானார்.

கனடாவில் அவர் சமூக சேவைக்கு உதாரணமாக விளங்கி வருவது "சேக்கம்" என்னும் சேவை வழங்கும் அமைப்பாகும். இந்த அமைப்பை ஆரம்பித்து அதனை வளரச் செய்வதில் வசந்தகுமார் அவர்கள் ஏனைய இயக்குனர் சபை உறுப்பினர்களோடு கடுமையாக உழைத்தார். பல ஆண்டுகள் "சேக்கம்" அமைப்பின் தலைவராகவும் கடமையாற்றிய வசந்தன் அதன் மூலம் பல சமூகப் பணிகளைச் செய்தார்.

வசந்தகுமார் அவர்களது முக்கிய சமூகப் பணிகளில் ஒன்று அவர் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தோடு இணைந்து பணியாற்றியதோடு மட்டுமன்றி, அதன் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தார். ஆலோசனைகளை வழங்குவது மட்டுமன்றி, தனது நிதிப்பங்களிப்புக்களையும் வழங்கியுள்ளார்.

மேற்படி கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தற்போதைய தலைவர் திரு. சாந்தா பஞ்சலிங்கம் மறைந்த வசந்தகுமார் தொடர்பாக பின்வருமாறு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கின்றார்.

"நான் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பெற்ற நாட்தொடக்கம் எனக்கும் எமது சம்மேளனத்திற்கும் ஒரு விசுவாசமிக்க நண்பராகவும் ஆதரவாளராகவும் விளங்கியவர் மறைந்த திரு. வசந்தகுமார் அவர்கள். எனது சகல முயற்சிகளுக்கும் உறுது-ணையாக இருந்து என்னால் பலவற்றை சாதிக்கக் கூடிய வகையில் ஆலோசனைகள் வழங்கி நின்றார் அவர். தற்போது எமது சம்மேளனம் சொந்தமாகக் கொள்வனவு செய்துள்ள கட்டடத்தின் முழு அம்சங்களிலும் அவருடைய பங்களிப்பு இருந்தது என்பதை மிகுந்த பெருமையோடு கூறிக்கொள்கின்றேன்" என்றார்.

எமது சமூகத்தில் பலரது அரசியல் பிரவேசத்தின் போது அவர்களுக்கு அருகில் எந்நேரமும் இருந்த வண்ணம், ஆலோசனைகளை வழங்கி நின்றவர் எங்கள் "வசந்தன்" அவர்கள். இவ்வாறு எமது சமூகத்தின் அனைத்து பிரிவுகளிலும் முன்னின்று உழைத்து தனி நபர்களைக் கூட உயரத்திற்குக் கொண்டு சென்ற பெருமைக்குரியவர் எங்கள் வசந்தன் அவர்கள் என்றால் அது மிகையாகாது.


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

**உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள் அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்**

### பெண்களுக்கு வேலைவாய்ப்பு

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் உடனடியாக வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

தயவு செய்து பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு: ஜெயா
647 669 2739
**(647) 669-2739**

### Basement for Rent

**Oshawa** பல்கலைக் கழகத்திலிருந்து 7 நிமிடத்தில் அடையக் கூடிய வீடொன்றின் 2 அறைகள் கொண்ட **basement** உடனடியாக வாடகைக்கு உண்டு.
வாடகை பேசித் தீர்க்கலாம்.

*Call:* **647-853-9891**

### உணவக வேலை வாய்ப்பு

**Srilankan Cooks, Indian Tandoori Curry Cooks**
ஆகியவற்றுக்கு ஆட்கள் தேவை.
**Full-time and Part-time.**

அத்துடன் **Kitchen Helper, Dishwasher - Part-time.**

இரண்டு இடங்களுக்கு:
**Markham & Scarborough Locations.**
**தொடர்புகளுக்கு: AMAR**
**(416) 988-9518**

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
**(416) 894-6244**

### VACANCY FOR BOOK KEEPER

(Part Time)
ஸ்காபுறோவில் தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் வர்த்தக நிறுவனத்திற்கு பகுதி நேர *BOOK KEEPER* ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் **QUICK BOOKS** இல் வேலை செய்யும் ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
தொடர்புகளுக்கு:-
**416 543 8170**

### வேலை வாய்ப்பு

**COOK WANTED**
**Full-time**
**Whitby** நகரில் **Brock & Hwy** 401 சந்திக்கு அருகில் அமைந்துள்ள **Sunset Grill Restaurant** உணவகத்திற்கு **Full-time cook** தேவைப்படுகின்றனர். ஆர்வம் மற்றும் ஓரளவு அனுபவம் உள்ளவர்கள் காலை 7:30 தொடக்கம் பிற்பகல் 1:00 மணி வரை அழைக்கவும்.

**SAM: (905) 665-0030**




### Help Wanted

**Full-time / Part-time sprayer & sander needed for a furniture finishing shop.**

**Call:**
**(416) 636-3655**

### உடனடி வேலை வாய்ப்பு

**Scarborough** வில்
**Markham & Ellesmere** க்கு அருகில்
**Warehouse Workers and Forklift Driver** தேவைப்படுகின்றனர்.
**Full-time -- Morning Shifts**
- **Looking for Skid Workers and Forklift Driver to add to our team.**
- **We are looking for hard-working and dedicated people for a long.**

**தொடர்புகளுக்கு: ESSAN**
**(647) 993-2872**

கனடிய செய்திகள்
Canadian News

# தாக்கம் அதிகம் உள்ள டெல்றா கிருமி தொற்று அதிகமாக உள்ள பிரதேசங்களில் இரண்டாவதுமுறை தடுப்பூசியை துரிதப்படுத்த ஒன்றாரியோ அரசு முடிவு

தாக்கம் அதிகம் உள்ள டெல்றா கிருமி தொற்று தாக்கம் அதிகமாக உள்ள பிரதேசங்களில் இரண்டாவது முறை தடுப்பூசியை துரிதப்படுத்த ஒன்றாரியோ அரசு முடிவு செய்துள்ளதாக ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அறிவித்துள்ளார்

**COVID-19** இன் அடுத்த படியாக தோன்றியுள்ள தொற்றான டெல்றா கிருமியின் தாக்கம் அதிகமாக உள்ள மேலும் மூன்று பிரதேசங்களை ஒன்றாரியோ முதல்வர் அறிவித்துள்ளார். - ஹாமில்டன், டுர்ஹாம் மற்றும் சிம்கோ-முஸ்கோகா - ஒன்றாறியோ ஆகியவையே இந்த பிரதேசங்களாகும். அங்கு இரண்டாவது முறை பெறக் கூடிய மக்கள் ஃபைசர் மற்றும் மாடர்னா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு தற்போது தடுப்பூசிகள் மேற்படி பிரதேசங்களில் அதிகளவு வைத்துக்கொள்ளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது இவ்வாறிருக்க, ரொறன்ரோ மற்றும் பீல் போன்ற பகுதிகளில் முன்னர் அதிக தாக்கம் நிறைந்த டெல்றா கிருமி பீடித்த மண்டலங்களாக அறிவிக்கப்பட்டிருந்தன. ”டெல்றா கிருமியின் அதிக பாதிப்பு உள்ள 10 பொது சுகாதார பிரிவுகள் மூலம், பொது சுகாதார பிரிவுகளுக்கு என்ன தேவை என்பதை அவர்கள் உறுதிசெய்வதற்கான எங்கள் வளங்களையும் முயற்சிகளையும் நாங்கள் பயன்படுத்த தயா-ராக உள்ளோம் என்று முதல்வர் டக்போர்ட் அறிவித்துள்ளார்,”

இந்நிலையில் ஒன்றாரியோ மாகாண சுகா-தார அமைச்சர் கிறிஸ்டின் எலி-யட் இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் அதிக தடுப்பூசிகளுக்காக அரசாங்கம் விடுத்த கோரிக்கையை ஒப்புக் கொண்டார், “மேலும் எமது அரசாங்கம் சுகாதார பிரிவுகளுடன் இணைந்து செயல்படுகின்றன. மக்கள் அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை, அதனால் அவர்கள் திரும்பி வந்து பல முறை அலைய வேண்டியதில்லை” என்று உறுதி செய்தார் அமைச்சர்.



## MPP Logan Kanapathi hosts Virtual Education Roundtable with Minister of Education Stephen Lecce

# ஒன்றாரியோ எம்.பி.பி லோகன் கணபதி கல்வி அமைச்சருடன் இணைந்து நடத்திய பயனள்ள கலந்துரையாடல்

ஜூன் 15 கடந்த செவ்வாய்கிழமையன்று அன்று, தமிழ் பேசும் ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் திரு லோ-கன் கணபதி ஒன்றாறியோவின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெக்சேயுடன் இணைந்து கல்வித்திட்டம் சார்ந்த கலந்துரையாடலை இணைய வழி ஊடாக நடத்தினார்.

மேற்படி கலந்துரையாடலில், 80 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், ஆகியோருடன் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டபோது அங்கு யோர்க் பிராந்தியத்தில் இருந்து ஒன்றாறியோ அரசாங்கம் கல்வி ஆண்டுக்கு மேற்கொண்டுள்ள மாற்றங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பெற்றது.




அங்கு தொடர்ந்து உரையாற்றிய எம்பிபி லோகன் கணபர் அவர்கள் “2021-22 ஆண்டின் எஞ்சிய பகுதிக்கு ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் செப்டம்பரில் மீண்டும் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட் -19 தொற்றானது மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விதிவிலக்காக சவாலான நேரத்தை வழங்கியுள்ளது என்பதை ஒன்றாறியோ அரசாங்கம் புரிந்துகொள்கிறது.

”ஒரு வலுவான பொதுக் கல்வி முறையைக் கொண்ட ஒரு நாட்டில் வாழ்வதற்கு நாங்கள் கொடுத்து வைத்தவர்கள், இந்த அரசாங்கத்தின் முக்கிய கவனம், கனடாவில் மட்டுமல்லாமல், உலகெங்கிலும், கோவிட் சவால்களை மீறி, இந்த மாகாணம் கல்வியில் மேன்மையுற்று இருப்பதை உறுதி செய்து வருகிறது. 19 ” என்றார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லேச்சே அவர்கள் பின்வருமாறு தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். “வரவிருக்கும் கல்வி ஆண்டுக்கான ஒன்றாறியோ அரசாங்கத்தின் முன் முயற்சிகளின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு அமையும் குறிப்பாக மாகாணத்தில் தரம் 9 இற்கு உரிய கணித பாடத்திட்டம் புதுப்பிக்கப்படவுள்ளது

எமது அமைச்சின் நோக்கம் எதுவென்றால், நிதி எழுத்தறிவு, குறியீட்டு முறை மற்றும் தரவு எழுத்தறிவு ஆகியவற்றில் வலுவான கவனம் செலுத்தி, நிஜ வாழ்க்கை சூழ்நிலைகளில் கணிதத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை மாணவர்களுக்குக் காண்பிப்பதற்காக தரம் 9 கணித பாடத்திட்டம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது

.எமது ஒன்றாரியோ மாகாணத்தின் நான்கு ஆண்டு, 200 மில்லியன் டாலர்கள் செலவில் கணித பாடத்திற்குரிய புதிய பாடத்திட்டம் தயாராகின்றது இதில் புதிய கணிதத்தை மையமாகக் கொண்ட கற்றல் ஆதரவு மாணவர்கள் எதிர்காலத்தில் வெற்றிபெற முக்கியமான வாழ்க்கை மற்றும் வேலை திறன்களைக் கற்றுக்கொள்வார்கள். இதற்காக தகுதியான ஆசிரியர்கள் பாடசாலைகளில் பணிக்கு அமர்த்தப்படுவார்கள்

எமது பாடத்திட்டம் கடைசியாக 2005 இல் புதுப்பிக்கப்பட்டது, முந்தைய பாடத்திட்டம் பல மாணவர்களை கடுமையாக பாதித்தது, குறிப்பாக, கருப்பு, பழங்குடி, இன, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் சிறப்பு கல்வி மாணவர்கள் இந்த பாடத்திட்டத்தின் மூலம் தகுந்த பலனைப் பெற முடியவில்லை.

குறிப்பாக பிரெஞ்சு மொழியில் கற்கும் மாணவர்களுக்கு, தரம் 1-12 முதல், **Eureka by TFO** என்ற புதிய திட்டம் கணிதத்திற்கான ஆங்கிலத்தில் பயிற்சி பெறும் வகையில் விரிவடைந்துள்ளது.

-மேலும் 6-10 வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு, கணிதம் வார இறுதி மற்றும் மாலை உள்ளிட்ட கூடுதல் வகுப்புக்களை நடத்துவதன் மூலம் மேலதிக கணித அறிவை மாணவர்களுக்கு ஊட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலதிக வகுப்புக்களில் அங்கு மாணவர்கள் ஒருவருக்கொருவர் ஆசிரியர் ஆதரவைப் பெறலாம் மற்றும் சிறிய கற்றல் குழுக்களை அமைப்பதன் மூலமும் மாணவர்கள் அதிக பயன் பெறும் வாய்ப்பு உண்டாகும்” என்றார்

தொடர்ந்து பெற்றோர், மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோ-ரின் கேள்விகளுக்கு கல்வி அமைச்சர் தகுந்து பதில்களை அளித்தார்.

இந்தியா செய்திகள்
India News

# கொரோனாவுக்கு மற்றொரு நடிகர் பலி

தொரட்டி பட நாயகன் ஷமன்மித்ரு இன்று காலை 6 மணிக்கு இயற்கை எய்தினார் கொரோனா தொற்று காரணமாக கடந்த ஒரு மாத காலமாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்தவர் இன்று குரோம்பேட்டை நிலா மருத்துவமனையில் சிகிச்சை பலன் இன்றி காலமானார், அவருக்கு வயது 43, சென்னை திரைப்பட கல்லூரியில் படித்து தங்க பதக்கம் வென்ற மாணவரான அவர் தமிழ், தெலுங்கு, கன்னட படங்களுக்கு





ஒளிப்பதிவாளராக பணியாற்றி வந்தாலும் தன்னை முழுமையாக அடையாளப்படுத்தி கொள்ள தொரட்டி படத்தை தயாரித்து கதாநா-யகனாக நடித்து வெற்றி பெற்றவர் அடுத்த படத்திற்கான வேலைகளை துவங்கிய நேரத்தில் மரணமடைந்தது வருத்தத்திற்குரியது. அவருக்கு சகுந்தலா என்ற மனைவியும், மோக்ஷா என்று 5 வயதில் பெண் குழந்தையும் உள்ளனர். சொந்த ஊர் காரைக்குடி, சிங்கம்புணரி.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ்நாட்டில் உண்ணாவிரதமிருக்கும் தமிழர்கள் தொடர்பாக செல்வம் அடைக்கலநாதன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அவசர கடிதம்



முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கெண்டும், திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் தங்களது விடுதலை தொடர்பாக சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் சிறைக்கைதிகளின் விடுதலை குறித்தும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்றைய தினம் திங்கட்கிழமை (14) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

- குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை வாழ் தமிழ் மக்கள் அயல் நாடாம் இந்திய தாய் திரு நாட்டில் அடைக்கலம் புகுந்த வேலையில் இது வரை காலமும் ஆற்றி வந்த அளப்பரிய நன்மைகளை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

- மேலும் கொரோனா தொற்றை கருத்தில் கொண்டு முகாம்களில் வாழும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் சிரமங்களையும் கஸ்டங்களையும் தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வந்து அதற்கான தீர்க்கமான சாத்திகமான முடிவுகளை எடுக்குமாறு தங்களை வேண்டி நிற்கின்றேன்.

அத்தோடு இந்த குடும்பங்களின் ஒரு சில குடும்ப தலைவர்கள் திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களது குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து தங்கள் வாழ்க்கையினை முன்னெடுக்க எதிர் பார்த்துள்ளனர்.

முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கெண்டும், திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் தங்களது விடுதலை தொடர்பாக சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் இவர்களுடைய மன ஆதங்கத்தை கருத்தில் கொண்டு இவர்களுடைய விடுதலைக்காகவும் மேலான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் எனவும் நான் நம்புகிறேன்.என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**- மன்னார் நிருபர் (14-06-2021)**

# மன்னார் – வங்காலை கடற்கரையோரங்களில் கரையொதுங்கும் இந்திய மருத்துவ கழிவுப் பொருட்கள்





நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வங்காலை கடற்கரை ஓரங்களில் வியாழக்கிழமை (17) காலை மருத்துவ பொருட்கள் சில கரை ஒதுங்கிய நிலையில் அப்பகுதி மீனவர்கள் அதனை சேகரித்ததோடு உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த கடற்கரையோரங்களில் கிரீம்கள், ட்யூப்கள், மாத்திரை பைக்கற்றுகள், பாவிக்கப்பட்ட ஊசிகள் போன்றவற்றை அவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

**- மன்னார் நிருபர் (17-06-2021)**

# இலங்கையில் கொரோனா தடுப்பூசிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்யும் "விசமிகள்"

**- கொழும்பிலிருந்து கௌதமன்**



கொரோனா என்னும் கொடிய நோயைக் கொண்டு வந்த கொவிட்-19 கிருமியானது முழு உலகிலும் மனித சமூகம் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. உலகின் வறிய மற்றும் செல்வந்த நாடுகளை வித்தியாசமின்ற பாதித்த "பெருமை" கோவிட்-19 இற்கே உண்டு என்றால் அது மிகையாகாது. இவ்வாறு ஆரோக்கிய ரீதியாக மாத்திரமல்லாமல் சமூக, பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பாதிப்புகளும் தாக்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு வளர்முக நாடுகள் மாத்திரமல்லாமல், வளர்ந்த நாடுகளும் கூட முகம் கொடுத்துள்ளன.

இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தலினால் மக்களின் இயல்பு வாழ்வே முடங்கிப் போயுள்ளது. மனிதனின் இயல்பு வாழ்வை முடக்கி அவனது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள கொடிய நோய்த் தொற்றாக இத்தொற்று விளங்குகின்றது. உலக வரலாற்றில் தோற்றம் பெற்ற புதிய நோய்த் தொற்றாக இத்தொற்று விளங்குவதால் இதற்கென மருந்துகளோ தடுப்பு மருந்துகளோ ஏற்கனவே புழக்கத்தில் இருக்கவில்லை.

இந்நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம், இத்தொற்றின் தாக்கம், பாதிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தி இதனைக் கட்டுப்படுத்துவதற்காகத் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து உலகிற்கு அறிமுகப்படுத்துமாறு கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் வேண்டுகோள் விடுத்தது.

அதற்கேற்ப உலகின் பல நாடுகளும் நிறுவனங்களும் முயற்சி செய்து தடுப்பு மருந்துகளை கண்டுபிடித்து உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளன. அந்த வகையில் நோயொன்று தோற்றம் பெற்ற குறுகிய காலப் பகுதிக்குள் தடுப்பூசி கண்டுப்பிடிக்கப்பட்ட தொற்றாகவும் கொவிட்-19 தொற்று விளங்கிக் கொண்டிருக்கின்றது. 2020 டிசம்பர் 08 ஆம் திகதி பிரித்தானியா, தன் பிரஜைகளுக்கு இத்தொற்று கட்டுப்பாட்டுக்கான தடுப்பூசியை உத்தியோகபூர்வமாக வழங்கத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து இத்தொற்றுக்கு எதிராக தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை உலகின் பல நாடுகளிலும் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் 2021 ஜுன் 10 ஆம் திகதி வரையும் முழு உலகிலும் 93 கோடி 20 இலட்சம் பேருக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இது உலக சனத்தொகையில் 12 வீதமாகும். இதன்படி, இஸ்ரேல் 63.1 வீதமானோருக்கும், கனடா 62.7 வீதமானோருக்கும், பிரித்தானியா 62.7 வீதமானோருக்கும், அமெரிக்கா 51.4 வீதமானோருக்கும் என்றபடி தத்தம் நாடுகளது சனத்தொகையில் அதிகளவானோருக்கு இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுத்துள்ளன. ஏனைய நாடுகள் தத்தம் பிரஜைகளுக்கு இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுத்துள்ள மட்டம் குறைந்தளவில் காணப்படுகின்றது. இதற்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் உள்ள தாமதங்களே பிரதான காரணமாகும்.

இத்தடுப்பூசியை அதிகளவிலான சனத்தொகையினருக்கு பெற்றுக் கொடுத்ததன் விளைவாக மக்கள் முகக்கவசம் அணியத் தேவையில்லை என்று இஸ்ரேல் அறிவித்திருக்கின்றது. அதேபோன்று இத்தொற்றின் ஆரம்ப அலைகளின் போது பெரிதும் பாதிக்கப்பட்ட அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளும் அந்த பாதிப்புகளிலிருந்து மீட்சி பெறத் தொடங்கியுள்ளன.

தற்போதைய சூழலில் கொவிட்-19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசியே சிறந்த தீர்வு என உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றது. அந்த வகையில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்'வும் இத்தொற்றின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசியே சிறந்த தீர்வு எனக் குறிப்பிட்டு நாட்டு மக்களுக்கு இத்தடுப்பூசியை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளார்.

இந்த நிலையில் இந்நாட்டு சனத்தொகையில் 12 வீதமானோருக்கு இற்றை வரையும் இத்தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் இத்தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளதோடு, இவ்வருட முடிவுக்குள் சனத்தொகையில் 60 வீதத்தினருக்கும் மேற்பட்டோருக்கு அதனைப் பெற்றுக் கொடுக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் இத்தடுப்பூசிக்கு எதிராக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி பிழையான தகவல்களைப் பரப்பும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். தடுப்பூசி தொடர்பில் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி, கொவிட்-19 தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசி பெற்றுக் கொள்வதைத் தவிர்க்கும் நோக்கிலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதன் ஊடாக இத்தொற்றின் பரவுதலுக்கும் அதன் விளைவான பாதிப்புகளுக்கும் பங்களிக்கவே முயற்சிக்கப்படுகின்றது என்பதில் ஐயமில்லை.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி இத்தடுப்பூசி தொடர்பில் பிழையானதும் தவறானதுமான பார்வையையும் அச்சத்தையும் ஏற்படுத்த முயற்சிப்பவர்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். அதேநேரம் இச்செயலில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தவறக் கூடாது. இத்தொற்றுக்கு எதிரான இத்தடுப்பூசியை நாட்டு சனத்தொகையில் பெரும் பகுதியினருக்கு பெற்றுக் கொடுத்ததன் பயனாக இஸ்ரேல் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்து விடலாகாது. ஆகவே கோவிட்-19 தொற்று என்பது இலங்கையிலிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும் என்பதில் முழு இலங்கையர்களுக்கும் கருத்து வேற்றுமை இருக்கக் கூடாது. எனவே தடுப்பூசியின் மூலமாக மட்டுமே இது சாத்தியமாகும். அவ்வாறிருக்கும் போது இவ்வாறான போலி பிரசாரங்களை நிராகரித்துவிட்டு இத்தொற்றுக்கு எதிரான இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் அதிக கவனம் செலுத்துவதே அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு விடயமாகும். அதுவே கொவிட் 19 தொற்று தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த தீர்வாகும்.

# ஐரோப்பிய நாடாளுமன்ற தீர்மானத்தால் கடும் நெருக்கடியில் இலங்கை



- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் இலங்கை ஐரோப்பிய சந்தைக்கான வரிச்சலுகை மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட அளிக்கப்படும் உதவி ஆகியவற்றை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்குகிறது.

தீவு நாடான இலங்கை மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க ஐரோப்பிய நாடாளுமன்றம் பரிந்துரை செய்துள்ளது. இது தொடர்பிலான விவாதம் ஸ்ட்ராஸ்பர்கிலுள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை (10) பின்னிரவு வரை நடைபெற்று பின்னர் வாக்களிப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் ராஜபக்ச அரசாங்கம் அதற்கு முந்தைய ஆட்சி கொடுத்த வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கியதும் அங்கு தொடர்ச்சியாக சீரழிந்து வரும் மனித உரிமைகளின் பின்னணியிலும் ஐரோப்பிய நாடாளுமன்றம் இந்த தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

வியாழக்கிழமை இரவு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையில் தற்போது நிலவும் சூழல் குறித்து விரிவாகப் பேசுகிறது. அதிலும் குறிப்பாக கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இடம்பெறும் தன்னிச்சையான கைதுகள் குறிப்பாக விவாதிக்கப்பட்டு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கை ஏற்றுமதி ஆயத்த ஆடைகளுக்கான ஜிஎஸ்பி+ வரிச்சலுகையை ஐரோப்பிய ஆணையம் இடைநிறுத்த வேண்டும் என்று இந்த தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மீளாய்வுக்கு வருகிறது ஜிஎஸ்பி+

இது தொடர்பில் ஐரோப்பிய ஆணையம் மதிப்பீடு ஒன்றை செய்ய வேண்டும் என்றும், அதில் மனித உரிமை கடப்பாடுகள் மதிக்கப்படவில்லை என்று தெரிந்தால், அந்தச் சலுகை இடைநிறுத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தீர்மானம் கூறுகிறது.



எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையின் ஜிஎஸ்பி+ வரிச்சலுகை மீதான மதிப்பீடு ஐரோப்பிய ஒன்றியத்தால் முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த சமயத்தில் இந்தச் சலுகைக்கு மிக முக்கியமான ஒரு நிபந்தனையான மனித உரிமைகள் குறித்த கடப்பாடும் அதை நடைமுறைப்படுத்தலும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

நீடித்திருக்கக் கூடிய வளர்ச்சி மற்றும் நல்லாட்சிக்கான ஒரு சிறப்புச் சலுகையாக ஜிஎஸ்பி+ வழங்கப்படுகிறது. பலவீனமாக இருக்கும் நிலையிலும், குறைந்த மற்றும் மத்தியத்தர வருவாய் கொண்ட பலவீனமான நாடுகள் ஆகியவை மேம்பாட்டைக் காணும் வகையில், சில நிபந்தனைகளுடன் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. இறக்குமதி வரிகள் நீக்கப்படுவதன் மூலம் ஐரோப்பிய நாடுகளின் சந்தையைச் சுலபமாக அணுக முடியும்.

ஜிஎஸ்பி+ சலுகையைப் பெற சில நிபந்தனைகள் உள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக கொள்கையின் அடிப்படையில், இந்தச் சலுகையைக் கோரிப் பெறுபவர்கள் "மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பில் 27 சர்வதேச கடப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்".



| TABLE 1: APPLICABLE TARIFFS FOR SRI LANKA'S MAIN APPAREL EXPORTS TO EU | | | |
|---|---|---|---|
| Product Code | Product Description | GSP | GSP+ |
| 610910 | T-shirts, singlets and other vests, of cotton, knitted | 9.6% | 0.0% |
| 621210 | Brassieres and parts thereof, of textile materials | 6.2% | 0.0% |
| 620342 | Men's/boys' trousers and shorts, of cotton, not knitted | 9.6% | 0.0% |
| 620469 | Women's/girls' trousers and shorts, of other textile materials, not knitted | 9.6% | 0.0% |
| 610821 | Women's/girls' briefs and panties, of cotton, knitted | 9.6% | 0.0% |
| 620462 | Women's/girls' trousers and shorts, of cotton, knitted | 9.6% | 0.0% |
| 610990 | T-shirts, singlets and other vests, of other textile materials, knitted | 9.6% | 0.0% |
| 610711 | Men's/boys' underpants and briefs, of cotton, knitted | 9.6% | 0.0% |
| 610829 | Women's/girls' briefs and panties, of other textile materials, knitted | 9.6% | 0.0% |

இலங்கையில் மனித உரிமைகள் மிகவும் சீரழிந்து வருகின்றன என்பதற்கு அப்பாற்பட்டு தாங்கள் இலங்கையில், "சமூக செயற்பாட்டாளர்களுக்கான பொதுவெளி குறைந்துவருவது, தன்னிச்சையான கைதுகள், உரிய வழிமுறையின்றி தடுத்து வைக்கப்படுதல், சிறுபான்மையினர் இலக்கு வைக்கப்படுவது மற்றும் அரச நிர்வாகம் அதிகரித்த அளவில் இராணுவ மயமாக்கப்படுதல்" ஆகியவை குறித்தும் தாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக ஐரோப்பிய நாடாளுமன்ற தீர்மானம் கூறுகிறது.

"இலங்கை கொடுத்த வாக்கை மீறியது"

வியாழக்கிழமை (10) பின்னிரவு வரை நடைபெற்ற அந்த சிறப்பு அமர்வில் உரையாற்றிய சமத்துவத்திற்கான ஐரோப்பிய ஆணையர் ஹெலினா டாலி அம்மையார் கடந்த 2017ல் இலங்கை ஜிஎஸ்பி சலுகையை மீண்டும் கோரிய போது, சர்வதேச அளவுகோல்களுக்கமைய பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்படும் என்று இலங்கை உறுதியளித்துள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

"அரசியல் யாப்பில் அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்புகள் விலக்கப்படுவது, பொறுப்புக்கூறல் இல்லாத தன்மை, மக்கள் புறக்கணிக்கப்படவேண்டும் எனும் கருத்துக்கள், சிவில் சமூகம் புறக்கணிக்கப்படுவது, செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள் என்று பலர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவது ஆகியவற்றை நாங்கள் காண்கிறோம்" என்றார் ஹெலினா டாலி.

மனித உரிமைகள் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் கவிஞர் அஹ்னாஃப் ஜஸீம் ஆகியோரின் விடுதலைக்காகவும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்துள்ளனர். அவர்கள் நியாயமற்ற முறையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ள அவர்கள், சட்ட மா அதிபர் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் பிணைக்குத் தகுதியானவர்களுக்கு அது அளிக்கப்பட வேண்டும் என்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அர்த்தபூர்வமான வகையில் தமது சட்டத்தரணிகள் மற்றும் குடும்பத்தாரை சந்திக்கவும், முன்னறிவிப்பின்றி இலங்கை மனித உரிமைகள் ஆணையம் அவர்களைச் சென்று சந்திக்க வழி ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

"பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட கைது செய்யப்பட்டுள்ள செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள் ஆகியோர் நியாயமான வகையில் வழக்கு விசாரணையை எதிர்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் அல்லது நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும்" என்றும் ஐரோப்பிய நாடாளுமன்றம் வலியுறுத்தியுள்ளது.

சிறுபான்மையினரை பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி துன்புறுத்துவதால், தீவிரவாதத்தை எதிர்த்துப் போராட இலங்கைக்கு கிடைக்கும் உதவிகளும் நிறுத்தப்படும் அபாயமும் உள்ளது.

நிதியுதவிகள் நிறுத்தப்படும்

இலங்கையில் பயங்கரவாதத்திற்கு எதிரான செயல்பாடுகளில் உதவி வரும் ஐ நாவின் போதைப் பொருட்கள் மற்றும் குற்றங்களைத் தடுக்கும் அலுவலகம் மற்றும் பன்னாட்டு பொலிஸ் அமைப்பான இண்டர்போல் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் நிதியுதவிகளை மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற தீர்மானம் கேட்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்று கூறி இன மற்றும் மொழி சிறுபான்மையின குழுக்கள், சிவில் சமூகம், மனித உரிமை காப்பாளர்கள் ஆகியோர் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும் அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றைச் செய்தவர்களை மீதான விசாரணை மற்றும் நீதியின் முன்னர் நிறுத்தும் செயல்பாட்டில் எவ்விதமான சர்வதேச தலையீட்டையும் நிராகரித்துள்ள தற்போதுள்ள இலங்கை அரசு மீது விரக்தியடைந்துள்ள ஐநா மனித உரிமைகள் அதற்கான சட்ட நடவடிக்கையை நாட்டிற்கு வெளியே எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.



எனினும், தனது சொந்த இராணுவத்தினர் மீது இலங்கை அரசே விசாரணை நடத்த வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் கோரியுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, "கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு ஆளான பாதுகாப்புப் படையினர் மீதான விசாரணைகளுக்கு இலங்கை அரசு எவ்விதமான தடையையும் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் எனவும், தவறிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் போர்க் காலத்தில் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான மூத்த அதிகாரிகள் உட்பட அனைத்து தரப்பினர் மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும் மூத்த அரச பொறுப்புகளுக்கு குற்றச்சாட்டுக்கு ஆளான முன்னாள் இராணுவத் தளபதிகள் நியமிக்கப்படும் நடைமுறையை இலங்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்" என்று கோரப்பட்டுள்ளது.

தீவிரவாத எண்ணங்களிலிருந்து மீள்வதற்கான இலங்கை அரசின் திட்டத்தின் கீழ் சந்தேக நபர்கள் எவ்விதமான சட்ட வழிமுறைகளும் இன்றி இரண்டு ஆண்டுகள் வரை தடுத்து வைத்திருக்க முடியும். இத மனித உரிமை ஆர்வலர்கள் கண்டித்துள்ள நிலையில், ஐரோப்பிய நாடாளுமன்றமும் இது உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.

கடும் பாதிப்புகள்

ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானங்கள் அந்த நாடாளுமன்றத்தில் உறுப்புரிமை கொண்ட நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும். அவர்கள் அதன் மீதான உரிய நடவடிக்கையை எடுப்பார்கள். அந்த நாடுகள் ஜிஎஸ்பி+ சலுகைகளை நிறுத்துவது என்று முடிவு செய்தால், இலங்கையில் ஏற்றுமதி சந்தை மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படும். இலங்கையின் பெரிய வர்த்தகச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் இருக்கும் நிலையில் அதன் ஏற்றுமதி - இறக்குமதி மிகவும் பாதிக்கப்படும். அதன் மூலம் இலங்கை கணிசமான அளவுக்கு அந்நியச் செலாவணியை இழக்க நேரிடும்.

ஆடை ஏற்றுமதியே இலங்கைக்கு அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும் துறையாகும். ஜிஎஸ்பி மூலம் இலங்கை வேலை வாய்ப்புகள், பொருளாதார அபிவிருத்தி, அந்நியச் செலாவணி போன்ற பல வி'யங்களில் நன்மையடைந்துள்ளது.



அந்தச் சலுகை இழக்கப்பட்டால், இலங்கை குறைந்தது 150 மில்லியன் டாலர்களை ஏற்றுமதி சந்தையில் இழக்க நேரிடும். ஜிஎஸ்பி+ இடை நிறுத்தப்பட்டாலோ அல்லது விலக்கிக் கொள்ளப்பட்டாலோ இலங்கைப் பொருட்களின் ஏற்றுமதி விலை கூடும், எனவே சர்வதேசச் சந்தையில் நிலவும் கடும் போட்டியில் போட்டியிட முடியாத சூழல் ஏற்படும்.

# ரணில் வருகிறார்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



அண்மை வாரங்களில் அமெரிக்க கொங்கிரஸ் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் சில நகர்வுகள் ஈழத் தமிழர்களுக்கு உற்சாகமளிப்பவைகளாகவும் அரசாங்கத்தின் மீது அழுத்தத்தை பிரயோகிப்பவைகளாகவும் காணப்படுகின்றன.

கடந்த மாதம் 18ஆம் திகதி அமெரிக்க கொங்கிரஸில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஒரு தீர்மானமான முன்மொழிவானது இலங்கைத் தீவின் வடக்கு கிழக்குப் பகுதியை தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் என்று குறிப்பிட்டிருக்கிறது. இத்தீர்மானம் அமெரிக்க கொங்கிரசிலும் செனற்றிலும் இனிமேல்தான் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதேசமயம் ஐரோப்பிய பாராளுமன்றம் இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

அத்தீர்மானத்தில் இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதோடு, ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பதற்கு கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டத்தை கைவிடுவது, மீளாய்வு செய்வது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவை உட்பட சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவான புதிய சட்டத்தினை அல்லது திருத்தப்பட்ட சட்டத்தினை உருவாக்க வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவோம், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப பிரகடனங்களை நடைமுறைப்படுத்துவோம் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே 2017இல் ஜி.எஸ்.பி வரிச்சலுகையை இலங்கை மீளப்பெற்றுக் கொண்டது என்பதும் அத்தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது அந்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுதாமையினால் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை பற்றி மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்திற்கு ஆதரவாக 628 வாக்குகளும் எதிராக 15 வாக்குகள் அளிக்கப்பட்டதோடு 40 உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கெடுத்திருக்கவில்லை.

மேற்குநாடுகளால் முன்னெடுக்கபட்டிருக்கும் மேற்படி நகர்வுகள் இரண்டும் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் நோக்கிலானவை. ஜிபிஎஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டால் அது இலங்கை தீவின் பொருளாதாரத்தை நேரடியாகத் தாக்கும். ஏற்கனவே கடனில் மூழ்கியிருக்கும் நாடு கொரோனா வைரஸ் தாக்கத்தால் புதிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை காரணமாக இந்தியா ஏற்கனவே வாக்குறுதியளித்த கடன் உதவிகளை வழங்கப் பின்னடிப்பதாக அவதானிக்கப்படுகின்றது. தவிர இலங்கைத்தீவு நடுத்தர வருமானத்தை பெறும் ஒரு நாடாக அடையாளப்படுத்தப்பட்டு இருப்பதனால் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பவற்றிடமும் பொருத்தமான உதவிகளை பெற முடியாது. இவ்வாறானதொரு நிலைமையில்தான் அண்மையில் இலங்கை அரசாங்கம் பங்களாதேஸிடம் கடன் பெற்றிருக்கிறது. 1971ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நாடுதான் பங்காளதேஷ். கடந்த 40 ஆண்டுகளில் அது கடன் வாங்கும் நாடு என்ற நிலையிலிருந்து கடன் வழங்கும் நாடாக எழுச்சி பெற்றிருக்கிறது. இலங்கைத் தீவு பங்களாதேஸிடம் கடன் வாங்க வேண்டிய அளவுக்கு பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொள்கிறது.

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஏற்கனவே பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இலங்கை தீவுக்கான ஜிபிஎஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய நாடாளுமன்றம் நீக்குமாக இருந்தால் நாடு மேலும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இவ்வாறு மேற்கு நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சில நகர்வுகளை முன்னெடுக்க தொடங்கியுள்ள ஓர் அனைத்துலக பின்னணியில்தான் இந்த மாதம் 22ஆம் திகதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்பார் என்று செய்தி வந்திருக்கிறது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மோசமாக தோல்வி அடைந்தது. அக்கட்சிக்கு கிடைத்த ஒரே ஒரு தேசிய பட்டியல் ஆசனத்துக்கு ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்படக்கூடும் என்ற ஊகம் கடந்த 10 மாதங்களாக நிலவி வந்தது. இப்பொழுது கட்சியின் செயற்குழு அவரை நியமிப்பது என்று முடிவெடுத்திருக்கிறது. தேர்தல் தோல்வியை அடுத்து ரணில் விக்கிரமசிங்க அமைதியாக காணப்பட்டார். தோல்வியுற்ற கையோடு உடனடியாக தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குள் நுழைய அவர் விரும்பவில்லை. தன்னுடைய காலம் வரும்வரையிலும் அவர் காத்திருந்தார் என்றே கருத வேண்டும்.

கடந்த 10 மாதங்களாக சஜித் பிரேமதாசவின் தலைமையின் கீழ் எதிர்க்கட்சிகள் பெரிய அளவில் சோபிக்கவில்லை. சஜித் பிரேமதாச தன்னுடைய தலைமைத்துவத்தை நிரூபிக்க முடியாமைக்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது காரணம் அவருடைய சொந்தக் கட்சிக்குள் காணப்படும் சாதி ஏற்றத்தாழ்வுகள். இரண்டாவது காரணம் - ராஜபக்சக்க்கள் அசுர பலத்துடன் வெற்றி பெற்றிருக்கும் ஒரு நாடாளுமன்றத்தில் அவர் தன்னை தக்கவைத்துக் கொள்வதற்கு இக்குறுகிய காலகட்டம் போதாது என்பது. மூன்றாவது காரணம் - Covid-19 நெருக்கடி. கொரோனா வைரசும் சஜித்துக்கு சாதகமாக இல்லை. நாட்டின் அரசியலை அது கணிசமான அளவுக்கு முடக்கி வைத்திருகிறது. எதிர்க் கட்சிகள் தமது எதிர்ப்பைக் காட்டச் சனங்களைத் திரட்டி வீதியில் இறக்க முடியாத நிலை. நாலாவது காரணம்- ராஜபக்சக்களின் யுத்த வெற்றி வாதத்துக்கு எதிராக சஜித்தின் அரசியல் நின்றுபிடிக்க முடியவில்லை என்பது.

மேற்சொன்ன காரணங்களின் விளைவாக சஜித் பிரேமதாச தனது தலைமைத்துவத்தை நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் கவர்ச்சியான விதத்தில் ஸ்தாபிக்கத் தவறி விட்டார். இதற்காகத்தான் ரணில் விக்கிரமசிங்க காத்திருந்தார் போலும். இப்பொழுது தனக்கு உரிய நேரம் வந்துவிட்டது என்று அவர் கருதக்கூடும். அவர் மட்டுமல்ல அவருடைய எஜமானர்களான மேற்கு நாடுகளும் அவ்வாறு கருத முடியும். யுத்தவெற்றி வாதத்தைத் தோற்கடிப்பதென்றால் அதற்கு மூன்று இன வாக்குகளையும் திரட்ட வேண்டும். அதுதான் 2015இல் நடந்தது. அவ்வாறு மூன்று இனங்களையும் ஒன்று திரட்ட வல்ல ஒரே தலைவராக ரணிலைத்தான் மேற்கு நாடுகள் பார்கின்றன.

ஆனால், கடந்த 10 மாதங்களாக சஜித் பிரேமதாச மட்டுமல்ல எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் யாருமே தலையெடுக்க முடியாதபடி நாடு பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா நெருக்கடி போன்றவற்றில் மூழ்கியிருக்கிறது. இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்குள் நுழைவதன் மூலம் உடனடிக்கு சஜித்தை மேலும் பலவீனப்படுத்துவதைத் தவிர பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. ஆனால் நீண்ட எதிர்காலத்தில் ஓர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த விளையும் மேற்கு நாடுகளின் கருவியாக அவர் மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் இறக்கப்பட்டிருக்கிறாரா என்ற கேள்வி இங்கு முக்கியமானது.

ராஜபக்சக்களின் முதலாவது ஆட்சியை விட இரண்டாவது ஆட்சிக்காலத்தின் போது இலங்கை தீவு அதிகரித்த அளவில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு சீனமயப்படுவதை இந்தியாவும் அமெரிக்காவும் முன்னெச்சரிக்கையோடு பார்க்கின்றன. இது காரணமாக ராஜபக்சக்களின் முதலாவது ஆட்சியை ஓர் ஆட்சி மாற்றத்தின் மூலம் கவிழ்த்ததை போல இம்முறையும் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று அவர்கள் சிந்திக்கக்கூடும். ஆனால் இங்குள்ள அடிப்படை பிரச்சினை என்னவென்றால் எவ்வளவுக்கு எவ்வளவு மேற்கு நாடுகளும் இந்தியாவும் ராஜபக்சக்களை இறுக்கிப் பிடிக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு ராஜபக்சக்கள் சீனாவை நோக்கி போகக்கூடிய ஆபத்தும் உண்டு என்பதுதான். இலங்கை தீவின் பொருளாதாரம் மிகவும் சிறியது.சீனா போன்ற பெரிய நாடுகள் அதன் கடன் சுமையை இலகுவாக தீர்த்துவிடலாம். எனவே மேற்கு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது அதிகம் அழுத்தத்தைப் பிரயோகித்தால் அரசாங்கம் சீனாவை நோக்கி மேலும் போகக்கூடிய வாய்ப்புகளே அதிகமாக தெரிகின்றன.

ஜிபிஎஸ் வரிச்சலுகை தொடர்பான ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தீர்மானத்துக்குப்பின் இலங்கை அரசாங்கம் சில தற்காப்பு சுதாரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை மீளாய்வு செய்வதற்கென்று ஒரு குழு அமைக்கப்படவிருப்பதாக நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார். மேலும் அரசாங்கம் கூட்டமைப்போடு பேசப் போவதாக ஒரு செய்தி வெளிவந்தது. எனினும் கடைசி நேரத்தில் அரசாங்கம் அச்சந்திப்பை ரத்துச் செய்தது. இதுபோன்ற சுதாகரிப்புகளின் மூலம் மேற்கு நாடுகளை சமாளிக்கலாம் என்று இலங்கை அரசாங்கம் நம்பக்கூடும்.

குறிப்பாக இந்தியாவை சமாதானப்படுத்தினால் அது மேற்கை சுதாகரிப்பதற்கு உதவும் என்றும் அவர்கள் நம்பக்கூடும். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இந்தியாவை திருப்திப்படுத்த தவறியுள்ளது. எனினும் பலாலி விமான நிலையத்தை இந்தியாவின் உதவியோடு அடுத்த கட்டத்துக்கு புனரமைத்து அந்த விமான நிலையத்தின் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் சில வாரங்களுக்கு முன் சம்மதம் தெரிவித்திருந்தது. வைரஸ் தொற்றைக் காரணமாகக் காட்டி அப்பணிகள் இழுபடுகின்றன. அதைப்போலவே காங்கேசன்துறையிலிருந்து காரைக்கால் வரையிலுமான படகுச் சேவை தொடர்பிலும் சில மாதங்களுக்கு முன் செய்திகள் வெளிவந்தன. ஆனால் அதற்குரிய ராஜிய வேலைகள் இதுவரையிலும் முன்னெடுக்கப்பட்டதாக தெரியவில்லை. கோட்டாபய ராஜபக்ச பதவிக்கு வந்த புதிதில் இந்தியா முதலில் என்பதே தமது வெளியுறவுக் கொள்கை என்று திட்டவட்டமாக தெரிவித்திருந்தார். ஆனால் அது ஒரு கவர்ச்சியான சொல்லாடல் மட்டும்தான் நடைமுறை அல்ல என்பதைத்தான் கடந்த ஓராண்டு காலம் நிரூபித்திருக்கிறது. நடைமுறையில் சீனாவுக்கே முதலிடம் தரப்படுகிறது. அரசாங்கம் இந்தியாவை வாக்குறுதிகளால் மட்டும் சமாளித்து வருகிறதா?

இப்படிபட்டதோர் பின்னணியில் ரணல் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிப்பதால் மேற்குநாடுகளுக்கும் இந்தியாவுக்கும் அனுகூலமான ஓரரசியற் சூழல் உடனடிக்கு உருவாகுமா? அது ராஜபக்சக்களைப் பலவீனப்படுத்துமோ இல்லையோ சஜித்தைப் பலவீனப்படுத்தும் என்றே தெரிகிறது.

### வீணாவின் கவிக்கணை

அன்புள்ள
அப்பாக்களுக்கு

அப்பாவின்
மடிபோல் ஒரு
சிம்மாசனமும்,
அவர் மார்பில் சாய்ந்து
உறங்கையில் கிடைக்கும்
நிம்மதியும், ஏழுலகில்
தேடினாலும் நமக்கு
திருப்பிக்கிடைக்கப்பெறாத
வரப்பிரசாதமாகும்!



# ஜியோனா சானா: சாதனை மனிதர் - 'சளைக்காமல் உழைத்தவர்'

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இவர் காலம் முழுக்க அசராது உழைத்தவர் இவரின் கதை ஈடு இணையற்றது. இவரைப் போன்று ஒப்பாரும் மிக்காரும் இல்லை.

அவரின் "அசாத்தியமான உடலுழைப்பு" உலகப் புகழ் பெற்றது.

ஓய்வில்லாமல், தளர்ச்சியின்றி, நேரமில்லை என்று கூறாமல், பாரபட்சம் காட்டாமல், சமத்துவம் பேணி சாதித்தவர் ஜியோனா சானா.

உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் சாமானியர்கள், ஊடகவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், மானுடவியலாளர்கள், சமையல் கலையைப் பயிலும் மாணவர்கள், அரசியல்வாதிகள் என்று பல்துறையினர் இவரை வந்து சந்தித்து உரையாடிச் செல்வது பல ஆண்டுகளாக நடைபெறும் ஒன்று.

சரி! அவர் ஏன் தனித்துவமானவராக விளங்குகிறார்? அப்படி என்ன பெரிய சாதனை படைத்துவிட்டார் கடந்த ஞாயிறு (ஜூன் 13) காலமான 76 வயது நிறைந்த ஜியோனா சானா (Zion-a Chana).

அவரது சாதனை என்பது 39 மனைவிகள், 94 பிள்ளைகள், 33 பேரப் பிள்ளைகள் மற்றும் ஒரு கொள்ளுப்பேரன் ஆகியோருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தார் என்பது தான்.




சமத்துவம் - சகவாழ்வு

கட்டிய மனைவியை காலம் முழுவதும் கண்கலங்காமலும், அவருக்கு விசுவாசமாகவும் இருந்து "நல்ல பெயர்" வாங்குவதற்தே படாத பாடுபடும் 21ஆம் நூற்றாண்டில், இவர் 39 மனைவியரையும் சமமாகப் பாவித்து இல்லற சுகத்தை அளித்து, அவர்களிடையே சண்டை சச்சரவுகள் இன்றி எல்லோரையும் "அணைத்துச் சென்றார்".

"இந்தியா ஒரு மிகப்பெரும் சுற்றுலாச் சிறப்பை இழந்துவிட்டது" என்று இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மிசோரமின் முதலமைச்சர் ஜோரம்தாங்கா டிவிட்டர் மூலம் தெரிவித்த தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மிசோரம் மற்றும் அவரது கிராமமான பக்டாவங் டிலாங்குனவும் அவரது குடும்பம் காரணமாக எமது மாநிலத்தில் முக்கியமானதொரு சுற்றுலாத்தலமாக விளங்கியது என்றும் அவர் "சாதனைச் சிகரம்" ஜியானா சானாவின் மறைவு குறித்துக் கூறியுள்ளார்.

"உலகின் மிகப்பெரும் குடும்பி என்று நம்பப்படும் ஜியோனா சானா (76) அவர்களின் மறைவு மிகவும் வருத்தமளிக்கிறது-உங்கள் ஆன்மா சாந்தியடையட்டும் ஐயா" என்று குறிப்பிட்டு அவரது குடும்பத்தின் புகைப்படம் ஒன்றையும் பதிவிட்டுள்ளார் ஜோரம்தாங்கா.

அவரையும் அவரது கூட்டுக் குடும்பத்தாரையும் காண வருவோர் "மூக்கின் மேல் விரல் வைத்து" வியக்கும் ஒரு விஷயம் - "இந்த மனிதர் இவர்களை எப்படிச் சமாளிக்கிறார், குடும்பத்தை எப்படி நிர்வகிக்கிறார்" என்பதே?

அவரது முதல் மனைவி இவரைவிட மூன்று வயது மூத்தவர். மற்ற 38 பேரும் இவரது பேச்சுக்கு மதிப்பளித்து பிரச்சனையின்றி கணவருடனான நேரத்தை "பகிர்ந்து கொண்டனர்".

இந்தியாவில் பலதார உறவு அதிகாரபூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளது என்றாலும், சில பழங்குடியின பிரிவினருக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஜியோனா - "ச்சானா பவல்" எனும் எனும் பிரிவைச் சேர்ந்தவர். அந்தப் பிரிவு தமது திருச்சபையின் உறுப்பினர்கள் பலதார உறவுகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கிறது. அவ்வகையில் அந்தத் திருச்சபையில் 400 குடும்பங்களிலுள்ள சுமார் 4000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

அவரது மகன்கள் மருமகள்கள் மற்றும் பேரப் பிள்ளைகள் தனித்தனி அறையில் வசித்தாலும், ஜியானாவின் மனைவிகள் அனைவரும் அவரது படுக்கையறைக்கு அருகிலிருந்த ஒரு தங்குமிடத்தில் - டார்மட்ரியில் - தங்குவார்கள்.



ஒரே கூரையின் கீழ்

அவரது குடும்பம் 100 அறைகளைக் கொண்ட ஒரு நான்கு மாடி குடியிருப்பில் தங்கியுள்ளது. மிகவும் எழில் கொஞ்சும் மிசோ மலைச் சரிவிலுள்ள பக்டாவங் டிலாங்குன கிராமத்தில் அவரது வீடு உள்ளது. மியார்மார் (பர்மாவில்) தொடங்கும் ரக்கைன் மலைத் தொடரின் ஒரு பகுதியாகத் திகழ்கிறது மிசோ மலைத் தொடர்.

அதைத் தவிர விருந்தினர் இல்லம் ஒன்று, குடும்பத்தினருக்கான ஒரு பாடசாலை மற்றும் விளையாட்டு மைதானம் ஒன்றும் பரந்து விரிந்த அவர்களின் குடும்பத்திற்கு உள்ளது. குடும்பத்திலுள்ள ஆணிகள் அந்த மைதானத்தில் குழுக்களாகப் பிரிந்து அன்றாடம் கால்பந்து விளையாடி மகிழ்கின்றனர். தங்களது ஆரோக்கியதற்கு காரணம் கால்பந்து விளையாட்டே என்று அவர்கள் கூறுகின்றனர்.

அந்த குடும்பத்தினர் சுயச்சார்பு திட்டத்தின் அடிப்படையில் வாழ்கின்றனர். அபூர்வமாக சில நன்கொடைகள் வருகின்றன என்றாலும் அவர்கள் தமது நிலத்தில் உழுது தேவையானதைப் பெற்றுக் கொள்கின்றனர். இந்த விவசாயச் செயல்பாடு, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு ஆகியவற்றில் பெண்கள் ஈடுபடுகின்றனர். ஆண்கள் அனைவரும் தச்சுத் தொழிலைச் செய்கின்றனர். அவர்களுக்கென்று ஒரு தச்சுப் பட்டறை மற்றும் மரத் தொழிற்சாலை ஒன்றும் உள்ளது.

ஜியோனா குடும்பத்தினரைச் சந்தித்து திரும்பும் பார்வையாளர்கள், செய்தியாளர்கள் ஆகியோர் அவர்கள் உணவுக்காக ஒன்றுகூடும் போது கல்லூரி உணவுக் கூடம் அல்லது சமுதாய உணவுக் கூடம் போல அந்தச் சூழல் காணப்படுகிறது என்று கூறுகின்றனர்.

சமையல் வேலையில் குடும்பத்துப் பெண்கள் கூட்டாக மகிழ்ச்சியுடன் ஈடுபடுகின்றனர். சராசரியாக நாளொன்றுக்கு குறைந்தது 100 கிலோ அரிசி பொங்கப்படுகிறது. அத்தோடு 60 கிலோ உருளைக் கிழங்கு, 40 கோழிகள் ஆகியவையும் உணவாகின்றன.



அந்தக் குடும்பத்து சமையலறை சிறிது நேரம் மட்டுமே மூடப்படுகிறது.

"சமைப்பது ஒரு போதும் பிரச்சனையாக இருந்ததில்லை, அது ஒரு கூட்டு முயற்சி மற்றும் மகிழ்ச்சியான வாழ்வின் ஒரு பகுதி" என்கிறார் குடும்பத்தின் மூத்த மருமகள் த்லெங்கி லிவியானா.

சுழற்சி முறை

39 மனைவிகளும் ஒற்றுமையாக இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அட்டவணையின் படி கணவருடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்ததை ஆய்வு செய்வதற்காகவே வெளிநாட்டுப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் மிசோரம் வந்து அந்தக் குடும்பத்தினருடன் தங்கி ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆனால் இந்த "படுக்கையைப் பகிர்ந்து" கொள்ளும் விஷயத்தை மேற்பார்வை செய்து ஒரு இராணுவக் கட்டமைப்பை தலைமையேற்று நடத்துவது போலச் செயல்படுத்துகிறார் மூத்த மனைவி ஜாய்தியாங். அது கட்டமைக்கப்பட்ட வகையில் சுழற்சி முறையில் இயங்குகிறது.

படுக்கை வி'யத்தில் அவர் சொன்னால் சொன்னது தான். ஆனால் இதில் பிரச்சனைகள் இருப்பதில்லை.

"எங்களுக்கென்று நேரமும், காலமும் உள்ளது - எனவே இதில் சிக்கலில்லை, நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம்" என்று மனைவியர் அனைவரும் ஒரே குரலில் கூறுகின்றனர்.

வீட்டு வேலை, சமையல், பிள்ளைகள் பராமரிப்பு, சுத்தம் செய்தல் என அனைத்திலும் ஜாய்தியாங் சொல்வதே இறுதி வார்த்தை. இப்போது மருமகள்கள் மற்றும் பேரப்பிள்ளைகளும் உடன் இணைந்து குடும்ப வேலைகளைச் செய்கின்றனர்.

இதில் கவனிக்கத்தக்க விஷயம் மிசோ சமூகம் ஆண்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு சமூகமாகும். இதன் காரணமாகவே அங்குத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்படும் பெண்கள் பெரியளவில் வெற்றி பெறுவதில்லை. கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஒரு பெண் வேட்பாளர் கூட வெற்றிபெறவில்லை.



லண்டனிலுள்ள "ரிப்ளியின் நம்பினால் நம்புங்கள்" ஆச்சரியமூட்டும் அருங்காட்சியகம் மிகவும் பிரபலம். சுற்றுலாப் பயணிகள் அனைவரும் சென்று கண்டுகளிக்கும் ஓரிடம். பத்தாண்டுகளுக்கு முன்னர் உலகின் விந்தையான கதைகள் என்னும் தலைப்பில் அவர்கள் காட்சிப்படுத்திய 10 அம்சங்களில் ஜியோனா சானாவின் குடும்பமும் ஒன்று.

ஆணாதிக்க சமுதாயமான மிசோரமில் தந்தையின் மறைவுக்குப் பிறகு மூத்த மகன் நொன்பார்லெ லிவியானா குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

கடந்த ஞாயிறன்று அவர் மரணமடைந்ததாக மாநில முதலமைச்சர் ஜோரம்தாங்கா டிவீட் மூலம் தெரிவித்து அஞ்சலி செலுத்திய நிலையில், திங்கட்கிழமை பின்னிரவு புதிய சர்ச்சை ஒன்று தோன்றியுள்ளது.

அவரது மனைவியரும், அவர் தலைமையேற்றுள்ள திருச்சபையைச் சேர்ந்தவர்களும் அவர் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று கூறு அவரது நல்லடக்கத்தை செவ்வாய்க்கிழமை நிலவரப்படி நிறுத்தி வைத்துள்ளனர்.

ஜியானா சானாவில் உடலில் வெப்பமும் நாடித் துடிப்பும் இருக்கும் வரை அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெறாது என்று "ச்சுவான் தார் கொஹ்ரான்" - அதாவது புதிய தலைமுறை தேவாலயத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (13 ஜூன்) அன்று மதியம் 3 மணி அளவில் அவர் உயிரிழந்துவிட்டதாகவும், மரணமடைந்த நிலையிலேயே அவர் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறி மருத்துவர்கள் மரணச் சான்றிதழையும் அளித்தனர். ஆனால், மனைவியரும், திருச்சபையிலுள்ள 20 பெரியவர்களும் அவரது இறப்பை ஏற்க மறுக்கின்றனர்.



ஜியானா சானாவின் "வீரியம் மிகுந்த சாதனை" இன்று உலகளவில் பேசப்படுகிறது.

ஆம், உலகின் மிகப் பெரிய குடும்பி காலமானார். அவர் ஒரு வகையில் தனித்துவமானவர். சாதனைகளுக்கு அளவுகோல்கள் கிடையாது!

# அன்புடன் சிங்கள சகோதரர்களுக்கு, இது உங்கள் மீதான பரிசுத்தமான அக்கறை கொண்ட அறைகூவற் பகிரங்கக் கடிதம்

இக்கடிதத்தை வாசித்து அதில் உள்ள சாராசம்சத்தை உள்வாங்குவதும் உள்வாங்காது விடுவதும் உங்கள் விருப்பம்.

ஆனால் எதிர்காலத்தில் எதுவெல்லாம் நடக்கவிருக்கின்றதோ அதை முன்கூட்டியே அறிவதற்காக சிங்களவர் தமிழர் என்ற வேறுபாடின்றி நமெல்லோரும் இலங்கையர் என்ற ஒருமித்து இலங்கை என்ற இறைமையுள்ள நாட்டிலே வாழுகின்ற மக்கள் என்ற அத்திவாரம் கொண்டவர்கள் என்ற ரீதியிலே அக்கறையுடன் உங்களை நோக்கி எழுதப்படுகின்ற கடிதந்தான் இது.

இலங்கையில் தீர்க்கப்படக்கூடாத அல்லது தீர்க்கப்படக்கூடாது என்ற நோக்கில் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழரின் இனப் பிரச்சினையின் தாற்பரியத்தை தமிழர்கள் மட்டுமல்ல நீங்களும் அறிவீர்கள்.

ஓரிரு வருடங்களில் பேசித் தீர்க்கப்பட்டு மனமுண்டால் இடமுண்டு என்பது தமிழரும் சிங்களவரும் சகோதரர்கள் நமக்குள் ஏன் இவ்வளவு விரிசல் என்று ஆறஅமரச் சிந்தித்து நல்லிதயத்துடன் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையை நானா நீயா என்று கையிறுத்தல் போட்டியாக சிங்கள தமிழ் அரசியல்வாதிகள் மாற்றிவிட்டார்கள்.

மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திற்கு தெரியு செய்யப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரு இன மக்களையும் ஒற்றுமைப்படுத்துவதற்கான வழிவகைகள் என்ன என்பதை ஆராயாது, மக்களின் வாழ்வியலுக்கு அவர்களின் தேவைகளை எவ்வாறு அபிவிருத்திகள் மூலம் பூர்த்தி செய்யலாம் என்று யோசிப்பதைத் தவிர்த்து எப்படி இரு இனங்களையும் முரண் கொள்ள வைத்து நாடாளுமன்ற கதிரைகளில் நிரந்தரமாக உட்கார்ந்து கொள்ளலாம் என்ற சூது நோக்கு அரசியலே இன்று இலங்கை எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போனதற்கு காரணம்.

பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறோம் என்று வந்த நாடுகள் யாவும் இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பு எதில் தங்கியிருக்கின்றது என்பதை ஆராய்ந்து அதன் பலவீனத்தின் மிது தமது கையாளுதலை பேணி வருதலைக் காண முடிகின்றது.

இலங்கை என்பது ஒரு சிறிய தீவாக இருந்தாலும் அது இறைமையும் ஆளுமையுமுள்ள நாடு என்பதை சிங்களவர்களும் தமிழர்களுமாகிய நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோமா என சிந்திக்க வேண்டியுள்ளது.

பெரும் நிலப்பரப்பைக் கொண்டுள்ள நாடுகளே தன்னாதிக்கம், சுதந்திரம், இறைமை என்ற அரசியல் கட்டமைப்பு அலகுகளைக் கொண்டு தன்னைத்தானே ஆளும் சக்தி கொண்டவை என்ற தப்பான எண்ணத்தைக் கொண்டுள்ளோமோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. அது அப்படியல்ல. ஒரு குடிமகனே தன்னாதிக்கம் உள்ளவனாகும். சிறு தீவான இலங்கையும் தன்னாதிக்கமுள்ள சுதந்திர நாடேயாகும்.

எமது நாட்டின் ஆளுமை மீதும் நாம் கொண்டிருக்க வேண்டிய தேசபக்தி மீதும் நாம் வலுவிழந்த தன்மையைக் காட்டியதனால்தான் அண்டை நாடுகள் உதவி என்ற போர்வையில் எம்மீது ஆதிக்கம் செலுத்தவும் ஆளுமை கொள்ளவும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன.

தமிழ் அரசியல்வாதிகளினதும் சிங்கள அரசியல்வாதிகளினதும் இனவாதப் பேச்சுக்களும் அவர்கள் அதை முன்னெடுக்கும் நடவடிக்கைகளும், அதே போல சிங்களவர்களும் தமிழர்களும் தாங்கள் ஒரே நாட்டில் வாழும் சகோதரர்கள் என்பதை மறந்துவிட்டு முரண்பாடுகளை வளர்த்துக் கொள்வதாலும் பலவீனமான உடலில் மோசமான நோய்க்கிருமிகள் தொற்றி உடலை மெல்ல மெல்ல வலுவிழக்கச் செய்வது போல எமது நாட்டின் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பின் பலவீனம் மற்றைய நாடுகள் எமது நாட்டில் நிலைகொண்டு கண்காணிக்கும் நிலைக்கு எமது நாட்டைக் கொண்டு வந்துவிட்டிருக்கின்றது. எமது நாட்டின் பொருளாதார வளங்களை மேம்படுத்துவதற்காக மாபெரும் கட்டுமாணப் பணிகளை செய்ய வரும் வேற்று நாட்டினர் அப்பணிகளுக்கான செலவீனங்களை எமது நாட்டிடம் வாங்கிக் கொள்ளலாமே தவிர இது என்னுடையது,குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்கு வேணும் என்பதும் அதற்கு அரசு ஒப்புதல் அளிப்பதும் அந்த நிலப்பரப்பு வெளிநாட்டினர் வாங்கிய நிலப்பரப்புக்கு ஒப்பானதேயாகும்.

அந்த நிலப்பரப்பில் ஒரு சிறு நாட்டையே உருவாக்க முடியும் என்பதற்கு இன்று போர்ட் சிட்டியே உதாரணமாகி, கிட்டத்தட்ட இலங்கை மீண்டும் காலணித்துவ ஆட்சிக்கு உட்பட்டு விட்டதோ என சந்தேகம் வலுக்கத் தொடங்கியுள்ளது.

போர்த்துக்கீசர் இலங்கையைக் கைப்பற்றி, காலணித்துவ நாடாக்கிய போது முழு இலங்கையின் நிலப்பரப்பையும் மக்களையும் ஒரேயடியாக தமது ஆட்சிக்கு உட்படுத்தவில்லை.

அவர்கள் கரையோர நிலப்பரப்பில் காலூன்றி நிலை கொண்டு மெல்ல மெல்ல முழு நிலப் பரப்பையும் தமது ஆட்சிக்கு உட்படுத்தினார்கள் என்பதை வரலாறு எமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கின்றது.

அதற்குப் பின்னர் போத்துக்கீசரின் வழியில் ஒல்லாந்தரும் பிரித்தானியரும் எவ்வாறு எமது நாட்டை கையகப்படுத்தினார்கள் என்பதையும் இலங்கையர்களாகிய நாமறிவோம்.

அன்றிருந்த சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் தேசபக்தி காரணமாகவும் சிந்தனைத்திறன் காரணமாகவும் இலங்கையர் நாம் என்று ஒருமித்து அந்நியர் ஆதிக்கத்திலிருந்து இலங்கையை மீட்டு சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள நாடாக நிமிர்ந்து நிற்கச் செய்தனர்.

ஆனால் இன்று எமது நாட்டில் நவீன சிந்தனைத் திறனும் அரசியல் மதிநுட்பமும் உள்ள அரசியல்வாதிகளும் மக்களுமிருந்தும் ஏன் எமது நாடு அந்நிய ஆதிக்கத்துக்கு உட்பட்டு, தேசபக்தி அற்று ஏன் மண்டியிட்டு நிற்கிறது என்பது பெரும் கவலையைத் தருகின்றது.

எமது நாட்டுக்கு உதவி செய்ய வருபவர்கள் யாராக இருந்தாலும் வாருங்கள். அதற்கு பரிகாரமாக பண்டமாற்று வணிகம் செய்வதற்கும், செலவீனங்களுக்கு பணமாகவும் தருகிறோம் அதற்காக எங்கள் நாட்டையே தாரைவார்த்துத் தாருங்கள் எனக் கேட்காதீர்கள். எமது நாடு கொடுக்கவும் கூடாது.

அவர் எவராக இருந்தாலும் அது எந்த நாடாக இருந்தாலும் ஏற்றுமதி இறக்குமதியோ பண்டமாற்று வணிகமோ ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஒத்தாசையாக இருப்போமே தவிர எமது நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பைச் சிதறடிக்க முயற்சிக்காதீர்கள் வெளிநாடுகளை கேட்டுக் கொள்கிறோம்.உளவு நிறுவன ஒற்றர்கள் எமது நாடு முழுவதும் பரந்துவிட்டார்களோ என ஐயுறவு கொள்ள வேண்டியதாகிவிட்டது. எந்தவொரு குடிமகனுமே எந்தவொரு நாட்டுக்குமே விலைபோகக்கூடாது.

எமது நாடு ஒரு சிறிய தீவுதான் ஆனால் ஒவ்வொரு குடிமகனும் இறைமையுள்ளவன். எமது இறைமை என்பது தன்னாதிக்க முறைமையைக் கொண்டது.

சிங்களச் சகோதரர்களே!. உங்களைத் தூண்டிவிடுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல எங்கள் நாட்டின் மீது எந்தவொரு நாடும் ஆளுமை கொள்ள வைக்காதீர்கள் என்பதே எனது அன்பான வேண்டுகோளாகும்.

உங்களுக்கு இருக்கும் ஒரேயொரு நாடு இலங்கை மட்டுமே. எங்கள் சகோதரர்களான நீங்கள் பேசும் மொழியான சிங்கள மொழி எமது நாட்டில் மட்டுமே இருக்கின்றது. இது ஒரு அபூர்வமானதும் அதிசயமானதும்கூட. உங்களுடைய நாடு உங்களுக்கு இல்லாத காலம் வருவதற்கு இடம் கொடுக்காதீர்கள். நீங்களே உங்களை இல்லாது செய்துவிடாதீர்கள். உங்களுடைய மொழியும் என்றும் நிலைத்து நிற்க வேண்டும். உங்களுக்கும் எங்களுக்குமிடையில் நிறைய ஒற்றுமைகள் உண்டு. திருமண பந்தங்களே இருக்கின்றன.

தமிழர்களுக்கும் உங்களுக்கும் இடையிலிருக்கும் சிறு பிரச்சினைகளை சீனா விஸ்வரூபமாகக் காட்டி உங்களைக் காப்பாற்றுகிறோம் என்ற போர்வையில் இலங்கையை தமது ஆளுமைக்குட்படுத்துவதை உணருங்கள்.

சீனா மக்களையோ சீனாவையோ தமிழ்மக்கள் வெறுக்கவில்லை. ஆனால் சீனா எமது நாட்டுடன் நட்போடு இருக்கலாமே தவிர அவர்கள் காட்டும் திசையில் இலங்கையை வழிநடத்த அவர்களுக்கு உரிமையில்லை.

போர்ட் சிட்டியை அவர்கள் கட்டித் தந்துவிட்டுப் போகட்டும். அது இலங்கையின் ஒரு சொத்து, இலங்கையின் ஒரு நகரமே தவிர அது சீனாவின் குட்டி நாடாகக்கூடாது.

அங்குள்ள தொழில்நுட்ப கணிணித் தளங்கள் யாவும் இலங்கையால் கண்காணிக்கப்பட வேண்டும். தேசபக்தி உள்ள ஒவ்வொரு சிங்கள குடிமகனாகட்டும், தமிழ் குடிமகனாகட்டும் எமது நாட்டின் ஒரு மில்லிமீற்றர் நிலத்தையோ அதன் வளங்களையோ எமக்குரிய கடலையோ கடல் வளத்தையோ யாருக்குமே கொடுக்க அனுமதிக்காதீர்கள்.

நான் ஒரு தமிழனாக இருந்தாலும் இலங்கையின் கடல் எல்லைக்குள் தமிழ் நாட்டினராக இருந்தாலும்கூட மீன் பிடிக்க அனுமதி கொடுக்கக்கூடாது என்பதே எனது பலமான கருத்தாகும்.

எமது மீன் வளங்களை பல ஆண்டுகளாகவே ரோலர் போட்டு தமிழ்நாட்டு மீனவர்கள் வாரிச் சுருட்டிக் கொண்டு போவதை கேள்விப்பட்டு வருகிறோம்.

தாயும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறை. அது போலத்தான் இலங்கைத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் இனத்தால் ஒன்றெனினும் அவர்கள் வேறு நாங்கள் வேறு. நாங்கள் இலங்கைத் தமிழர்கள், இலங்கையர்கள். எமது கடலில் மீன்பிடிக்க அவர்களுக்கு இலங்கை அனுமதி கொடுக்கக்கூடாது.

எமது நாட்டில் இருக்கும் இனப்பிரச்சினையை சாட்டாக வைத்துக் கொண்டு எமது நாட்டை வல்லரசுகள் தமது அரசியல் விளையாட்டு மைதானமாக்க முயற்சிக்கிறார்கள்.

அந்த வழியைத்தான் இன்னொரு வல்லரசாகிக் கொண்டிருக்கும் சீனா தன்வழியில் இலங்கையைக் கையாளத் தொடங்கியுள்ளது.

தமது மொழியை மெல்ல மெல்ல அபிவிருத்திக்காக வரும் சீனர்களுக்கு அவர்கள் சார்ந்த தொழில்நிறுவனங்களுக்கு திசைகாட்ட வேண்டும் என்ற போர்வையில் தவிர்க்க முடியாத மொழியாக எதிர்காலத்தில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் தம்சொற்படி இலங்கை ஆட வேண்டும் என்பதற்காகவும் சீனமொழியில் வீதிப் பெயர்ப்பலகைகள் வைக்கப்பட்டு வருகின்றன.

சீனர்கள் ஆங்கிலத்தைப் படிக்கட்டும் இல்லையேல் சிங்களத்தைப் படிக்கட்டும். அவர்களின் மொழியில் வீதிப்பெயர்ப்பலகைகள் இடுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது.

இந்தியாவிற்கு எதிராக செயல்படுவதற்காக இலங்கையைத் தளமாக சீனா பாவிக்கப் போகின்றது என்பதை வெறும் ஊகம் என்று சொல்லிவிட முடியாது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள்ள பிரச்சினையை அவர்கள் தீர்த்துக் கொள்ளட்டும். எமது நாடு அவர்களுனுக்கு தொட்டுக் கொள்ளும் ஊறுகாயல்ல.

சீனா தனது ஆதிக்கத்தை எமது நாட்டில் நிலைநாட்டாதிருப்பது சிங்கள மக்கள் கையிலேயே இருக்கின்றது. சீனாவால் எவ்வித ஆக்கிரமிப்பும் இருக்காது என சிங்கள மக்கள் அலட்சியமாக இருப்பார்களாயின், அவர்கள் தமது நாட்டை இழந்து நாடற்றவர்களாகி விடுகின்ற அபாயகரமான சூழ்நிலைகூடத் தோன்றலாம்.

இந்தக் கட்டுரையானது எமது நாடு எந்த நாட்டுக்குமே அடிமையாகி எடுப்பார் கைப்பிள்யைாகிவிடக்கூடாதே என்பதற்காவே எழுதப்பட்டது. எல்லா வளங்களும், கல்வியறிவும் உள்ள எமது நாடு எதுவுமே எம்மிடம் இல்லையென்ற பொய்த்தோற்றத்தை கற்பிக்க முயலும் மற்றைய நாடுகளின் வலையில் விழுந்துவிடக்கூடாது என்பது மட்டுமல்ல, மற்றைய நாடுகள் எமது நாட்டுக்கு வழங்குகின்ற மனிதாபிமான உதவிகள் பேரம்பேசுதலாக மாறிவிடக்கூடாது என்பதே எமது அச்சமாகும்.

சிங்களவர்களும் தமிழர்களுமாகிய நாம் எமக்குள்ள பிரச்சினைகளை நாமே பேசித் தீர்த்துக் கொள்வோம் என்பதுடன் நாங்கள் சகோதரர்கள் என்பதும், நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும் இனிமேல் நடப்பவை நல்லவையாகவே இருக்கட்டும் என்ற நோக்கத்துடனும், எமது மண்ணையும் எமது கடலையும் எந்த நாடுமே அபகரிக்க இடம் கொடுக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடுதான் சிங்களச் சகோதரர்களை நோக்கி இக்கட்டுரை வழியாக பகிரங்க வேண்டுகோள் விடுக்கிறேன்.

தன்னாதிக்கமுள்ள இறைமையுள்ள சுதந்திர நாடாக செல்வச்செழிப்புடன் இலங்கை என்றும் யாருக்குமே விலைபோகாத அடிபணியாத நாடாக நிமிர்ந்து நிற்க வேண்டுமென்பதே ஒவ்வொரு இலங்கையனுடைய ஆசையும் எதிர்பார்ப்புமாகும்.

**- கந்தையா முருகதாசன் (ஏலையா க. முருகதாசன்)**

# ஒரு சனநாயகத்தில் மக்களுக்கு அவர்கள் தகுதிக்கு ஏற்ப அரசாங்கம் கிடைக்கிறது!

**கனடா நக்கீரன்**

இராமச்சந்திரக் கவிராயர் என்பவர் 19-ஆவது நூற்றாண்டில் சென்னையில் வாழ்ந்த ஒரு புலவர். இவர் சிறந்த கவிஞராக விளங்கியதால் இவர் கவிச்சக்கரவர்த்தி, கவிராயர் எனப் பாராட்டப் பெற்றார். இவரது பாடல்களில் பல தனிப் பாடல்கள் ஆக சிந்தாமணி என்ற நூலில் காணப்படுகின்றன. அதில் ஒன்று,

*ஆவீன மழைபொழிய இல்லம் வீழ*
*அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாக*
*மாவீரம் போகுதென்று விதைகொண் டோட*
*வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ளச்*
*சாவோலை கொண்டொருவன் எதிரே தோன்றத்*
*தள்ளவொணா விருந்துவர சர்ப்பந் தீண்டக்*
*கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்*
*குருக்கள்வந்து தட்சணைகள் கொடு என்றாரே!*

இடர்கள் தனித்தனியாக வராமல் வரிசையாக வருகின்றன என ஆங்கிலத்திலும் ஒரு பழமொழி இருக்கிறது, **Misfortunes don't come singly, it comes in a row.**

இந்தப் பாடலில் வரும் குடியானவன் இடத்தில் சிறிலங்கா அரசாங்கம் இன்று இருக்கிறது. நெருக்கடிக்கு மேல் நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகிறது.

கோவிட் - 19 தொற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசாங்கம் திணறி வருகிறது. தனிமைப்படுத்தல், முடக்கல், பயணக் கட்டுப்பாடுகள், கைதுகள் கை கொடுப்பதாக இல்லை. யூன் 17 இல் மட்டும் 1,561 பேர் முடக்கலை மீறிய குற்றத்துக்காக பொலீசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்றைய நிலையில் (யூன் 18) கோவிட் - 19 தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களது தொகை 233,064 எட்டியுள்ளது. மருத்துவமனையில் இருப்பவர்களது தொகை 35,256, குணமடைந்தோர் தொகை 195,434, உயிர் இழப்புக்கள் 2,374 ஆகும். மொத்தம் 2.2 கோடி மக்கள் வாழும் நாட்டில் 10 விழுக்காட்டினருக்கு மட்டும் முதல் தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது.

சிறிலங்காவின் பொருளாதாரம் சரிந்து கொண்டு போகிறது. 2019 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு 2.26 விழுக்காட்டால் அதிகரித்தது. ஆனால் 2020 இல் விவசாயம், தொழில் மற்றும் சேவைத் துறையில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாக பொருளாதாரம் 3.6 விழுக்காடு சுருங்கியது.

எதிர்வரும் காலங்களில் பொருளாதாரம் சிறிலங்காவின் முதலாம் எதிரியாக இருக்கப் போகிறது. கோவிட் - 19 தொற்றுநோய் ஒரே இரவில் அதிசயமாக மறைந்தாலும் பொருளாதாரம் இயல்பு நிலையை எட்ட ஓர் ஆண்டாவது செல்லும். இலங்கையின் வர்த்தக பங்காளிகளின் பொருளாதாரங்களில் தீவிர வளர்ச்சி இல்லாவிட்டால், தீவின் வளர்ச்சி வாய்ப்புகள் மோசமாக இருக்கும்.

மத்திய வங்கி ஆளுநரின் 2021 ஆம் ஆண்டிற்கான விழுக்காடு 5 ஆக இருக்கும் என்ற கணிப்பு மிகைப்படுத்தப் பட்ட ஒன்றாகும். ஒருவிதத்தில் அது ஒரு கனவு போன்றது. எந்தவொரு நேர்மறையான பொருளாதார வளர்ச்சியும் இருக்கப்போவதில்லை. இருந்தாலும் அது 2 விழுக்காட்டைத் தாண்டாது எனலாம்.

இந்தப் பின்னணியில்தான் இப்போதுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் திருத்தப்படாது விட்டால் ஏற்றுமதிகள் மீதான ஜிஎஸ்பி வரிச் சலுகையை விலக்கப் போவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது. இது இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு விழுந்த கடுமையான அடியாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் ஏற்றுமதிக்கான இரண்டாவது பெரிய இடமாகும். முதலாவது இடத்தில் அமெரிக்கா இருக்கிறது, மேலும் இழப்பைப் சமநிலைப்படுத்த சிறிலங்கா மற்றொரு இடத்திற்கு மாறுவது அவ்வளவு எளிதல்ல. இருந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இறக்குமதிச் சலுகை இழப்பை எதிர்கொள்ளத் தாம் அணியமாக இருப்பதாக ஆட்சியாளர்கள் சவால் விட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க இலங்கை தனது எரிபொருட்களின் விலையை கடந்த வெள்ளிக்கிழமை (யூன் 11) முதல் அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் அண்மைய
எரிபொருள் விலையேற்றம் அரசாங்கத்தின் தொடர்ச்சியான தோல்வியுற்ற பொருளாதார மேலாண்மை மற்றும் குறுகிய கால கொள்கைகளின் மற்றொரு அறிகுறியாகும் என்று ஐக்கிய தேசிய கட்சி (யுஎன்பி) சாடியுள்ளது.
முந்தைய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சாதகமான நடவடிக்கைகளைத் தொடர இந்த அரசாங்கம் மறுத்ததன் காரணமாக பொதுமக்கள் பெருகிவரும் நிதிச் சுமையைச் சுமக்க உள்ளனர்.

மே 2020 இல், உலகளாவிய மதகு எண்ணெய் விலை பீப்பாய் 30.38 டொலராகச் சரிந்தது. இருப்பினும் 2018 ல் ஐதேக அரசாங்கம் அறிமுகப்படுத்திய எரிபொருள் விலைச் சூத்திரத்தை இராசபக்ச அரசு நிராகரித்திருந்தது. உலகளாவிய விலையில் பிரதிபலிக்கும் வகையில் உள்நாட்டு எரிபொருள் விலை குறையவில்லை. அது மட்டுமல்ல உலகளாவிய விலை வீழ்ச்சியிலிருந்து சாத்தியமான சேமிப்புகள் நுகர்வோருக்கு வழங்கப்படவில்லை.

”இலங்கைப் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான தேக்க நிலை மற்றும் நாடு முடக்கப்பட்டதன் காரணமாக, குடிமக்களின் வருவாய் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. பலர்

(தொடர்ச்சி 18ம் பக்கம்)



# காலம் ஆகி நெஞ்சங்களில் தடம் பதித்த கலாநிதி தம்பிராஜா வசந்தகுமார்..!



கலாநிதி வசந்தகுமார் அவர்கள் உடுப்பிட்டியில் மிக்ச சிறந்த ஆசிரியர் என்ப பெயர் எடுத்து அவர்களின் மாணவர்களின் நெஞ்சங்களில் இன்றும் நிலைத்து நிற்கும் எங்கள் மதிபபுக்குரிய தம்பிராஜா ஆசிரியரின் மகன் என்ற பெருமையுடன் அவரது வழியைப் பின்பற்றி சமுகத்திற்காகவே தன்னை அர்ப்பணித்த கலாநிதி வசந்தகுமார் அவர்கள் 14.06.2021 அன்று கனடா மண்ணிலே காலமாகிவிட்டார் என்ற செய்தி தாயக மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும் தீராத வலியை ஏற்படுத்தி யுள்ளது.

நாங்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்தபொழுது, எமது கல்லூரி கல்வித் துறையில் மட்டுமல்லாது "13 ஆவது யாழ்பபாணம்" என்ற அடையாளத்துடன் சாரணிய இயக்கம் இலங்கை முழுவதும் கொடிகட்டிப் பறந்தது. அப்பொழுது நானும், வசந்தனும் பழகிய உறவு கனடாவில் எனது மகனைச் சந்தித்த அந்தநாளையும் தொடர்ந்து இன்றுவரை நீடித்தது.

வசந்தகுமார் கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும் பொழுதே கல்வியில் மிக உன்னத நிலையில் இருந்து தனது பெயரைப் பதித்துக் கொண்டாலும் நாடகங்கள் நடிப்பதிலும், விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் வெற்றிபெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்ததிலும் உன்னதமான ஒரு மாணவராக இருந்து தனக்கென ஒரு ஆளுமையை வளர்த்துக் கொண்டவர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் வகுப்பில் எப்பொழுதும் முதல் மாணவனாகவே இருந்து மற்றைய மாணவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் இருந்து அவர்களையும் வளர்த்து வந்தார்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் மட்டுமல்லாது மாவட்ட ரீதியில் இடம்பெற்ற பேச்சுப்போட்டி களில் பங்குபற்றி எப்பொழுதுமே முதலாம் இடத்திலேயே இருந்து, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரிக் குப் பெருமைசேர்த்த ஒருவராக இருந்தவர்.



எமது கல்லூரிச் சாரணர்குழு யாழ்மாவட்டத்திலும், தேசிய மட்டத்திலும் கலந்துகொண்டு பல சந்தர்ப்பங் களில் "தீவு மட்டத்திலான தகுதிக் கொடியை (Island Merit Flag) வென்றெடுத்ததில் வசந்தகுமாரின் பங்கு அளப்பரியதாக இருந்ததை நாங்கள் மறந்துவிடமுடியாது. தம்பிராசா வசந்தகுமார், க.பொ.த. உயர் தரத்தில் கணிதத்துறையில் அதிகூடிய சிற்நத பெறுபேற்றைப் பெற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறிறியியல் பீடத்திற்குத் தெரிவாகி அங்கும் மெறிற் சித்தியைப் பெற்று ஆற்றல் மிக்க ஒரு பொறியியலாளராகத் தன்னைத் தடம் பதித்துக் கொண்டார். தனது கல்வி அறிவு மற்றும் ஆளுமை காரணமாகத் தனது கலாநிதிப் பட்டத்தைப் பொறியியல் துறையில் பெற்றுக்கொண்டமை எங்களுடைய் கல்லூரிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் மேலும் பெருமை சேர்த்தது.

இலங்கையில் சிலகாலம் பணியாற்றிய கலாநிதி தம்பிராசா வசந்தகுமார் அவர்கள் கனடாவுக்குப் புலம் பெயர்ந்த சென்ற பின்னர் தான் அவருடையை ஆளுமையையும், ஆற்றலையும் உலகமே அறிந்து கொண்டது.

1988 களில் விமானக் குண்டுவீச்சுக்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் கட்டிடங்கள், ஆவணங்கள், ஆயிரக்கணக்கான அரிய நூல்களைக் கொண்ட நூலகம், ஆய்வுகூடங்கள், தொழில்நுட்பக் கூடங்கள், அதிபர் அலுவலகம் என எலலாமே அழிக்கப்பட்டுத் தரைமட்டமாக இருந்தபொழுது, கல்லூரி அப்படியே அடையாளமே அழிந்துவிடுமோ என்று எல்லோருமே அச்சத்துடன் ஏங்கிக் கொண்டிருந்த காலத்தில் கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் ஆசிரியருமாக இருந்த அமரர். க.சிதம்பரப்பிள்ளை அவர்களைப் புதிய அதிபராகக் கொண்டுவந்து, அவரை வினைத்திறனுடன் செயற்படுத்தும் வகையில் மீண்டும் பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கி யாழ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும், பழைய மாணவராகவும் இருந்த பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களைப் பழைய மாணவர்சங்கத்தின் தலைவராக்கியபொழுது அதனை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. அப்பொழுது யுத்தத்தின கோரப்பிடியில் எமது மண் இருந்தபொழுது, பொருளாதாரத் தடைகள்,கல்வி உபகரணங்களை எடுத்துவருவதற்கான தடைகள் ஏற்படுத்தப்பட்டதுடன், கல்லூரி வளர்ச்சிக்கான நிதியும் இல்லாது இருந்தது. அந்தக் காலத்திலேயே அதிர்ஷ்டவசமாக கனடாவில் இருந்த எங்கள் கல்லூரியின் பழைய மாணவர்களான வசந்தகுமார், சொர்ணலிங்கம் போன்ற ஆற்றல் மிக்க பொறியியலாளர்களையும் ஏனைய பழைய மாணவர்களையும் இணைத்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கத்தின் கிளையை ஸ்தாபித்து அதனூடாக நிதி சேகரிக்கும் நடவடிக்கையை கலாநிதி வசந்தகுமார் முன்னெடுத்தார். இதற்காகக் கனடாவிலேயே மிகவும் புகழ்பெற்றிருந்த ஒரு கலைநிகழ்ச்சி என்று பெயர் எடுத்த "வானவில்" நிகழ்ச்சியை ஒவ்வொருவருடமும் நடத்தி அதன்மூலம் பலஇலட்சக் கணக்கான நிதியைச் சேகரித்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்கு அனுப்பி வைப்பதில் முன்னினறு உழைத்த ஒரு பெருந்தகையாவார். 1992 ஆம் அண்டில் இக் கல்லூரியின் அதிபராக நான் பொறுப் பேற்றகாலத்தில் கனடா பழையமாணவர் சங்கத்தினரால் அனுப்பிவைக்கப்பட்ட நிதியில் இருந்தே எமது கல்லூரியை மீண்டும் எல்லாத் துறைகளிலும் கட்டிஎழுப்ப ஒரு தூண்டுதலாக இருந்தது. அந்தநேரம் கலாநிதி வசந்தகுமாரும் அவரது நண்பர்களும் எங்களின் கல்லூரிக்கு வழங்கிய பெருமளவு நிதியே கல்லூரியை மீண்டும் முதல் நிலைக்குக் கொண்டுவரமுடிந்தது. அந்தவகையில் கலாநிதி தம்பிராஜா வசந்தகுமார் அவர்களின் தன்னலமற்ற உழைப்பு இருந்தது.

கனடாவில் அவர் வாழ்ந்தகாலத்தில், தனது சொந்த வாழ்க்கையின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தியதை விட தாயகத்திலும், கனடாவிலும் வாழும் தமிழர்களின் கல்வி, கலை, பண்பாடு, பொருளாதாரம் போன்ற ஒவ்வொரு துறைகளிலும் தமிழர்கள் சிறந்தோங்க வேண்டுமென்பதற்காக பல்வேறு வகைகளிலும் அயராது உழைத்த ஒரு உன்னதமான மனிதராகத் திகழ்ந்தார். குறிப்பாகக் கனேடியத் தமிழ் வர்த்தக சம்மேளனத்தில் தன்னை இணைத்துக் கொண்ட நாளில் இருந்து அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டதுடன், தேவையான நிதிப்பங்களிப் பையும் வழங்கி, கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் வளர்ச்சியில் ஒரு நீண்ட பாரம்பரியத்தைக் கட்டி எழுப்பவும் காரணமாக இருந்தவர். அதேவேளை கொம்பியூற்றெக் கல்லூரி (Computek College) என்ற கல்வி நிறுவனத்தை உருவாக்கி அதன்மீதான நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கையை வளர்த்து அடுத்த தலைமுறையிடம் கையளித்து தமிழ் வர்த்தகர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

வர்த்தகத் துறையிலும், தமிழர்களின் பொருளாதாரவளர்ச்சியிலும் காட்டிய அத்தமான அக்கறையைப் போன்று கனேடியக் கலைத்துறையிலும், கல்வித் துறையிலும் அவர்காட்டிய அக்கறையும் செயற்பாடும் மிக உன்னதமானது. கனேடியத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் வினாடி வினா நிகழ்ச்சியின் தொகுப்பாளராக இருந்து வாரம்தோறும் நடத்திய நிகழ்ச்சிகளின் மூலம் தமிழ்த்தொலைக்காட்சி நேயர்களிடம் உயர்ந்த மதிப்பைப் பெற்றிருந்த வசந்தகுமார், தான் ஒரு பொறியியலாளர் என்பதற்கும் மேலாகப் பல்துறை ஆற்றல் உள்ளவராகத் தன்னை இனங்காட்டி இளம்தலைமுறையினருக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்.

கனேடிய மண்ணில் தனது சேவையின் காரணமாக சிறந்த பொருளியல் நிபுணர் என்ற வகையில்கனேடிய வர்த்தக சம்மேளனம் அவருக்கு விருது வழங்கிக் கௌரவித்தது காலம் அறிந்து செய்த ஒருபணியாகும் அதேவேளை வருடாவருடம் இகுருவி நிறுவனத்தினால் நடத்தப்பட்டுவரும் இகுருவி இரவு நிகழ்ச்சியின் முதலாவது நிகழ்வு 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்றபொழுது, அதனைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துக் கௌரவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மற்றவர்களின் அற்றல்களை மனம் திறந்து பாராட்டி அவர்களை ஊக்குவிக்கும் நல்லமனம் படைத்த கலாநிதி தம்பிராஜா வசந்தகுமார் அவர்கள் எங்களை விட்டுப் பிரிந்து விட்டார் என்பதை எங்களால் எண்ணிக்கூடப் பார்க்கமுடியவில்லை... இன்றும் எங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருப்பதாகவே நினைத்துக்கொண்டு முதலில் எங்களை நாங்களே ஆறுதல் படுத்திக்கொள்வோம்.

அவரது பிரிவு தாயகத்தில் உள்ள எங்கள் கல்விச் சமுகத்திற்கும், கனேடியத் தமிழ் சமூகத்திற்கும் ஏற்பட்ட ஈடுசெய்யப்படமுடியாத மிகப்பெரும் இழப்பு. அன்னார் தமிழ் சமூகத்திற்கான ஆணிவேர்களில் ஒருவராக சமூக ஆர்வலராக ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. அவற்றை யார் இனிமேல் தொடரப் போகின்றார்கள் என்பதை நினைக்கும் பொழுது அங்கே ஒருவெறுமைதான் தெரிகின்றது...!

அன்னாரது பிரிவில் துயருறும் அவரது மனைவி மற்றும் குடும்ப உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் சார்பிலும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சார்பிலும் எங்கள் ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வல்வை. ந. அனந்தராஜ்
முன்னாள் அதிபர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
துணைத் தலைவர், பழைய மாணவர் சங்கம்


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
28
01
1938



ஆண்டவன் அடியில்
28
06
2020

## திருமதி. அன்னலக்சுமி துரைராஜா

யாழ்ப்பாணம் 2ம் ஒழுங்கை பலாலிவீதியை வசிப்பிடமாகவும், ஸ்யாபரோவில் வாழந்துவந்த திருமதி. அன்னலக்சுமி
துரைராஜா அவர்களின் ஓராண்டு நினைவு அஞ்சலி.
நான் வாழ்ந்த முதல் வீடு அம்மாவின் கருவறை..
நான் அமர்ந்த முதல் சிம்மாசனம் அம்மாவின் மடி..
நான் தூங்கிய முதல் பாய் அம்மாவின் புடவை
நான் போர்த்துக் கொண்ட முதல் போர்வை அம்மாவின் அரவணைப்பு
நான் சீவிய முதல் சீப்பு அம்மாவின் கை விரல்கள்
நான் பாடிய முதல் பாட்டு அம்மா
அம்மாவை இழந்து இவ் அத்தனையும் பெறமுடியுமா அம்மாதான் எம் தெய்வம்
அம்மா என்ற உறவு அற்பதமானது, அன்புடன் தான் வளர்த்து
அறிவையும், பண்பையும் நிறைத்து
வளமான வாழ்க்கையை, வளமார உளமார வாழ்த்திட
வாழ வைத்த அன்புத் தெய்வமே
அம்மா பூ உலகிலிருந்து விடைபெற்று, விண்ணுலகம் விரைந்தீர்களோ
எங்கள் மனமெல்லாம் தங்களின் தங்கமான நல்வாசம் வீசிட விரைந்த உங்கள் ஆத்மா நன்னிலையில் சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்
பட்டதுயர் மாறவில்லையம்மா, உன் அன்பும் தீரவில்லை
சுற்றும் பூமிகூட ஒருநாள் நிற்கலாம். மங்காத உங்கள் சிரிப்பு மனதை விட்டகலாது அம்மா
தந்தையில்லா குறை தெரியாமல், தரணியில் எம்மை தவழ்ந்திட வைத்த அம்மா
அரவணைபும், பிள்ளைகளை பற்றிய சிந்தனைகளையும் மனதில் சுமந்து பார்போற்ற வாழ வைத்த அம்மா
அம்மா உன் குட்டிப்பேரன் அப்பம்மா எங்கே என்று தேடுகின்றான்
பெறாமகள் கவிதா பெரியம்மாவின் பாசமும், அன்பும் எங்களை சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றது.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து, பிரிவால் துயருறும்**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி லைசனிகா**

**தொடர்புகள்:**
வவா 077 271 8744 (இலங்கை), கலா 0740 6369 (இலங்கை)
ராஜி 647-656 1286 (கனடா), சிறி 647-294 4491 (கனடா)
ரகு 647-624 2006 (கனடா), பாஸ் 416-559 9050 (கனடா)
பவானி 905-947 1245 (கனடா), மோகன் 0766 826513 (இலங்கை)
கரன் 416- 624 2897 (கனடா). துளசி 647-721 3273 (கனடா)

# கண்ணீர் அஞ்சலி




# கலாநிதி த. வசந்தகுமார் (கனடா)

மாற்றம் ஒன்றுதான் மாறாதது மரணம் ஒன்றுதான் நிலையானது
இறப்பு என்பது எல்லோருக்கும் உள்ளது என்ற உண்மை எவருக்கும் தெரிந்தது
மலையென நிமிர்ந்து நின்ற மனித நேயன் வசந்த குமார் மறைந்தனன் என்ற சேதி
இடியென எம்செவியில் விழுந்த போது இடிந்துதான் போனோம் உண்மை
கடிதென வந்த காலன் கவர்ந்தனன் சிறந்த கல்விமான் எங்கள் வசந்த குமாரை
தோன்றின் புகழொடு தோன்றுக_அகிதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.'

கல்விவளமும் கலைவளமும் கலந்துரையும் கவினுறு ஊராம் உடுப்பிட்டியில் வந்துதித்த வசந்தகுமார் 'இளமையிற் கல் சிலையில் எழுத்தாய்' சிறுவயது முதல் கல்வியில் சிறந்து விளங்கி தான் கல்வி கற்ற உடுப்பிட்டி அமரிக்க மிஷன் கல்லூரிக்கு பெருமை சேர்த்ததுடன் தன்னையும் கற்றவர் மத்தியில் கலங்கரை விளக்காய் நிலை நிறுத்தினார் பேச்சுப்போட்டிகளிலும் தனக்கென தனி முத்திரை பதித்த கலாநிதி வசந்தகுமார் 'கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை' தான் பெற்ற கல்வியறிவை கொண்டு தன் மொழிக்கும் தன் இனத்திற்கும் ஈடிணையற்ற பணியாற்றி 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கும் கற்றனைத் தூறும் அறிவு' ஒரு ஊரின் நடுவில் இருக்கும் நன்னீர் கேணியில் எப்படி மக்கள் அனைவரும் சென்று பயனடைவார்களோ அவ்வாறே தான் கற்ற கல்வியினால் ஈழத்திலும் புலத்திலும் அளவிட முடியாத அரும் பணிகளை ஆற்றியவர் கலாநிதி வசந்தகுமார் என்றால் மிகையல்ல. கனடாவில் காலடி பதித்த நாள் முதல் கணணி அறிவை அனைவரும் பெறவேண்டும் என்ற பெருவிருப்போடு அவரால் உருவாக்கப்படதுதான் கம்பியூற்ற ரெக் (Computek College) என்ற கல்வி நிறுவனம் அதுவுமன்றி SACEM என்ற அமைப்பினை உருவாக்கி அதனூடாக பல்வேறு நற்பணிகளை ஆற்றியவர் கலாநிதி வசந்தகுமார் கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளனத்தில் (CTCC) இணைந்து அதன் வளர்ச்சிக்காக தன்னலமற்ற தொண்டாற்றியவர் நான் சங்கத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட காலம் முதல் என் கனவுகளை நனவாக்க தோளோடு தோள் நின்ற நல்ல நண்பன். எமது சம்மேளனம் சில இறுக்கமான மிகக் கடினமான காலப்பகுதிகளில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்ட சமயங்களில் 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப என் துயர் துடைக்க துணிச்சலோடு பணியாற்றியவர் மேலும் என் நீண்ட காலக் கனவான எங்கள் சம்மேளனத்திற்கு என்று ஒரு நிரந்தர கட்டிடம் வாங்கவேண்டும் என்ற கனவை நனவாக்க ஒரு தொகை பணத்தை முதலீடு செய்ததோடு நிற்காமல் அதற்கான ஆலோசனைகலாகட்டும் செயற்பாடுகளாகட்டும் அவருக்கு நிகர் அவரேதான் இன்று நாம் எங்கள் இலக்கை அடைந்து விட்டோம் மிக விரைவில் எமது புதிய கட்டிட திறப்புவிழா கோலாகலமாக கொண்டாடப்படவிருக்கின்ற இந்த வேளையில் கலாநிதி வசந்தகுமார் எங்களோடு இல்லை என்பது ஏற்கமுடியாத ஒன்றாகும் ஆனாலும் அவர் அன்றைய தினம் தோன்றாத் துணையாய் எங்களோடு துணை நிற்பார் என்ற எண்ணம் எங்கள் எல்லோருக்கும் உண்டு கலாநிதி வசந்தகுமாரின் நாமம் வீசும் காற்றும் வீழுகின்ற மழைத்துளியும் வாழுகின்ற காலம் வரை வாழும் நம்மோடு அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கிறேன்.

*அன்னாருக்கு என் இதயபூர்வமான அஞ்சலிகள்*

இங்ஙனம்:
**சாந்தா பஞ்சலிங்கம்**
தலைவர்- கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்

Please join us for a Tribute for Dr. Tham Vasanthakumar on June 19, 2021
at 5:00 PM Eastern Time (US and Canada) by Zoom.

Zoom Meeting ID: 925 3998 1440
Passcode: 967207

Friends and Family are welcome to attend. After registering,
you will receive a confirmation email containing information about joining the meeting.

**For more information, please contact Santha at (416) 200-5470.**


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160


PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!
RE/MAX
Four Sixteen Whitby Condos
Old Colony Estates
Falconcrest Homes
Hillsborough
Andrin Homes
Anchor Woods
Regal Crest Homes
Anchor Woods By Andrin Homes
Andrin Homes
Hometown Sharon Village
Blue Sky
Fieldgate Homes
Universal City Condos 4
Chestnut Hill Developments
U.C. Homes
Tribute Communities
Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.
On the Mark Towns
Angus Glen South Village Homes
Victory Green Homes
Remington Homes
Nao Towns
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# மத்திய அரசு, எதிர்க்கட்சிகள் என இருதரப்பிலும் முக்கியத்துவம் பெற்ற ஸ்டாலின் டெல்லி பயணம்

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது டெல்லி வருகையில் மத்திய அரசு, எதிர்க்கட்சிகள் என இருதரப்பிலும் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளார். எனினும், அவரது டெல்லி பயணத்தில் பிரதமர் நரேந்திர மோடி உடனான சந்திப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. சமீபத்தில் நடந்து முடிந்த 5 மாநில சட்டப்பேரவை தேர்தலில்மேற்கு வங்கத்திற்கு அடுத்தபடியாக தமிழகமும் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. இந்த தேர்தலில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியிடம் எதிர்பாராத தோல்வியும் திமுகவிடம் ஏமாற்றமும் பாஜகவுக்கு கிடைத்தது. இதன் தொடர்சியாக மேற்கு வங்கத்தில் வெள்ள பாதிப்பு களை பார்வையிடச் சென்ற பிரதமர் நரேந்திர மோடியுடனான முதல்வர் மம்தாவின் சந்திப்பு முறையாக நடைபெறவில்லை.

தமிழக முதல்வர் ஸ்டாலின் உடனான சந்திப்பும் இதுபோல ஆகி விடக்கூடாது என்பதில் பிரதமர் மோடி கவனமாக இருந்துள்ளார். இதை உணர்த்தும் வகையில், தன்னை சந்திப்பதற்கு ஸ்டாலின் கேட்ட தேதியை ஒதுக்கியதுடன் அவரை உற்சாகமாக வரவேற்று பிரதமர் மகிழ்வித்திருந்தார். வழக்கமாக இதுபோன்ற சிறப்பு வரவேற்பு தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கு கிடைத்தது உண்டு. இதன் பின்னணியில் திமுகவை தனக்கு இணக்கமாக வளைப்பது பிரதமர் மோடியின் தந்திரம் என தேசிய அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். திமுகவை இழுக்க முயற்சி இதுகுறித்து டெல்லியின் மூத்த அரசியல்வாதிகள் கூறும்போது, "அதிமுகவில் நிலவும் உட்கட்சி குழப்பங்களால் பாஜக அதிருப்தியாக உள்ளது. அதேசமயம், புதிதாக ஆட்சி அமைத்த திமுகவுக்கு பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இதற்கு மத்திய அரசால் மட்டுமே உதவ முடியும்.

இதை செய்வதற்காக பாஜக தனது கூட்டணியில் திமுகவை இழுக்க முயற்சிக்கிறது. இதற்காக திமுக அரசின் கோரிக்கைகளில் சில உடனடியாக ஏற்கப்படலாம். இதைச் செய்தால்தான் மத்திய அரசும் தமிழகம் மீதான இணக்கமான அரசாக



தன்னை முன்னிறுத்த முடியும். பாஜகவுக்கு தமிழகத்தில் நிலவும் கடும் எதிர்ப்பு காரணமாக அதனுடன் திமுக கூட்டு சேராவிட்டாலும் ஏதோ ஒருவகையில் மத்திய அரசுடன் நல்லுறவை வளர்க்கும் வாய்ப்புகள் உள்ளன. அதேசமயம், எதிர்க்கட்சிகளை அனுசரித்து செல்லவேண்டிய கட்டாயமும் ஸ்டாலினுக்கு உள்ளது" என்றனர். தேசிய அளவிலான எதிர்க்கட்சிகளில் திரிணமூல் காங்கிரஸூக்கு அடுத்தபடியாக திமுகவுக்கு முக்கியத்துவம் கிடைக்கிறது. தேர்தல் வெற்றிக்கு பிறகான இந்த மாற்றத்தின் மூலம் திமுக தலைவர் ஸ்டாலின் தன்னை மேலும் வளர்த்துக்கொள்ள விரும்புகிறார்.

இதற்காக அவர் எதிர்க்கட்சித் தலைவர்கள் உடனான தனது சந்திப்பை பிரதமருக்கு அடுத்ததாக அமைத்திருந்தார். தம்மிடம் பிரதமர் மோடி தெரிவிக்கும் கருத்துகள் சிலவற்றை எதிர்க்கட்சித் தலைவர்களிடம் பரிமாறிக் கொண்டு தனது முக்கியத்துவத்தை உயர்த்திக்கொள்ள அவர் விரும்பியதாகத் தெரிகிறது. எதிர்க்கட்சிகளின் விருப்பம்எதிர்க்கட்சித் தலைவர்களும், பிரதமரிடம் முதல்வர் ஸ்டாலின் முதலில் பேசுவதையும் அதற்கு பிரதமர் அளிக்கும் பதிலை அறிவதிலும் அதிக ஆர்வம் காட்டினர். இதனால், பிரதமர் மோடியை முதல்வர் ஸ்டாலின் பார்த்த பின்பே அவரை சந்திப்பது என எதிர்கட்சித் தலைவர்கள் திட்டமிட்டிருந்தனர். இந்த விருப்பத்துடனேயே முதல்வர் ஸ்டாலினும் இருந்துள்ளார்.

முதல்வர் ஸ்டாலினின் டெல்லிபயணம், ஒவ்வொரு மாநிலத்திலும் புதிதாக பதவியேற்கும் முதல்வர்களின் வழக்கமான பயணம் போன்றதே ஆகும். இதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து சிறப்பு செய்தியாக்க திமுகவினர் பெரும் முயற்சி எடுத்திருந்தனர். ஸ்டாலினை டெல்லியில் வரவேற்க தமிழகத்திலிருந்து திமுக எம்.பி.க்களும் வந்திருந்தனர். கரோனா தொற்று காரணமாக திமுகவின் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவால் வரமுடியவில்லை எனத் தெரிகிறது.முதல்வர் ஸ்டாலின் வருகைக்கு முன்பாக வெளியான பல புதிய தகவல்கள் திட்டமிட்டு பரப்பப்பட்டவை ஆகும். இதில் கூறியபடி அவர் மத்திய அமைச்சர் எவரையும் சந்திக்கவில்லை. எனினும், டெல்லியில் முதல்வர் ஸ்டாலின் நடவடிக்கைகள் அவரது தனித்துவத்தையும், தேசியத் தலைவர் என்பதை உணர்த்தும் வகையிலும் இருந்தன. இவருடன் மனைவி துர்கா ஸ்டாலினும் வந்திருந்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

சோனியாவுடன் இன்று சந்திப்புதேசிய அளவில் முக்கிய எதிர்க்கட்சியாகவும் தங்களது கூட்டணிக் கட்சியாகவும் காங்கிரஸ் இருந்து வரும் நிலையில், அதன் தலைவர் சோனியா காந்தியையும் ஸ்டாலின் இன்று காலை சந்திக்கிறார். இந்த சந்திப்பில் ராகுல் காந்தியும் கலந்து கொள்கிறார். காங்கிரஸின் மற்றொரு முக்கியத் தலைவரான பிரியங்கா வதேராவை சந்திப்பது உறுதி செய்யப்படவில்லை.இதில் முதல்வர் ஸ்டாலினைவரவேற்க தமிழக காங்கிரஸ்பொறுப்பாளர் குண்டு ராவும் டெல்லிக்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதில் பொதுவான கருத்துகளுடன் மாநிலங்களவை உறுப்பினர் பதவியை காங்கிரஸ் பெறுவது குறித்த பேச்சும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் காலியாக உள்ள மூன்று எம்.பி. பதவிகளில், பீட்டர் அல்போன்ஸ், கே.எஸ்.அழகிரி, குலாம் நபி ஆசாத் ஆகியோரில் ஒருவர் தேர்வு செய்யப்படலாம் எனத் தெரிகிறது.

# திருமணத்துக்கு ஒதுக்கி வைத்த ரூ.37. 50 லட்சத்தை கரோனா நலப் பணிகளுக்கு வழங்கிய மணமகன் குடும்பத்தினர்: திருப்பூரில் நெகிழ்ச்சி

திருப்பூரில் திருமணத்தை எளிமையாக நடத்தி, திருமணத்துக்கு செலவு செய்ய ஒதுக்கி வைத்திருந்த ரூ.37.50 லட்சத்தை மணமகன் குடும்பத்தினர் கரோனா நலப் பணிகளுக்கு வழங்கிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.கொங்கு மண்டலத்தில் செல்வந்தர்கள், திருமணங்களை திருவிழா போல நடத்துவார்கள். தற்போது கரோனா ஊரடங்கால் கடந்த ஓராண்டுக்கு மேலாக இந்தக் கொண்டாட்டங்கள் பெரிதாக இல்லை. இந்நிலையில், திருப்பூர் கரட்டாங்காட்டைச் சேர்ந்த தொழிலதிபர் அருள்செல்வம் மஞ்சுளா தம்பதி, தங்களது மகனின் திருமணத்துக்கு ஒதுக்கி வைத்த தொகையில், ரூ. 5 லட்சம் மட்டும் செலவு செய்துவிட்டு, எஞ்சிய தொகையான ரூ.37.50 லட்சத்தை கரோனா நலப் பணிகளுக்கு வழங்கியுள்ளனர்.



இது தொடர்பாக தொழிலதிபர் அருள்செல்வம் செய்தியாளரிடம் கூறியதாவது: எனக்கு 2 மகன்கள். மூத்தவர் அருள் பரத். அவருக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.50 லட்சம் செலவு செய்து, திருப்பூரில் திருமணம் செய்தோம். இளையவர் அருள் பிரனேஷூக்கு, மணமகள் அனுவை கடந்த 14ம் தேதி வட்டமலை அங்காளம்மன் கோயிலில், இரு குடும்பத்தார் மட்டும் பங்கேற்று எளிய முறையில் திருமணம் செய்து வைத்தோம். கரோனா தொற்றுக் காலம் என்பதால், திருமணத்தை பிரம்மாண்டமாக செய்யவில்லை. திருமணத்துக்கு என்று சேர்த்து வைத்த தொகையை, அப்படியே கரோனா நலப் பணிகளுக்கு பலரின் துயர் துடைக்க உதவும் என்ற அடிப்படையில் வழங்கிவிட்டோம்.ஒட்டுமொத்த குடும்பத்தின் ஒருமித்த முடிவு இது. எங்களில் யாருக்கும் எந்த நெருடலும் இல்லை. மணமகள் வீட்டார் உட்பட நண்பர்கள், உறவினர்கள் என பல்வேறு தரப்பிலும் வரவேற்கவே செய்தனர். மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இந்த திருமணம் அமைந்துள்ளது என பலரும் தொடர்ந்து பாராட்டி வருகிறார்கள்.

இது எங்களுக்கு ஆத்ம திருப்தியை தந்துள்ளது.ஏற்கெனவே மூத்த மகன் திருமணத்தில் மொய்ப்பணமாக வசூலான ரூ.8 லட்சத்து 90 ஆயிரத்துடன், நாங்கள் கூடுதலாக ஒரு லட்சத்து 10 ஆயிரம் போட்டு, திருப்பூர் ஸ்மார்ட் சிட்டி ரோட்டரி கிளப் மூலம், போலியோ ஒழிப்பு பணிகளுக்கு நிதி வழங்கினோம். எனது தந்தை பழனிசாமி, மற்றவர்களுக்காக வாழ வேண்டும் என்பார்.

அதனை தொடர்ந்து செய்து வருகிறோம் என்றார் மிகுந்த நெகிழ்ச்சியோடு. திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு எதிரில் உள்ள ரோட்டரி கரோனா கேர் மையத்துக்கு ரூ.5 லட்சம், பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கரோனா மையத்துக்கு ரூ.11 லட்சம், புஞ்சை புளியம்பட்டியில் கட்டப்பட்டு வரும் முதியோர் இல்லத்துக்கு ரூ.2 லட்சம், பாரப்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளி வளர்ச்சிக்கு ரூ.5 லட்சம், திருப்பூர் வடக்கு ரோட்டரி சங்கத்தின் வாயிலாக பல்லடம் அரசு மருத்துவமனையில் உள்ள சிகிச்சை மையத்துக்கு ஐ.சி.யூ யூனிட் அமைக்க ரூ.7.66 லட்சம், கரோனா பாதித்து மருத்துவ செலவுகளை சமாளிக்க முடியாமல் தத்தளித்த 8 குடும்பங்களுக்கு ரூ.7 லட்சம் என, ரூ.37 லட்சத்து 66 ஆயிரத்தை வழங்கி உள்ளனர்.

தவிர, கரோனா நலப் பணிகளுக்காக சிலர் உதவி கேட்க கூடுதலாக ரூ.14 லட்சத்தை வரும் வாரத்தில் வழங்கவும் திட்டமிட்டுள்ளனர். பொதுவாக திருமணங்கள் முடிந்தால் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வாழ்த்துவார்கள். ஆனால், இவர்களின் செயலை அறியும் இதயங்களும் புதுமணத் தம்பதியரையும், குடும்பத்தையும் மனதார வாழ்த்துகிறார்கள்.

## பப்ஜி மதனை விரைவில் கைது செய்வோம்: காவல் ஆணையர் சங்கர் ஜிவால் தகவல்

பெண்களை அவமதிக்கும் வகையில் வீடியோ வெளியிட்ட பப்ஜி மதனை விரைவில் கைது செய்வோம் என்று காவல் ஆணையர் சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார். பெண்களை அவமதிக்கும் வகையில் வீடியோ வெளியிட்ட விவகாரத்தில் பப்ஜி மதனின் மனைவியை சேலத்தில் வைத்து கைது செய்துள்ளோம். அவரது வீட்டில் இருந்து செல்போன், டேப்லட், கணிணி ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளோம். அதை ஆய்வு செய்து வருகிறோம். மதன் தலைமறைவாக உள்ளார். அவரை தீவிரமாக தேடி வருகிறோம். விரைவில் கைது செய்வோம். மதனைப் போல் வேறு சிலரும் இதேபோல் ஆபாச வீடியோக்களை பதிவு செய்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதுகுறித்தும் விசாரித்து வருகிறோம். திருமணம் செய்வதாக கூறி ஏமாற்றியதாக நடிகை அளித்த புகாரில் முன்னாள் அமைச்சர் மணிகண்டன் மீதான வழக்கு தொடர்பாகவும் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் ஆணையர் என்.கண்ணன், காவல் கட்டுப்பாட்டு அறை துணை ஆணையர் ராமர், நுண்ணறிவு பிரிவு துணை ஆணையர்கள் எஸ்.விமலா, கே.□தர் ஆகியோர் உடனிருந்தனர். மதனின் வங்கி கணக்கு அவரது பணப் பரிவர்த்தனைகளையும் போலீஸார் ஆய்வு செய்து வருகின்றனர்.

# ஒரு சனநாயகத்தில் மக்களுக்கு அவர்கள் தகுதிக்கு ஏற்ப அரசாங்கம் கிடைக்கிறது!

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை இழந்துள்ளார்கள். இன்றைய எரிபொருள் அதிகரிப்பு என்பது பொதுமக்கள் மீதான நிதிச் சுமையை அதிகரிக்கப் போகிறது. இது அரசாங்கத்தின் செயலற்ற தன்மைக்கு ஒரு முக்கிய குறிகாட்டலாகும்" என ஐதேக குற்றம் சாட்டியுள்ளது.

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதால் பேருந்துகள் பயணக் கட்டணம் உயரும் என எதிர்பார்க்கலாம். ஏற்கனவே அரிசி, மாப்பால், மரக்கறி போன்ற விலைகள் அதிகரித்துள்ளன.

எரி பொருட்களின் விலையை ஏற்றிய கையோடு அரசாங்கம் 399 ஆடம்பர வாகனங்களை **(Toyota Land Cruisers)** இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்துள்ளது. நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் தொகை 225 மட்டுமே. மிகுதி 174 வாகனங்கள் யார் யாருக்கு என்பது புரியவில்லை. இவற்றின் பெறுமதி ரூபா 3.7 பில்லியன் ஆகும்.

கோவிட் -19 தொற்றுநோயால் ஏற்பட்ட நிதி சிக்கல்களின் பின்னணியில், 399 வாகன இறக்குமதியை இரத்து செய்வதாக பிரதமர் அலுவலகம் அறிவித்த போதிலும், அமைச்சர் இரம்புக்வெல வங்கிகள் மூலம் கடன் கடிதங்கள் திறக்கப்பட்டுள்ளதால் வாகனங்களின் இறக்குமதியை ஒருதலைப்பட்சமாக இரத்து செய்வது முடியாத ஒரு காரியம் என்பதனை அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

இந்தச் சொகுசு வாகன இறக்குமதிக்கு எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. ஒப்புக்கு எங்களைக் கேட்காமல் இந்தச் சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகிறது என்று மட்டும் சொன்னார்கள். இந்த ஒரு விடயத்தில் மட்டும் ஆளும் கட்சி - எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இருப்பதில்லை!

எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல சிங்கள - பவுத்த மக்களிடம் இருந்தும் எந்தவிதமான எதிர்ப்பையும் காணோம். பவுத்த தேரர்களும் அப்படித்தான். ஒரு தேரர் மட்டும் விதிவிலக்கு. அவர் பெயர் முருந்தெட்டுவே ஆனந்த தேரர். சனாதிபதி தேர்தலில் கோட்டாபய இராசபக்ச அவர்களை ஆதரித்துப் பரப்புரை செய்தவர். நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டுக் கட்சி ஆதரவாளர். இப்போது அரசாங்கத்துக்கு கடுமையான தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் காரணமாக நாடு எந்த இடத்திற்குத் தள்ளப்படுமோ என்கிற அச்சம் எமக்குள் ஏற்பட்டிருக்கின்றது. இதனிடையே மக்கள் ஆத்திரமடைந்தால் என்ன செய்வார்கள் என்றே தெரியவில்லை.

எக்ஸ்பிரஸ் போர்க் கப்பல் தீப்பிடித்து எரிந்து பின்னர் அதிலுள்ள இரசாயனங்கள் மற்றும் பொருட்கள் கடலில் கலந்ததினால் நூற்றுக்கணக்கான கடல்வாழ் உயிரினங்கள் இன்று இறந்த நிலையில் கடற்கரையில் மீட்கப்படுகின்றன.

இது குறித்து இராசாங்க அமைச்சர் பேராசிரியர் நாலக்க கொடஹேவா வெளியிட்ட கருத்து நகைப்பிற்குரியதாகும். கடல் வாழ் உயிரினங்களின் சூழ்ச்சியே இதற்குக் காரணம் என அவர் கூறுவது வேடிக்கையாகும்.

ஆட்சிக்கு வந்த அத்தனை அரசாங்கங்களும் ஆட்சிக்காலத்தில் எரிபொருள் விலைகளை அதிகரித்தன. அவ்வாறு அதிகரிக்கப்படுவதற்கான கால, நேரம் தகுதியாக அமைந்ததாக உள்ளது. இருப்பினும் தற்போதைய அரசாங்கம் அதனைக் கவனிக்காமல் எரிபொருள் விலையை அதிகரித்திருக்கின்றதை ஏற்க முடியாது.

அமைச்சர் உதய கம்மன்பில தனித்து எடுத்த முடிவாக இதனைக் கருதவும் முடியாது. அமைச்சரவை அங்கீகாரத்துடன் எடுக்கப்பட்ட தீர்மானமாகும் என்பதால் அமைச்சரவையிலிருக்கின்ற அத்தனை அமைச்சர்களும் இதற்கான பொறுப்பினை ஏற்கவேண்டும். அதேபோல தற்போதைய அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் காரணமாக நாடு எந்த இடத்திற்குத் தள்ளப்படுமோ என்கிற அச்சம் எமக்குள் ஏற்பட்டிருக்கின்றது.

இதனிடையே மக்கள் ஆத்திரமடைந்தால் என்ன செய்வார்கள் என்றே தெரியவில்லை. வீதிப் போராட்டங்களை நடத்தும் அளவுக்கு மக்களைத் தள்ளிவிட வேண்டாம். அவ்வாறு தள்ளிவிடும் பட்சத்தில் ஆட்சியிலுள்ள தற்போதைய அரசாங்கத்தின் ஆயுட்காலம் அன்றே கடைசியாகும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். தெரிந்து கொண்டு சென்றால் கதிர்காமம், தெரியாமல் சென்றால் நடுத்தெருவுதான் என்று மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகின்ற பழமொழியொன்று உள்ளது. இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவர தெரியாத்தனமாக ஆதரவளித்துவிட்டோம். அதனால் நாங்களும் இன்று பயணத்தை முழுமையாக முடிக்க முடியா அளவில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளோம்.

அரசியலில் ஒரு பொன்மொழி உண்டு. ஒரு சனநாயகத்தில் மக்களுக்கு அவர்கள் தகுதிக்கு ஏற்ப அரசாங்கம் **(In a democracy the people get a government they deserve)** கிடைக்கிறது. இது இலங்கைக்கு அச்சொட்டாகப் பொருந்தி வருகிறது.





கடந்த வருடம் Ekuruvi Steps போன்று இந்த வருடமும் ஜூன் 1 ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்

10,000 Steps Per Day to 1 Million steps over 100 Days வரும் ஜூன் 01 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 06 வரை நூறு நாட்கள், நாள் ஒன்றுக்கு 10,000 காலடிகள் என்று இலக்கு கண்காணிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து உங்கள் உடல் உள அரோக்கியதை மேம்பெடுத்துவது மட்டுமல்லாது சமூகத்தையும் புத்துணர்ச்சியுடன் உங்களுடன் கொண்டுசெல்ல இணைந்து நடக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் .

BMI யைக் குறைத்து உடல் எடையைப் பேணுவது, நீரிழிவு, இருதய நோய் என்பவற்றை வராது தடுப்பது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது என்று பல பயன்களைக் கொண்ட இந்த நடைப்பயிற்சியைத் தொடர்ந்து 100 நாட்கள் என்று இலக்கு நிர்ணயித்து நிறைவேற்றுவதன் மூலம், நாளடைவில் அதுவே பழக்கமாகி உடல் ஆரோக்கியம் மேம்பட உதவும்.

இந்நிகழ்வில் இணைந்து கொள்ளும் ஒவ்வொருவரும் எங்கள் Whatsapp "Ekuruvi Steps 2021" இன் குழுமத்தில் இணைத்து ஒவ்வொரு நாளும் நீங்கள் நடக்கும் கால் நடைகளின் எண்ணிக்கையை ( 8,000 இலிருந்து 10,000 வரை ) பதிவிடவேண்டும் . அது எங்களால் தொடர்ச்சியாக 100 நாட்கள் கண்காணிக்கப்படும்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக, தாயகத்தில் வட, கிழக்கு மற்றும் மலையகம் எங்கும் கோவிட 19 காலத்தில் பொருளாதார கடும் நெருக்கடியை எதிர்வுகொள்ளும் ஆதரவற்ற மக்களுக்கு உதவுமுகமாக திரு ஆறுதிருமுருகன் ஐயாவின் வழிநடத்தலில் " சிவபூமி அறக்கட்டளை" யை ஒரு குறியீட்டு அமைப்பாக நாம் இந்த வருடம் ekuruvi Steps 2021 நேரடியாக உங்கள் பங்களிப்பை செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

உங்கள் உதவிகளுக்கு

SIVAPOOMI TRUST, KONDAVIL, JAFFNA | COMMERCIAL BANK JAFFNA | ACC . NO : 1060016510 | SWIFT CORD - CCEYLKLX

கனடாவிலிருந்து WWW.REMITBEE.COM இனூடாக அனுப்புவர்களுக்கு உதவியாக REMITBEE நிறுவனமும் உங்களது ஒவ்வொரு பரிமாற்றத்துக்கு $5 கனேடியன் டொலர்களை, சிவபூமி அறக்கட்டளைக்கு அனுப்பவுள்ளார்கள் . இத்துடன் வேறு கூடுதல் கட்டணம் எதுவும் அறவிடமாட்டார்கள் . PROMO CODE "EKURUVI2021"

அன்புடன்
நவஜீவன் அனந்தராஜ்



# கலையாத நினைவுகளில் கலந்திருக்கும் கனடாவின் ‘கலாநிதி’ வசந்தகுமார்

சில நாட்களுக்கு முன்னர் கனடாவில் இயற்கையெய்திய பொறியியல் கலாநிதி த. வசந்தகுமார் அவர்களின் நினைவாக எழுதப்பெற்ற ஆக்கம் இது - *பிரதம ஆசிரியர்*

**- மொன்றியால் வீணைமைந்தன்**

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது**



என ஐயன் வள்ளுவப் பெருமான் எழுதிச் சென்றதைப் போல, தம்மைவிடத் தம்முடைய மக்கள் அறிவுடையவர்களாக விளங்குவது உலகத்திலுள்ள உல்லா மனிதருக்கும் இயற்கையாக இன்பம் பயப்பதாகும் என கலாநிதி வசந்தகுமார் அவர்களின் பத்து வயதே நிரம்பாத அவரது புதல்வியின் சொல்வீச்சு மன்றத்தில் குழுமியிருந்த அவைனவரையும் பரவசம் கொள்ள வைத்தது.

ஆம்! தொன்னூறுகளின் ஆரம்பத்தில் என்னால் ஆரம்பிக்கப்பெற்ற “மொன்றியால் - கனடா கலாச்சாரச் சங்கம்” தனது வருடாந்த வாணி விழாவை முன்னிட்டு நடத்திய மொன்றியால் - ரொறன்ரோ - ஒட்டாவா ஆகிய நகரங்களில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கான சொல்லரங்கப் போட்டிகளை அறிமுகம் செய்து உற்சாகமூட்டிய காலமது!. ஆண்டுதோறும் எங்கள் “கலாநிதி” அவர்கள் தனது புதல்வியை இப்போட்டிகளில் கலந்து கொள்ள வைப்பதற்கு தவறாது மொன்றியால் நகருக்கு அழைத்து வருவார்.

இவ்வாறு தான் எனக்கும் அவருக்குமான தோழமை ஆரம்பித்து வளரத் தொடங்கியது.

உடுப்பிட்டி வாழ் ஆசிரியர்களான தம்பிராஜா தம்பதியின் சான்றோனாகப் பிறந்த கலாநிதி வசந்தகுமார் அவர்கள் வடமராட்சியில் வசந்தமென வீசி வந்த “வானவில்” நாயகன். உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் “கசடறக் கற்ற கல்வியாளன்”.

கனடாவில் தந்தையார் தம்பிராஜாவின் முதல் மூன்று எழுத்துக்களால் கனடியத் தோழர்கள் மத்தியில் TAM என மிளிர்ந்த அன்புத் தோழர் வசந்தன் அவர்களை எந்த கோணத்தில் வியந்து பாராட்டுவது என்பது சிரமமாகவே தெரிகின்றது.

“சேக்கம்” அமைப்பாலே மக்களைச் சேர்த்து வைத்து, முதியோர்களுக்காக ஆண்டுதோறும் சோர்வகற்றும் நிகழ்வுகள். நோக்கம் இது புதிது என எமது எழுத்தாளர் இணையத்தை கௌரவவித்தும் ஊக்குவித்தும் நின்ற முதல் தமிழ்க் கனேடியர் வசந்தனின் நற்பண்பு மறப்போமா நாங்கள்?

என்றும் இனியவர் என்றும் புதியவர்
என்றும் அஞ்சாதவர் என்றும் இளையவர்
என்றும் எளிமையிவர் என்றும் தமிழரிவர்
கனடியத் தமிழர்க்கு முன்னோடி மின்னறிஞர்
நன்றாகத் தமிழ் பேசி நல்ல சேதி சொல்லிடுவார்
பண்பு மிகு தமிழ் மகனாய் பாரதியின் சீடரிவர்
“வானவில்” வண்ணம் போல் ஏழிசை இரசிகனாய்
இசைக் கலாமன்றத்தின் இனிய தோழரிவர்

கொம்பியூரெக்’ கலாசாலையின் மேன்மை மிகு நிறுவனர்
கணணித்துறை உயர் ஆசான் கனிவு மிகக் கொண்டவர்
பன்நாட்டு மாணவர்க்கு துரோணராய்ச் சிறந்த மகான்
எந்நாடு சென்றாலும் சிகரம் தொடுகின்ற அறிவியற் பெருமகன்
கலைத் தொண்டு திருத்தொண்டு தணியாத பொதுத் தொண்டு
கல்விச் சாலைகளில், தொழிற் கூடங்களில் தொலைக் காட்சி ஊடகத்தில்
பேச்சுரையால் சமூகத்தை நெறிப்படுத்தும் வல்லோன்
மருத்துவச் சாலைக்கு மனமுவந்து நிதி வழங்கி நின்று
மத இணக்க வழிபாட்டில் மனமொன்றி இறைத் தொண்டு
தமிழர் வர்த்தக சம்மேளனம் வளர்ந்திட ஒரு தூணாய் நின்று..
எத்தனைத் தளங்களில் தன் முகம் காட்டி மகிழ்ந்தவர்

கன்றனைய பசுவினைப் போல் கருணை முகம்
காண்பதற்கு என்ன தவம் செய்தோமோ

காகிதத்தில் அச்செழுத்தில் புதினங்கள் தருவோர்க்கு
மோகித்துப் பொருள் தந்து
காலத்தால் பெற்ற புகழ் நிலமிசை நீடுவாழும்!

“பாமரர்க்கும் கணணி” யெனக் கல்வியைப் புகட்டி வைத்து
இன மத பேதமின்றி எல்லோர்க்கும் இந்நாட்டில் இருப்பிற்கு
வளம் சேர்க்க வழி சமைத்து
சாமரை வீசி நிற்க சரஸ்வதி மகன் ஆனார்
தாமரைச் செல்வியிடம் சரண் புகுந்த
மாணாக்கன் வசந்தகுமார் புகழ் வாழியவே!

அறமுடைத்த இல்வாழ்வும் புறம் சொல்லாக் குணவியல்பும்
திறம் படைத்த தமிழ் நாவும் கருவினிலே திருவுடைத்த
கார்மேகக் கண்ணனை நினைவூட்டும் கணணியாளன்
கனடியத் தமிழறிஞன் புகழ்பாடி விடை கொடுப்போம்

வான்வெளியில் ‘வானவில் தோன்றுங்கால் நம் வசந்தனும்
அங்கொரு வண்ணமென எந்நாளும் எம்முன்னே விளங்கிடுவார்




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
roted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

(சென்ற வார தொடர்ச்சி...) (அத்தியாயம் 16)

## கல்கியின் பொன்னியின் செல்வன்

# வந்தியத்தேவனின் தஞ்சைப் பயணம்

அப்போது நந்தினி ‘கோட்டைக்கு வெளியிலாவது அவனை கொண்டு போய் விடு’ என்றபடி வந்தியத்தேவனை அழைத்தாள். அவனைக் காணவில்லை. சுற்றும் முற்றும் நாலாபுரத்திலும் அவனைக் காணவில்லை. ரவிதாசன் லதா மண்டபத்தினுள் இருந்து வெளியேறினான். கடம்பூரில் இருந்து பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டைக்குத் திரும்பினான். வழக்கமாக அவரின் தம்பி சின்னப்பழுவேட்டரையர், காலாந்தகண்டர் தன் அண்ணனை வரவேற்க கோட்டை வாயிலில் நிற்பார். ஆனால் அவரால் அங்கு போக முடியவில்லை. அதனால் பெரியபழுவேட்டரையர் தன் தம்பியிடம் வந்தார். அப்போது காலாந்தக கண்டர் கவலையுடன் பரபரப்புடன் இருந்தார். தம் தமையனைக் கண்டதும் வணக்கம் செலுத்தி மார்புடன் தழுவினார். பின்னர் மாளிகைக்குள் சென்று மந்திராலோசனை மண்டபத்தினுள் பிரவேசித்தார்.

பெரியபழுவேட்டரையர் சக்கரவர்த்தியின் சுகம் விசாரித்தார். பின்னர் ‘உன் கவலைக்கு என்ன காரணம்’ என்றார். அதற்கு சின்னப் பழுவேட்டரையர் ‘இங்கு சிறு சம்பவம் நடந்து விட்டது. முதலில் நீங்கள் சென்ற காரியம் வெற்றியா? யார் யார் வந்தார்கள்? சம்மதம் சொன்னார்கள்’ என்று வினாவினான். அதற்கு பெரிய பழுவேட்டரையர் ‘நான் சென்ற காரியம் முழு வெற்றி நாம் அழைத்தவர்கள் யாவரும் வந்திருந்தார்கள். எல்லோரும் ஒரு முகமாக உன் மகளின் கணவனான உன் மருமகன் மதுராந்தகனே அடுத்த பட்டத்திற்கு உரியவர் என ஆமோதித்தனர். திருக்கோவிலுள்ள மலையமான், பல்லவன் பாத்திபேந்தன், கொடும்பனூர் வேளான் இந்த மூவரும் எதிர்க்கலாம். உடனே நான் சக்கரவர்த்தியிடம் சென்று இதனை முடிவு செய்ய வேண்டும்’ என்றார். ‘ஜனங்கள் ஆட்சேபித்தால்’ என்றார் காலகண்டர். பழுடேட்டரையர், ‘ஜனங்களைக் கேட்டா இராஜகாரியங்கள் செய்வது? நாம் நினைப்பதை செய்வது தான் அவர்கள் எதிர்த்தால் அவர்களிற்கு செய்ய வேண்டியவற்றை செய்வோம். தற்பொழுது நல்ல சந்தர்ப்பம் அருள்மொழி இங்கில்லை இலங்கை சென்றுள்ளார். ஆதித்த கரிகாலரிடம் மக்கள் பிரியமில்லை குந்தவைக்கோ, வானமாதேவிக்கோ எனக்குப் பயமில்லை. அவர்கள் பெண்கள் தானே? எப்படியாவது மதுராந்தகரை இளவரசர் பட்டம் கட்டி சிம்மாசனத்தில் சகல அதிகாரங்களுடன் ஏற்றி வைக்க வேண்டும். அது என்ன இங்கு நடந்த சிறிய சம்பவம்?’ என்று பழுவேட்டரையர் கேட்டார்.

‘அதுவா காஞ்சியில் இன்று சக்கரவர்த்திக்கும் குந்தவைக்கும் ஓலை கொண்டு வந்தான் ஓர் இளைஞன். கடம்பூரில் உங்களை பார்த்த கணம் நீங்கள் அவனுக்கு முத்திரை மோதிரம் தந்ததாகவும் காட்டினான். மேலும் அவன் கொண்டுவந்த ஓலைகளைப் படித்தேன். அதில் ஒன்றும் இல்லை அவனே சக்கரவர்த்தியை சென்று பார்த்தான் ஓலைகளைக் கொடுத்தான். பின்னர் கோட்டையை சுற்றிப பார்க்க விரும்பினான். அவனை இரு வீரர்களுடன் அனுப்பினேன். எங்கேயோ தப்பிச் சென்று விட்டான்’ என்றார் சின்னப் பழுவேட்டரையர். ‘அட சீ நீயும் ஒரு மனிதனா மீசை முளைத்து என்ன பயன்? உன்னைக் கோட்டைத் தளபதி ஆக்கியது என் முட்டாள் தனம்’ என்று கடிந்தார். அதற்கு சின்னப்பழுவேட்டரையர், ‘உங்கள் முத்திரை மோதிரம் எப்படி அவன் கைக்கு வந்தது? நீங்கள் கொடுக்காவிட்டால் யார் கொடுத்தது? இளைய ராணியாகத்தான் இருக்க வேண்டும்’ என்றார். பழுவேட்டரையர், ‘ஜாக்கிரதை உன்னை வெட்டிக் கொன்றிடுவேன். நீ எந்தக் காரியம் பற்றியும் அபிப்பிராயம் சொல். ஆனால் நான் மணந்து கொண்டவள் பற்றி எந்தக் குறையும் சொல்லாதே!’ என்றார். பின்னர் ஆவேசம் கொண்டவராய் தன் மாளிகைக்குத் திம்பினார்.

அப்போது நள்ளிரவு தாண்டி விட்டது. மாளிகை வாசலில் வரவேற்க நந்தினி அங்கு இருக்கவில்லை. அவள் லதா மண்டபத்தில் இருப்பதாக தெரிந்து கொண்டார். ‘ஏன் இன்னும் லதா மண்டபத்தில் இருக்கிறாள்? அடிக்கடி அங்கு செல்கிறாள் யாரோ மந்திரவாதி வருகிறார். என்னிடம் முத்திரை மோதிரம் வாங்கிக் கொள்கிறாள். நான் கல்யாணம் செய்தும் பிரமச்சாரியாக இருக்கிறேன். இவற்றை இவளிம் கேட்டுத்தான் ஆக வேண்டும்’ என்று தீர்மானித்தார். அந்தத் தருணம் நந்தினியும், அவள் தோழியரும் பழுவேட்டரையரின் அரண்மனை வாசல் வந்தனர். நந்தினி கோபத்துடன் வந்தாள். பழுவேட்டரையரைப் பார்த்து, ‘நீங்கள் வெளியூரில் இருந்து திரும்பி வந்தீர்கள் நேரே இங்கு வராது உங்கள் தம்பியைச் சந்தித்துவிட்டு வருகிறீர்கள்’ என்று கோபித்தாள். அதற்கு பழுவேட்டரையர், ‘எனக்கு என்ன சந்தோக்ஷமா? எடுத்த காரியம் பெரிய காரியம் அதை நிறைவேற்ற சகித்துக் கொள்கிறேன் அதுவும் உன் யோசனைப் படிதான் நடந்தது’ என்றார். அதற்கு நந்தினி ‘மனைவியின் கடமையைத் தானே செய்தேன்’ பழுவேட்டரையர், ‘நீ அதுமட்டுமா செய்தாய்? இந்த மதுராந்தகன் உடல் எல்லாம் விபூதியை பூசிக் கொண்டு, ருத்திராட்சை மாலை அணிந்து, நமசிவாய செபம் செய்து கொண்டிருந்தார். கோயில் குளம் என்று சொல்லிக் கொண்டு என் அம்மாவின் பிள்ளை நான்தான் என்றான், அவனை அரசாள ஆசை உண்டாக்க நாங்கள் பலர் போய் முயன்றும் முடியவில்லை. ஆனால் நீ இரு தடவை அவனுடன் பேசினாய். இப்போது எனக்குத் தான் சோழ ராஜ்ஜியம் உரியது என்கிறான் மதுராந்தகன்’. நந்தினி, ‘இவையெல்லாம் அந்த பழையாற்றிலுள்ள பெண் பாம்பிற்கு பாடம் கற்பிக்கவே செய்கிறேன். ஏன் இந்தக் கிழவனை மணந்து கொண்டாய் என்று என்னிடம் கேட்டானே’ பழுவேட்டரையர் ‘அவனை என்ன செய்கிறேன் என்று பார்? என்று கோபத்தைக் கக்கினான். மதுராந்தகரிற்கு பட்டம் கட்ட எல்லோரும் சம்மதம் தெரிவித்தார்கள். ஆனாலும் காரியம் முடியும் வரை நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். காஞ்சியில் இருந்து வந்த வாலிபன் ஒருவன் என் தம்பி காலாந்தகனை ஏமாற்றி விட்டு சக்ககரவர்த்திக்கு ஓலை கொடுத்தானாம். அவன் என் முத்திரை மோதிரத்தை காட்டினானாம். ஏமாந்து போனான் என் தம்பி. அவன் தப்பிச் சென்று விட்டான். அவனைப் பிடிக்க கோட்டைக்கு உள்ளும் வெளியும் தேடல் முயற்சி ஆரம்பித்து விட்டார்கள்’ என்றார் பழுவேட்டரையர். இதற்கு நந்தினி, ‘மதுராந்தகன் பட்டத்திற்கு வந்தால் மட்டும் என் விரதம் முடியாது என்னைக் கைப்பிடித்து மணந்து கொண்ட கணவர், மணிமகுடம் தரித்து மகா சாம்ராஜ்ஜியத்தின் சிம்மாசனத்தில் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் வந்து அடிபணிந்து ஏத்தும் சக்கரவர்த்தியாக வீற்றிருக்க வேண்டும்!’ என்று பழுவேட்டரையர் கண்களைப் பார்த்துக் கூறியதும், பழுடேட்டரையர் முன் யாவுமே சுழன்றது.




நந்தினி வந்தியத்தேவனை லதா மண்டபத்தில் இருட்டில் ஒழிந்திருக்குமாறு கூறினாள். பின்பு மந்திரவாதி ரவிதாசனுடன் உரையாடிய பின் வந்தியத்தேவனைத் தேடினாள். அவன் அங்கு இருக்கவில்லை. அவன் எங்கே போனான் என்று பார்ப்போம். அந்த லதா மண்டபத்தில் ஓர் இருள் அடைந்த மாளிகை இருந்தது அந்த மாளிகைக் கதவுகளை திறக்க் வந்தியத்தேவன் முற்பட்டான். அது திறந்து கொள்ள அவன் அதற்குள் சென்றான். அந்த மாளிகையில் இருந்து எப்படியாவது வெளியே போக வேண்டும் என்று நடக்கத் தொடங்கினான். கார் இருள் கண்களைக் குருடாக்க குருடனைப் போல் ஒரு திசையில் கைகளை நீட்டிக் கொண்டு நடந்தான். மிகுந்த பயம் அவனை ஆட்கொண்டிருந்தது. என்ன செய்வது காரியத்தில் இறங்கியாகி விட்டதே! என்றபடி நடந்தான். நந்தினியின் மோகன வலையில் சிக்குவதைப் பார்க்கிலும் இந்த இருள் பெரியதல்ல என்று எண்ணினான். ‘ஆ வெளிச்சம்! இது எங்கிருந்து வருகிறது? என்று உற்று நோக்கினான். பின்னர் காலடிச் சத்தமும் கேட்டது. உடனே அவனிற்கு பாதாளச் சிறை இங்கு தான் இருக்கிறது என்பது ஞாபகத்திற்கு வந்தது அந்த பயங்கரமான சிறையில் என்னைப் போடுவார்களே! என்று எண்ணியபடி சற்று மறைந்து இருந்து உற்றுப் பார்த்தான் நந்தினி அவனைத் தேடி வருகிறாள் அவள் பெண் இங்கு ஆண்மகன் போல் தெரிகிறதே! நன்றாகப் பார்த்தான். அப்பொழுது என்ன வியப்பு! தன் நண்பன் கந்தமாறனும், இளவரசர் மதுராந்தகரும், வெளிச்சத்தைப் பிடித்துக் கொண்டு ஒரு வீரனும் அங்கு வந்தனர். ஏன் இங்கு வருகிறார்கள்?’ என்ற சிந்தித்தான். ‘ஆம் ஆம் இவர்கள் கடம்பூரில் இருந்து வருகிறார்கள் மதுராந்தகன் மூடு பல்லக்கில் மறைந்து அங்கு வந்தார் அல்லவா? அவரை இந்தப் பாதையில் தான் அழைத்து சென்றார்கள் போலும். இப்பொழுது அவரை மீண்டும் திருப்பிக் கொண்டு வர கந்த மாறன் உதவுகிறான். அது தான் அவன் நானும் தஞ்சைக்குப் போக வேண்டும் என்று சொன்னான்’ என்று பதிலைக் கண்டு கொண்டான். ஓளிந்திருந்து பார்த்தான் பின்னர் அவர்கள் சென்ற பின் தன் வழியைக் கண்டு கொள்ள முயன்றான்.

மீண்டும் மங்கல ஒளி அவனை வந்தடைய, ‘இது என்ன ஒளி’ என்று நோக்கினான். மணி மகுடங்கள், முத்து மணி வைரமும் பதித்த மகுடங்கள், முத்து வடங்கள், நவரத்தின மாலைகள், பொற் காசுகள், தங்கக் கட்டிகள், எனப் பளபளத்தன! வந்தியத்தேவன் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். அப்போ இது தான் தஞ்சை அர்ணமனையில் நிலவறைப் பொக்கிஷம். தனாதிகாரி மாளிகையை ஒட்டி உள்ளது! என்று வியப்பில் ஆழ்ந்தான். குபேரனை மிஞ்சி விட்டதே இந்தப் பொக்கிஷம்! முத்துக்கள் நிறைந்த செப்புப் பானையில் கைவிட்டு அளைந்தான். பொற் காசுகளை அள்ளிச் சொரிந்தான். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்று கொடிய ஆசைகளும் என்னை இன்று சுற்றிப் பிடிக்கிறது! நந்தினி தேவி அவள் மோகம், எனக்கு என் நாட்டைத் திரும்பப் பெற்றுத் தருவதென்றாள், இப்பொழுது இந்தப் பொக்கிஷம்! இதில் இருந்து எப்படித் தப்புவது? வழி தெரியவில்லையே! என்று தவித்தான். பசிக்கு உணவும், இருக்க இடமும், உடுத்த உடையும் போதுமானதே! ஏன் இந்தத் தொல்லைகள், சூழ்ச்சிகள்! அழகிய ஆனந்த வாழ்க்கை இயற்கை தந்தது! நாம் அதனை நாடுவதே சாலச் சிறந்தது என்று முயன்று வெளியே வந்தான். அப்போது மீண்டும் காலடி ஒசை. இரு புறமும் கேட்டது. கவனமாக உற்றுப் பார்த்தான். ஓரு புறம் பெரியபழுவேட்டரையரும், நந்தினி தேவியும், மறு புறம் கந்தமாறனும், வெளிச்சம் பிடித்த வீரனும் இவர்கள் இங்கே ஏன் வருகிறார்கள்? என்று பார்த்துக் கொண்டிருந்தான். நான்கு பேரும் சந்தித்தனர். வியப்பு எதுவும் இல்லை கேள்வி பதில்கள் பரிமாறப்பட்டது. என்ன கதைத்தார்கள் என்பது வந்தியத்தேவன் காதில் விழவில்லை. பின்னர் பழுவேட்டரையர் வெளிச்சம் பிடித்த வீரனைப் பார்த்து. தன் கைகளால் ஏதோ சமிக்ஞை செய்தார். அவனும் பதில் சமிக்ஞை செய்தான். மீண்டும் தங்கள் வழி நடந்தனர். வந்தியத்தேவனும் கந்தமாறன் சென்ற வழியில் செல்லத் தொடங்கினான். இவன் பின்னால் சென்றால் வெளியேறும் வாசலைக் கண்டு கொள்ளலாம் என்று தீர்மானித்தான். கந்தமாறன் சுரங்கப் பாதையின் இரகசிய வாசலை அடைந்தான். அப்பொழுது வெளிச்சம் பிடித்த காவலன் தன் அரையில் செருகியிருந்த கத்தியை எடுத்து கந்தமாறனின் முதுகில் குத்தினான். வந்தியத்தேவன் ஒரே பாய்ச்சலில் சென்று அந்த வீரனைத் தாக்கி கீழே வீழ்த்தினான். கந்தமாறனைக் காப்பாற்ற முயன்றான் கந்தமாறனை இழுத்து வெளியில் எடுத்தான். தன் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு மறு கையில் கந்தமாறனின் வேலை எடுத்துக் கொண்டு நடந்தான். ஆற்றங் கரையோரம் மிக அவதானமாக நடந்து ஆற்றைக் கடந்தான். கந்தமாறனுக்கு உயிர் இருக்கிறது என்று அறிந்து கொண்டு, எப்படி இவனைக் காப்பாற்றுவது அன்று சிந்தித்தான். அப்பொழுது சேந்தன் அமுதன் ஞாபகம் வந்தது. உடனே கந்தமாறனை தன் தோளில் போட்டுக் கொண்டு வெகு வேகமாக சேந்தன் அமுதன் வீடு நோக்கி நடந்தான். அவ்வேளை விழித்துக் கொண்ட கந்தமாறன், ‘வந்தியத்தேவா பின்னால் நின்று முதுகில் குத்தும் அற்ப சிநேகிதன் நீயாகி விட்டாய்’ என்ற கூறினான். ‘மேலும் உன்னைக் காப்பாற்ற சுரங்கப் பாதையில் வந்தேன் நீ என்னைக் குத்திவிட்டாய் இது தான் உன் நட்பா?’ என்று கூறியபடி மூச்சயர்ந்தான். வந்தியத்தேவனனின் உள்ளம் நடுங்கியது. இருந்தும் கந்தமாறனை சேந்தன் அமுதன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். சேந்தன் அமுதன் வீட்டை நெருங்கிய போது அவர்கள் மலர் தோட்டம் அழிந்து இருப்பதைக் கண்ட வந்தியத்தேவன் தன்னைத் தேடி காலாந்தர ஆட்கள் இங்கு வந்திருப்பதை அறிந்து கொண்டான். அதனால் பொதுவாக உள்ளே சென்று அமுதனுடன் உரையாடினான். கந்தமாறனை அங்கு விட்டு விட்டு அமுதனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான். ‘நான் குந்தவை தேவியை பார்க்க பழையாறை போக வேண்டும் எனக்கு வழி காட்டு’ என்று கேட்டுக் கொண்டான். இருவரும் இரு குதிரைகளில் ஏறி பயணித்தனர். வீரர்கள் குதிரைச் சத்தம் கேட்டு அவர்களைத் தொடர்ந்து போனார்கள். கந்தமாறனைச் சேந்தனின் அம்மா கவனித்து, காயங்களிற்கு பச்சிலை மருந்து வைத்துக் கட்டினாள்.

(தொடரும்...)

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

# கனடிய வார இதழ் உதயன் படைக்கும்

## மலேசிய மாணவர் குரல்



நக்கீரன்

கோலாலம்பூர், ஜூன் 17:



மலேசியத் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் பங்குபற்றும் இயங்கலை ஊடான பேச்சுப் போட்டி, கனடாவின் முதன்மை வார ஏடாகவும் இணைய ஏடாகவும் ஒருசேர பவனி வருகின்ற உதயனின் ஏற்பாட்டு ஆதரவில் 27-06-2021 ஞாயிறு மாலை மலேசிய நேரம் 7:00 மணி அளவில் நடைபெற இருக்கிறது.

இதன் தொடர்பில் சிலாங்கூர், ரவாங்கைச் சேர்ந்த பாடகரும் தொழில்முனை - வருமான ராஜா, அதே வட்டாரம் பத்து ஆராங்கைச் சேர்ந்த துங்கு அப்துல் ரகுமான் இடைநிலைப் பள்ளி மேநாள் துணை முதல்வரும் மலேசியத் தேர்வு வாரிய முன்னாள் அதிகாரியும் இடைநிலைப் பள்ளி மாணாக்கர்களின் தமிழ் - தமிழிலக்கியப் பாட பயிற்றுநருமான இராஜேந்திரம் பெருமாள் அவர்கள் ஆகிய இருவரும் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

இதற்காக கெடா, பகாங், சிலாங்கூர், பேராக், நெகிரி செம்பிலான் ஆகிய ஐந்து மாநிலங்களில் இருந்து ஒரு மாணவர் வீதம் ஐந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பெரும்பாலும் உட்புறப் பகுதி அல்லது தோட்டப்புற மாணவர்களே அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் இதன் தொடர்பில் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் ஐந்து மாணவர்தம் பெற்றோரும் இசைவு தெரிவித்துவிட்டதாகவும் திருவாளர்கள் ரவாங் ராஜாவும் இராஜேந்திரமும் தெரிவித்தனர்.

உதயன் இதழின் பிரதம ஆசிரியரும் நீண்ட கால பத்திரிகையாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் அறிமுக உரையாற்றி தொடக்கி வைக்கவுள்ள இந்த "மலேசிய மாணவர் குரல்" என்னும் நிகழ்ச்சியில் முதல் பங்கேற்பாளராக கோல கெட்டில், மலாக்கோ.ஃப் தோட்ட தமிழ்ப் பள்ளியின் ஆறாம் ஆண்டு மாணவி கீதா சண்முகமும், அடுத்ததாக லஞ்சாங் தோட்ட தமிழ்ப் பள்ளி மாணாக்கர் மதேஷ் ராவ் சம்பமூர்த்தியும் மூன்றாவது போட்டியாளராக கோல சிலாங்கூர் ராஜ மூசா தோட்ட தமிழ்ப் பள்ளி மாணவி அஷ்வினா சந்திரசேகரும் நான்காவதாக உலு பேராக் கெரிக் எஸ்.கே.கே. தமிழ்ப் பள்ளி மாணவர் சூர்யா கண்ணனும் ஐந்தாவதும் நிறைவுப் போட்டியாளராகவும் போர்ட் டிக்சன் தானா மேரா தமிழ்ப் பள்ளி மாணவி கிசாலினி பாலமுருகனும் கலந்து கொள்ள இருக்கின்றனர்.





ஏறக்குறைய கடந்த 15 மாதங்களாக, கொரோனா நச்சில் பரவல் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு, இணையவழி வகுப்புகளின் மூலமே பாடங்களுக்கான பயிற்று நடவடிக்கை நடைபெற்று வருவதை உலகெங்கும் பார்க்க முடிகிறது. அதற்கேற்ப மலேசிய மாணவர்களும் குறிப்பாக தமிழ்ப் பள்ளி மாணவர்களும் இடைநிலைப் பள்ளி இந்திய மாணவர்களும் தங்களை தக அமைத்துக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்த இராஜேந்திரம், தமிழ் மாணவர்கள் பலதரப்பட்ட போட்டிகளில் கலந்து வெற்றியும் பெற்று வருகின்றனர் என்று குறிப்பிட்டார்.

ஆனாலும், நகர்ப்புற மாணவர்களுக்கே பெரும்பாலன வாய்ப்பு கிட்டுவதால், கனடா உதயன் இதழின் ஏற்பாட்டு ஆதரவில் நடைபெறவுள்ள இந்த நாவன்மைப் போட்டியில் கலந்து கொள்ள தோட்டப்புற தமிழ்ப்பள்ளிகளில் இருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று முன்னாள் ஆசிரியரான இராஜேந்திரம் விளக்கம் அளித்தார்.

"கொரோனா கால கட்டத்தில் என் கல்வி அனுபவம்" என்னும் தலைப்பில் ஐந்து மாணவர்களும் 7 நிமிடங்களுக்கு உரையாற்றுவர். மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்தம் வரலாற்றில் முதல் முறையாக வெளிநாட்டுத் தமிழ் ஊடக ஆதரவில் நடைபெறும் நிகழ்ச்சியாக இது அமையும் என்று நிகழ்ச்சி நடத்துனருமான இரேஜேந்திரம் பெருமையாகக் குறிப்பிட்டார்.



கனடா, டொரொண்டோ பெருநகரில் வாழும் புலம்பெயர் தமிழர்தம் கரங்களில் வெள்ளிக்கிழமைதோறும் தவழும் முன்னிலை வார இதழாகவும் உலகத் தமிழர்களை இமைப்பொழுதுதோறும் பிணைக்கும் இணைய ஏடாகவும் பவனி வரும் உதயனையும் மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களையும் இணைக்கின்ற இந்த மாணவர் குரல் நிகழ்ச்சிக்கு பொறுப்பேற்று பெரும்பங்காற்றி வரும் பாடகர் ராஜா, சம்பந்தப்பட்ட ஐந்து பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களான திருமதி. மு. உதயமலர், திரு. க. மோகனராஜ், திரு. செ. பாண்டியன், ஜெ. பாலச்சந்திரன், திரு. கோ. மோகன் ஆகிய ஐவரும் வழங்கிய ஆதரவிற்கும் ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவித்தார்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் முதல் நிலை, 2-ஆம் நிலை, 3-ஆம் நிலை வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பின், ஏனைய இருவருக்கும் ஆறுதல் பரிசு என அனைவருக்கும் பணப் பரிசு அளிக்கப்படும் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் ஆதரவு நிறுவனமான உதயன் இதழின் பிரதம ஆசிரியரும் தெரிவித்துள்ளனர்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**








**Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள்**
**கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்!**

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை Flex Institute நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities**. வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்த விதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது On The Spot Consultation சேவை. எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University.** போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது Flex Institute வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.

ஆலோசனைகளை தவிர IELTS பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனடிய கனவு நனவாகும். என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- **இலவச ஆலோசனை**
- **புலமைப்பரிசில்கள்**
- **1000க்கும் மேற்பட்ட கல்வித்திட்டங்கள்**

Student Visa, Student Dependent, Business Visa, Family Visit Visa, Super Visa requirements சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.

Are You Looking For
**Canada**

- **Student Visa**
- **Visit Visa**
- **Rejected visa**
- **Business visa**
- **Super Visa**
- **Tourist Visa**

**Call us on: 0777 761 346**

flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06.
**Hotline: 0777 761346**
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

*10 வருட கால நம்பிக்கையான சேவை*



# இவ்வார ராசிபலன்

**18-06-2021 வெள்ளி தொடக்கம் 24-06-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** வாடும் நிலை விலகி, வீடும் நிலமும் வாங்கக் கூடிய அற்புதமான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,S




**ரிஷபம்:** தொழில் வகையில் மேன்மையும், தொகை தொகையாய் லாபமும் சேரக்கூடிய அற்புதமான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மிக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மசக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M




**மிதுனம்:** தொழில் வகையில் மேன்மையும், தொகை தொகையாய் லாபமும் சேரக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y, D




**கடகம்:** குடும்ப மகிழ்ச்சியும், குபேர சம்பத்தும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். முகப் பொலிவு கூடும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,4,5,2
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,N




**சிம்மம்:** மெல்லிய ஆசைகள் கண்ணியத்தோடு நிறைவேறக்கூடிய அற்புதமான வாரம். தனவரவு பெருகும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மருதகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,6
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,S




**கன்னி:** ஆரோக்கியத்தில் திருப்தி கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். உற்சாகம் அலை மோதும். பணக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றம் தெளிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,0,7,1
அதிர்ஷ்ட நிறம், இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,L




**துலாம்:** ஆலய தரிசனத்தால் ஆத்ம பலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: உச்சிபிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,0
அதிர்ஷ்ட நிறம்: வாடாமலலி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,A




**விருச்சிகம்:** அறியாத அதிர்ஷ்டங்களை அறிந்துக் கொள்ளக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,1,7,6
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Y




**தனுசு:** இல்லத்திலும் மற்றவர் உள்ளத்திலும் மதிப்பு உயரக்கூடிய மகத்தான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவிசெல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** சங்கடங்கள் விலகி சந்தோஷம் மிகுதியாகக் கூடிய நல்ல வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** பூமியும், நிலமும் வாங்கக்கூடிய மேன்மையான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வடிவுடைஅம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

---

# கொரோனாவால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்!

## தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற தாயும் குழந்தைகளும் நலமாக வீடு திரும்பினர்



**தூ**த்துக்குடியில் கொரோனா தொற்று மற்றும் மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணி பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் பிறந்தன.

குறைவான எடையில் பிறந்த அந்த 3 குழந்தைகளும், தாயும் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிறப்பு சிகிச்சையால் முற்றிலும் குணம் அடைந்தனர். தாய் மற்றும் குழந்தைகளை அரசு மருத்துவமனை நிர்வாகம் மகிழ்ச்சியுடன் வழியனுப்பி வைத்தது.

இது குறித்து மருத்துவமனை முதல்வர் நேரு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போது கூறியதாவது, "தூத்துக்குடி கோரம்பள்ளத்தை சேர்ந்த ஜஸ்டின்- வித்யா தம்பதியினருக்கு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள் அரசு மருத்துவமனையில் பிறந்தன.

கடந்த 28-ந் தேதி காய்ச்சல் அறிகுறிகளுடன் கர்ப்பிணி வித்யா (வயது 25) சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 30-ந் தேதி உடனடியாக அறுவை சிகிச்சை மூலம் வித்யாவுக்கு பிரசவம் நடைபெற்றது. இதில் அவருக்கு 3 குழந்தைகள் பிறந்தன. பிறந்த மூன்று குழந்தைகளும் எடை குறைவாக ஆரோக்கியத்தன்மையற்று இருந்தன.

இதைத் தொடர்ந்து, மூன்று குழந்தைகளையும் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சிசு தீவிர கவனிப்பு பிரிவில் வைத்து மூச்சுத் திணறல் மற்றும் குறை மாத தன்மைக்கான சிகிச்சை வழங்கப்பட்டது. 7 நாட்கள் தீவிர கண்காணிப்பு பிரிவில் இருந்த குழந்தைகள் நலம் பெற்றதை தொடர்ந்து, மூன்று குழந்தைகளும் 15 நாட்களுக்குப் பிறகு தாயிடம் ஒப்படைக்கப்பட்டன". இவ்வாறு அவர் கூறினார்.

கொரோனா தொற்றிலிருந்து மீண்ட வித்யா கூறும்போது, "மிகவும் ஆபத்தான நிலையில் வந்த நானும் எனக்குப்பிறந்த பச்சிளம்குழந்தைகளும் இந்த மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிறப்பான சிகிச்சையால் குணமடைந்துள்ளோம். என்னை மீட்டதுடன் என் மூன்று குழந்தைகளையும் நல்ல முறையில் தேற்றி எனக்கு கொடுத்துள்ள மருத்துவமனையின் மருத்துவர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**- மணிராஜ், திருநெல்வேலி**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள்

951



## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், கொழும்பு

**"பொன்தயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பில்!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே."**

செந்நெறி, சிவநெறி, நன்னெறி என்றெல்லாம் உலகத்தவர்களால் பாராட்டப்பெறும் பெருஞ்சிறப்புடையது சைவசமயம். சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகத் திகழும் சிவப்பரம்பொருளின் அளப்பெருஞ் கருணையினால், அழிக்கமுடியாத சமயமாக இன்றுவரை சைவசமயம் நின்றுகாணப்படுகின்றது. உலகத்தோற்றத்தோடு வேதமும், வேதநெறிப்பட்ட சிவநெறியும் தோன்றின என்பது, சைவசமயத்தின் தொன்மையை உணர்த்துகின்றது. சைவசமயத்தின் முழுமதற் கடவுளாகச் சிவன் காணப்படுகின்றார். சைவத்தின் கொள்கை இன்னது என்பதனை சாத்திர, தோத்திரங்கள் எடுத்தியம்பியுள்ளன.

ஆறறிவு படைத்தமனிதன் ஆண்டவனை தேடி நாடுவதே சமயம் என அழைக்கப்படுகின்றது. இறைவனை நோக்கி ஏங்கும் உள்ளப்பண்பு, ஏங்கி நிற்கும் உள்ளத்திற்கு இறைவன் காட்டும் பாலிப்பு இவையே, அனைத்து சமயங்களின் சாரமாகக் காணப்படுகின்றது. ஆண்டவனை அடைய வேண்டும் என்ற தாபம், மக்களின் மனதிலே அமைந்ததொரு அகலாத தாபமாக விளங்குகின்றது. போர், வெள்ளம், மாறாத துன்பம் ஆகியன நேரும்பொழுது இறைவன்மீதுள்ள நாட்டம் மிகுதியாகின்றது.

செல்வம் மிகச் சேர்ந்தால், செல்வத்தை மிகையாக நாடினால் மனிதன் அழிவான் என்பது பேரறிஞர் வாக்கு. செல்வச் சிந்தனையில் இறைநாட்டம் நிலை-பெறாது. இன்னல்களும், இடர்களும் தோன்றும்பொழுது ஐம்புல நாட்டத்திற்கு அப்பாற்பட்டு, உயர்ந்தது ஒன்று உண்டு என்ற உணர்வு மக்களிடையே தோன்றுகின்றது. அந்த உணர்வை வளர்பவையாகக் கோயில்கள் காணப்படுகின்றன. கோயில்களிலே அமைந்துள் திருவுருவங்கள், மனித நாட்டத்தை ஒருமைப்படுத்த உதவுகின்றன. கோயிற்சூழலிலே எழுப்பப்படும் ஒலிகள், தெய்வநாட்டத்திற்குள் மனதை ஈடுபடுத்த உதவுகின்றன.

உருவவழிபாடு சைவசமயத்தில் தொன்றுதொட்டு காணப்படுகின்றது. ஆலயங்களை அமைத்து அங்கு திருவுருவங்களை எழுந்தருளச்செய்து, மக்களை தெய்வநாட்டத்தில் ஈடுபடச் செய்து, அதற்கென மரபுகளை சைவசமய சான்றோர்களும், ஆன்றோர்களும் வகுத்துள்ளனர். "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்றுரைக்கின்றது சிவஞானபோதம். உயிரானது தான் சார்ந்த பொரு-ளைச் சாரும் தன்மை கொண்டது. பிறவிப்பிணியில் அகப்பட்டு அல்லல்படும் உயிர்க-ளின் வினை நீங்கி ஈடேற்றம் அடைய, முன்னோர்கள் ஆலயங்களை அமைத்தனர். ஆலயங்கள் அறச்சாலைகளாக, அறிவை வளர்க்கும் நிலையமாக, மனித குலத்தை மேம்படுத்த வல்லவையாகக் காணப்பட்டன.

தமிழர்களின் ஆன்மீகநெறி, சமூகவாழ்க்கை, கலாச்சாரம், பண்பாடு, நுண்கலைகள் ஆகியவைகளின் மையமாக திருக்கோயில்கள், தொடர்ந்தும் மனித வாழ்க்கையை மேம்படுத்துகின்றன. வரலாற்று அறிவுக்கு எட்டிய காலந்தொட்டே தமிழினம், இறைவனைக் கண்ணுக்கினிய பொருளாகக் கொண்டு, திருக்கோலத் திருமேனி அமைத்து வழிபட்டு வருகின்றது. "ஆலயமாக அமர்ந்திருந்தானே" என்றும், "ஐந்தன் பெருமையே ஆலயமாவது" என்றும் திருக்கோயிலின் பெருமையை,

**" நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின், பாடிப்பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே"**

என திருமூலர் விளக்கியுள்ளார். ஆலயவழிபாடு உலகியல் சூழலில் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களைக் கரையேற்றும். மேலும் உயிர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழும் ஈசுவரன் அமரும் இடமாதலின், ஆலயத்தை ஈச்சரம் என்றும் அழைத்தனர். சான்றாக திருக்கேதீச்சரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம், தொண்டீச்சரம், நகுலேஸ்வரம், என்பவற்றைக் கொள்ளலாம்.

இவ்வாறான பெருமைகளோடு விளங்கும் சைவசமயம், ஈழத்தின் ஆதிசமயமாக விளங்குகின்றது. திராவிடஇனத்தின் முதன்மைச்சமயமாக சைவசமயம் ஈழத்தில் விளங்கியுள்ளமைக்கு, ஈழமெங்கும் காணப்படும் பஞ்சஈஸ்வரங்களும், ஏனைய சிவாலயங்களும் சான்றாகக் காணப்படுகின்றன. அந்நியரின் வருகையால் ஈழத்திலே காணப்பட்ட கலைச்செல்வங்களும், சிற்பவேலைப்பாடுகளும், பொருட்செல்வங்களும் கொண்ட சிவாலயங்கள் பல அழிக்கப்பட்டபோதிலும், காலத்தாலும், இயற்கை அனர்த்தங்களாலும் அழிக்கமுடியாதநிலையில், பல்வேறு இனத்தவர்களும் சென்று வழிபடும் சிவாலயமாக கொழும்பிலுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னம்பலவாணேசுவரர் கோயில் காணப்படுகின்றது.

கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் கோயில், கொழும்பிலுள்ள கொச்சிக்கடைப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கோயில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட அழகிய சிற்பவேலைப்பாடுகளைக் கொண்ட கோயிலாகக் காணப்படுகின்றது. ஈழத்தில் இவ்வாறான கருங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களைக் காண்பதரிது. தென்னிந்தியாவிலே காணப்படுகின்ற கருங்கற்பொளிந்த சிற்ப வேலைப்பாடுகளைக்கொண்ட கோயிலுக்கு இணையான கோயிலாக, கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் காணப்படுகின்றது. தென்னிந்தியாவிலுள்ள இவ்வாறான கோயில்களை நாடாண்ட மன்னர்களே கட்டியுள்ளனர். ஆனால் இக்கோயில் ஈழத்திலே வாழ்ந்த சைவப்பெரியாரும், தேசாபிமானியுமான, திருவாளர் அருணாசலம் பொன்னம்பலமுதலியார் என்ற பெருந்தகையினால் கி.பி 1856 ஆம் ஆண்டு கொழும்பு மாநகரிலே கட்டப்பட்டது.

கொழும்பிலுள்ள பிரசித்தமான பகுதியாக கொச்சிக்கடை விளங்குகின்றது. இப்பகுதியிலே சக்திதலமான மாரியம்மன் கோயில் மற்றும் அந்தோனியார் கோயில் என்பன காணப்படுகின்றன. 1856 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தற்போதுள்ளது போல மக்கள் நெருக்கம் அக்காலத்தில் காணப்படவில்லை. ஆயினும் இப்பகுதியில் தமிழ்மக்கள் வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டு கொழும்பு செட்டியார்தெருவில், திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் சிறந்த சிவபக்தராகவும், கொடைத்திறன் கொண்டவராகவும் விளங்கியுள்ளார். கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் 1856 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

*தொடரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
ALL DEBT SOLUTIONS CRP PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# அன்பின் தொனி - 613

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால், கர்த்தர் தாமே நமக்கு பக்கத் திலிராவிட்டால், அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில், நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள். அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து, வெள்ளங்கள் நமது ஆத்துமாவின்மேல் பெருகி, கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்து மாவின்மேல் புரண்டுபோயிருக்கும் என்று இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக. நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம். நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது. **- சங்கீதம் 124: 1-8**

கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள். பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார். நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்கள் கைகளை நீட்டாதபடிக்கு, ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது. கர்த்தாவே, நல்லவர்களுக்கும் இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மைசெய்யும். தங்கள் கோணலான வழிகளுக்குச் சாய்கிறவர்களைக் கர்த்தர் அக்கிரமக்காரரோடே போகப்பண்ணுவார். இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டு. **- சங்கீதம் 125: 1-5**

சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது, சொப்பனம் காண்கிறவர்கள்போல் இருந்தோம். அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்தசத்தத்தினாலும் நிறைந்திருந்தது, அப்பொழுது, கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார், இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம். கர்த்தாவே, தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவதுபோல, எங்கள் சிறையிருப்பைத் திருப்பும். கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான், ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான். **- சங்கீதம் 126: 1-6**

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா, கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா. நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா, அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார். இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான், அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள். **- சங்கீதம் 127: 1-5**

கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள், உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார், நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய். **- சங்கீதம் 128: 1-6**

என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கினார்கள். என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கியும், என்னை மேற்கொள்ளாமற்போனார்கள். உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள். கர்த்தரோ நீதியுள்ளவர், துன்மார்க்கருடைய கயிறுகளை அவர் அறுத்தார் என்று, இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக. சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள். வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக, அது வளருமுன் உலர்ந்துபோம். அறுக்கிறவன் அதினால் தன் கையையும், அரிகளைக் கட்டுகிறவன் தன் மடியையும் நிரப்புவதில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டாவதாக, கர்த்தரின் நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறோம் என்று வழிப்போக்கர் சொல்வது மில்லை. **- சங்கீதம் 129: 1-8**

கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். ஆண்டவரே, என் சத்தத்தைக்கேளும், என் விண்ணப்பங்களின் சத்தத்திற்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக. கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே. உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு. கர்த்தருக்குக் காத்திருக்கிறேன், என் ஆத்துமா காத்திருக்கிறது, அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன். எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப்பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது. இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக, கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு. அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்வார். **- சங்கீதம் 130: 1-8**

கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல, பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை. தாயின் பால்மறந்த குழந்தையைப்போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப்பண்ணினேன், என் ஆத்துமா பால்மறந்த குழந்தையைப்போல் இருக்கிறது. இது முதல் என்றென்றைக்கும் இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக. **- சங்கீதம் 131: 1-3**

தாவீதின் குமாரனும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய சாலொமோனின் நீதிமொழிகள்: இவைகளால் ஞானத்தையும் போத கத்தையும் அறிந்து புத்திமதிகளை உணர்ந்து, விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசததை அடையலாம். **- நீதிமொழி 1:1-4**



- மொன்ரியால் வினைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும் #50

நடிப்புக் கலையின் அவதார புருஷராக விளங்கி வரும் நடிகர் திலகத்தைப் பற்றிய பல்வேறு பரிமாணங்களையும் வெவ்வேறு கோணங்களிலும் பலதரப்பட்ட கலைஞர்களின் பார்வைகளினூடாக இதுவரை காலமும் பார்த்தும், படித்தும் பரவசம் கொண்டோம்.

ஆனால், தகுதிவாய்ந்த ஒரு விமர்சனப் பார்வையினூடாக பார்க்கவில்லையே என்ற குறை தெரிகிறது. விமர்சனங்களையே உரமாகக் கொண்டு சளைக்காமல் சாதனை புரிந்த நமது நடிகர் திலகம் அவர்களைப் பற்றி வெளிவந்த பல்வேறு விமர்சனங்களில் பிரபல பத்திரிக்கையான "ஹிந்து" (The Hindu International) வில் தகுதி வாய்ந்த விமர்சகர் டி ஜி வைத்தியநாதன் அவர்களால் அக்டோபர் 15, 1994 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் எழுதப்பெற்று வெளிவந்த விமர்சனக் கட்டுரையை அப்படியே தமிழாக்கம் செய்து தருவதில் மிக மகிழ்ச்சி அடைகி-றேன்.

தமிழாக்கம் செய்ய உதவி புரிந்த அறிஞர் காலஞ்சென்ற தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் கனகசபாபதி அவர்களுக்கு என் நன்றிகள்.

திரு. வைத்தியநாதன் அவர்களுடைய சில பார்வையுடன் நான் முரண்பட்டுக் கொண்டாலும், அவருடைய முழுமையான கருத்துக்களையும் அப்படியே இம்மியளவும் பிசகாது கீழே தருகிறேன்.



'Sivaji Ganesan Chevalier Extraordinaire' என்ற தலைப்பின் கீழ் வெளியான விமர்சனக் கட்டுரை இதுவாகும்.

'Vive la France' வாழ்க பிரான்ஸ் நாடு! பிரான்சு நாடு இரண்டாவது முறையும் செயல்பட்டுள்ளது. முன்னாள் வங்காள (மேற்கு) தேசத்தின் "சத்யஜித்ரே" இப்போதும் இன்னும் தெற்குபுறமாக வந்து சிவாஜி கணேசனுக்கு "செவாலி-யே" எனும் பெருமைக்குரிய விருது வழங்கி கௌரவித்துள்ளது. நான் அறிந்த அளவிலே பிரான்ஸ் நாட்டின் அதிபர் "மிற்றசன்ட்" (அப்போதைய தலைவர்) அவர்கள் நேரடியாக வந்து பெருமைக்குரிய இயக்குனர் "சத்யஜித்ரே" அவர்கட்கு வழங்கிய விருதிலும் பார்க்க சிவாஜி பெற்ற விருது கூடிய கௌரவமிக்கது! இதயநோய் இருமுறை தாக்கி "வீண தசை"யில் இருக்கும் சிவாஜிக்கு இத்தனை புகழ். சத்யஜித்ரேயும் கூட விருது பெற்ற பொழுது இதய நோயினால் அவதிப்பட்டவரே!

சிவாஜி பல தலைமுறையாக நடிப்பதற்கான ஒப்பனை போட்டாலும் அவர் பிறந்த பொன்னாடு அவர் புகழ் பாடத் தவறிவிட்டது. காலம்சென்ற எம்ஜிஆர் போன்ற தகுதி குறைந்தவர்கள் தேசிய மட்டத்தில் விருதுகள் பெற சிவாஜி அவர்கள் நிராகரிக்கப்பட்டு வந்துள்ளார். பின்னர் காலங்கடந்து "தாதா சாகிப் பால்கே" விருது வழங்கிக் கௌரவிக்கப் பெற்றமை பிந்திய செய்தியாகும்.

1971 இல் எம்ஜிஆர் ரிக்ஷா தொழிலாளியாக நடித்த "ரிக்சாக்காரன்" படத்திற்கும், வயதில் குறைந்த "திறமைசாலியான" கமலஹாசன் 1982 இல் "மூன்றாம்பிறை" யில் நடிப்பதற்கும், 1987 இல் "நாயகனாக" நடித்தற்கும் தேசிய மட்டத்தில் கௌரவம் பெற சிவாஜி தளர்ந்து போய் புழுங்கிக் கொண்டிருந்தார்? (சம்பந்தப்பட்டவர்கள் திட்டமிட்டே புறக்கணித்தார்கள்) இறுதியில் பிச்சை போடுவது போல் இம்மாபெரும் நடிகனின் சிறந்த நடிப்பிற்காக "தேவர் மகன்" திரைசித்திரத்தில் "தேவர்" என்ற பாத்திரத்திற்கு உயிரூட்டியமைக்காக "சிறந்த துணை நடிகர்" என்ற தேசிய அங்கீகாரம் கிடைத்த பொழுது அதைப் பெருந்தன்மையுடன் வெறுத்தொதுக்கியதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. உண்மை என்னவென்றால் சிவாஜி எந்த ஒரு பாத்திரத்தில் நடித்தாலும் அவரே முதன்மை பெறுவார்!

அவர் என்றுமே மற்றவர்கட்க்குத் துணைப் பத்திரமாக நிற்க மாட்டார். மற்றவர்கள் தான் இவருக்கு துணை நடிகர் ஆவார்.

பிரான்சு நாடு பெருமைப்படுத்தக் கூடிய அளவு துலங்கும். இந்த சிவாஜி யார்? தென்னகத்து திரையுலகின் சரித்திரத்தை மீள்பார்வை செய்பவர் யாராயினும் அங்கு "சிவாஜியின் பொற்காலம்" (The Era of Sivaji Ganesan) என்ற வரலாற்றுப் பிரிவு ஒன்றினைக் காணாமல் இருக்க முடியாது. சிவாஜியின் காலத்திற்கு முன்னர் சிறந்த பாடக நடிகர்களான பி யு சின்னப்பா, எம் எம் தண்டபாணி தேசிகரும், 1940 இன் நடுப்பகுதியில் பிரசித்தமான கொலை வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டமையால் நடிப்பிற்கு திடீரென முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய "தியாகராஜ பாகவதர்" போன்றோர் இருந்தனர்.

மிகவும் கஷ்டமான குடும்ப சூழலில் பிறந்த சிவாஜி, சந்தர்ப்பவசத்தால் திடீரென நட்சத்திர அந்தஸ்தைப் பெற முடிந்தது. நாடகம் ஒன்றிலே மாவ-ீரன் சிவாஜியின் பாத்திரத்தை ஏற்று நடிக்க எம்ஜிஆர் மறுத்தமையால் அப்பணி சிவாஜிக்கு வந்தது. ஈ.வே.ரா பெரியாரின் ஆசியுடன் "சிவாஜி" கணேசனுடன் ஒட்டிக்கொள்ள வெறும் வி சி கணேசன் "சிவாஜி கணேசன்" ஆனார். அதன்பின்னர் என்றுமே அவருக்கு பின்னடைவு ஏற்பட்டதேயில்லை. நட்சத்திர அந்தஸ்துக்காக அவருடன் போட்டியிட்ட ஏனைய நடிகர்களின் பெருமூச்சு மாத்திரம் இடையிடை-யே கேட்டது. சிவாஜியின் முதலாவது வெற்றிப்படமான "பராசக்தி"யின் (1952) வெற்றியில் அதிர்ஷ்டம் என்ற பெயருக்கே இடமில்லை. முழுக்க முழுக்கக் கடி-னமான உழைப்பு! நிறைவான நடிப்பு!

"கா.. கா.. கா.." என்று அவர் பாடியதைக் கேட்டவர்களோ நீதிமன்ற விசார-ணையின் போது தன் சகோதரிக்காக வக்காலத்து வாங்கிய "கிறுக்கண்ணா"வின் புயல் என வீசிய சொற் பெருக்கை பார்த்தவர்களோ சுலபத்தில் மறந்திருக்க மாட்டார்கள்.

1954-ல் வெளியான "மனோகரா"வில் இந்தப் புயல் பெரும் சூறாவளியாக மாறியதை பலரும் கண்டிருப்பார்கள். ஆனால், அந்த சிவாஜி என்றுமே என் இதயத்தில் இடம் பெறவில்லை என்கிறார் "ஹிந்து" ரி. ஜி வைத்தியநாதன்!

இயக்குனர் பீம்சிங்குடன் இணைந்து உருவாக்கிய திரைப்படங்கள் தான் சிவாஜி தமிழ் திரையுலகிற்கு அளித்த வரப்பிரசாதம் எனலாம். (1959) "பாசமலர்" இச் சகாப்தத்தை ஆரம்பித்தது. ஆரம்பகால "கண்ணதாசனின்" (இன்றும்கூட எந்தத் தமிழனையும் சொக்கவைக்கும் அற்புதமான கவிதை வரிகள்) கவிதைச்சோலை கைகொடுத்தது. சிவாஜி மிகக் குறுகிய காலத்திலேயே நிறைவான ஒரு நடிகராக பிரகாசித்துள்ளார். ஆனால் இத்திரை ஓவியங்கள் எவையுமே காதல் காவியங்கள் அல்ல!. "பராசக்தி"யிலும் கூட இவரைக் காதல் வயப்படுத்த எத்தனிக்கும் அழகு நிலா பண்டரிபாய் "உன் சகோதரியை அல்ல உலகில் உள்ள எல்லா சகோதரி-களையுமே காப்பாற்ற வேண்டும்", என்பதை ஞாபகப்படுத்தினபடியே இருக்கின்றார்.

"பராசக்தியாய் இருந்தால் என்ன, "பாசமலராய்" இருந்தால் என்ன சிவாஜி பெண்களின் இரட்சகராகவும், பாதுகாவல-ராகவும் பரிணமிக்கிராரேயின்றி அவர்களின் ஆசானாகவோ, அல்லது ஆண்டகையாகவோ துலங்கவில்லை. "பாசமலர்" எனும் திரைக்காவியத்திலே தான் அவரது சிறப்பியல்பான நடிப்பின் முழுமையையும் காணமுடிந்தது. தொழிற்சாலையில் வேலை பார்த்த தோழன் ஒருவனை (ஜெமினி கணேசன்) கைபிடித்த தங்கை மேல் (சாவித்திரி) வைத்த பயங்கர ஆர்வப்பற்றின் காரணமாய் எழுந்த போராட்டங்களின் உணர்ச்சிபூர்வ பிரதிபலிப்பை அங்கு காண முடிந்தது. சகோதரி ஒருத்தரின் கன்னித்துவம், சுய கவுரவம் - போன்ற தென்னக மக்களின் (தமிழ் மக்களின்) குடும்ப விழுமியங்கள் மேற்படி படத்தில் பேணப்படுவதால் தான் சிவாஜியின் நடிப்பு திறனின் மேதகையை உணர்வதற்கு "பராசக்தி" "திரும்பிப்பார்" போன்ற வித்தியாசமான திரைக்காவியங்கள் தேவையாகின்றன.



இந்த பிறவிக்கலைஞன் ஆண்களைப் பொறுத்த மட்டிலே எல்லாம் நிரம்பியவர். ஆனால் பெண்களைப் பொறுத்த மட்டில் எல்லாம் நிரம்பியவர் அல்ல. மேற்கத்திய திரைவானிலே உள்ள இவரை யொத்த நடிகர்களின் சிறந்த காதலர் நடிப்பு சிவாஜியிடம் சற்று குறைவாகவே உள்ளது என்பது உண்மையே!

அந்த நளினம் அவரிடம் இல்லை. Gable திரைப்படத்தில் காணப்பட்ட வீராப்புடன் கூடிய ஒய்யாரமோ அல்லது Boyer திரைப்படத்தில் காணப்பட்ட பெருநிலப் பகுதிக்குரிய மரபு வழக்கத்தைப் பிரதிபலிக்கும் நடிப்போ சிவாஜியிடம் காண முடியாது. அதே போன்றது தான் ஒரு சில இதயங்களைச் சிதறடிப்பது. பல கைகுட்டைகளை நனையச் செய்வதும் அவருக்கு ஒவ்வாதவை. சிவாஜியின் உருவமைப்பு ஒழுங்கற்ற சாய்வான தாடை, சுண்டெலிக்குள்ளது போன்ற சிறிய கண்கள், சாதாரண தென்னிந்திய ஆண்மகன் ஒருவனை நினைவூட்டுமேயின்றி காவியக் காதல் நாயகனாக(?) அவரைக் காண்பிக்கத் தவறுகின்றது.

கவிதை பேசும் கண்களும், நளினமாய் விரைவசைவுடன் கூடிய கால்களுடனும் பத்மினியுடனும், ஏனைய நடிகைகளுடனும் சிவாஜி நடிக்கும் போது பார்க்க சங்கடமாய் இருக்கும்(?).

சிவாஜி அவர்களை நையாண்டி செய்வது போலவோ, ஏளனம் செய்வதும் போன்றோ தெரிவதுடன் பெரும்பொழுது போக்கு விருந்தாக தான் தெரியும்.

இத்தகைய குறைகளை மனதில் கொள்ளாமல் இந்த மாபெரும் நடிகனின் திறன்களை உயர்த்துனர நாம் வேறு பல கோணங்களை அவதானிக்க வேண்டும்.

சிவாஜி நடிக்கும் போது காட்சியில் ஏற்படக்கூடிய மாற்றங்களை விழிப்புணர்வுடன் காத்திருப்பார். அதற்கேற்பச் செயல்படும் அவரிடத்திலே (Bal-let) பாலே நடனக்காரர் ஒருவரில் காணக்கூடிய அனாயாசமான சரிநேர முன்னேற்பாடு (Timing) காணப்படும்.



ஒரு நடிகன் எதனைச் சொல்கிறார். எதை வாசிக்கிறார், எவ்விதம் சிந்திக்கிறார். ஓய்வு நேரத்தை எப்படி செலவு செய்கிறார் யார அவரை புடம் போட்டவர் என்பது பற்றி நிறையவே இக்காலங்களில் எழுதப்படுகின்றன. அதேசமயம் அவர் உடல்வாகு பற்றியோ, தோற்றம் பற்றியோ எழுதுவதில்லை. சிவாஜியைப் பொறுத்தளவிலே என் மனதில் நிற்பது அவரது நடை. அந்த நடத்தைக் கோலத்தின் ஒயில், பூனை இனத்துக்கே (Catwalk) உரிய மென்மையான அபரிமிதமான நடையழகை அங்கே காணலா-ம். ஆனால் அந்த வீறுகொண்ட கவர்ச்சியற்ற தோற்றத்திற்கும்(?) இந்த நடைக்குமிடையே எத்தனை முரண்பாடு. 'Sugar ray Robinson' என்ற இடைநிலை (middle weight boxer) அடைகுத்து சண்டை வீரன் கோலோச்சிய காலங்களிலே காட்டியது போன்றே தலையிணைச் சற்றே இடப்புறமாக சாய்ந்த நிலையிலேயே (Cowboy) கௌ-பாய் போன்ற பாணியிலே, குதிக்கால் நிலத்திலே பரவாமலேயே நடப்பதை அவர் சாதாரணமாகக் கைகொள்வதுண்டு.

அவர் தனது கண்கள் மூலமும், வாய்மொழி மூலமும் புலப்படுத்துகின்ற உணர்ச்சி தோற்றப்பாடு கனவான் ஒருவருக்குறிய தற்றுணிவை பலப்படுத்துகிறது. அவரின் சமகால நடிகர்கள் பலரது மணமுறிவிற்க்கு காரணமாக இருந்த போதிலும், அவரது நடையின் பாணி அந்த மினுக்கு நடையே தான்! பல நடிகர்களைப் பின்பற்றும் வான் கோழிகள் ஆகிற்று.

உண்மையில் சிவாஜியின் அவர் குரலின் ஏற்ற இறக்கங்களின் வீச்சுதான் அவரைப் புகழின் கோபுர முகட்டிற்கு எடுத்துச் சென்றது என்றால் அது மிகையில்லை.

(ஹிந்து" ரி ஜி வைத்தியநாதனின் திறனாய்வு அடுத்த இதழில் நிறை-வுபெறும்) என்னால் எழுதித் தொகுக்கப்படும் "சிவாஜிகணேசனும் தமிழ் சினி-மாவும்" தொடர் நிறைவு பெறும் நாளும் நெருங்கியே வருகின்றது.

இன்னும் ஓரிரு வாரங்கள் காத்திருங்கள்.. வினைமைந்தன்.



## 7 ஜீவன் முக்தி (பகுதி ) 116

# வாழ்க்கையின் லட்சியம்

*(சென்ற வார தொடர்ச்சி...)*

இப்போது நாம் எல்லோரும் இருக்கின்ற நிலை அல்லது பெரும்பாலானவர்கள் இருக்கின்ற நிலை என்று சொலல்லாம்.
சுவப்னம்-கனவு நிலை
எண்ணங்கள் இருக்கும். ஆனால் 'நான்' என்கின்ற விழிப்புணர்வு இருக்காது. அதுதான் கனவு நிலை.
இதை சமஸ்க்ருதத்தில் 'சுவப்னம்' என்று சொல்வார்கள்.
கனவில் வரும் எண்ணங்களை கட்டுப்படுத்த முடியாது.
தங்கள் எண்ணங்களை கனவிலும் கட்டுப்படுத்த இயலாத மக்கள் தங்களுடைய கனவில் எதிர்மறையாக எண்ணுவதும் கூட எதிர்மறை கூட்டு விழிப்புணர்வை அதிகரிக்கும்.
சுசுப்தி-ஆழ் தூக்க நிலை
அடுத்தது, 'நான்' என்கிற உணர்வும் இல்லாமல், எண்ணங்களும் இல்லாமல் இருக்கும் நிலை ஆழ்ந்த துக்க நிலை.
இதை சமஸ்கிருதத்தில் 'சுசுப்தி' என்று சொல்லுவார்கள்.
அடுத்து ஒரு முக்கியமான கருத்து....
இதை ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள்.
எண்ணங்களுடைய அலைவரிசை 'நான்' என்கின்ற விழிப்புணர்வின் அலை-வரிசையைவிட அதிகமாக இருந்ததென்றால், உங்களால் எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாது.
இப்பொழுது இருக்கின்ற நனவு நிலையில் 'நான் ஏன் இதைப் பார்க்க வேண்டும்? படிக்க வேண்டும்? எழுந்து போகலாமே' என்ற எண்ணம் வந்ததென்றால். உங்களால் அதைக் கட்டுப்படுத்த முடியும்.
இல்லை நான் உட்கார்ந்துதான் இருக்கப்போகிறேன் என்று முடிவெடுத்து செயல்படுத்த முடியும். எண்ணங்களைக் கட்டுப்படுத்தி உங்களால் உட்கார முடிகின்றதென்றாலே 'நான்' என்கின்ற உணர்வு இருக்கிற எண்ணங்களும் இருக்கிற முதல் நிலையில் இருக்கிறீர்கள்.
நனவு நிலையில் இருக்கிறீர்கள்.
ஆனால் கனவில், உங்களுடைய எண்ணத்தை உங்களாலேயே கட்டுப்படுத்த முடியவில்லையே.
'நான்' என்கின்ற விழிப்புணர்வு இல்லாமலும், எண்ணங்களும் இருக்கின்ற இரண்டாம் நிலையில் இருக்கிறீர்கள். 'கனவு'நிலையில் இருக்கிறீர்கள்.

ஒருவேளை கனவில் வரும் எண்ணங்களை உங்களால் கட்டுபடுத்த முடிந்தென்றால், நமக்கே தெரியும். நாம் என்னமாதிரி கனவுகளைக் காண்போம் என்றும்....

இந்த உண்மையை புரிந்து கொள்ளுங்கள். நம்முடைய கனவுகள் நம் கட்டுப்பாட்டில் இல்லை. 'நான்' என்கின்ற விழிப்புணர்வு இல்லாமல், எண்ணங்கள் மட்டும் இயங்கிக்கொண்டிருக்கின்ற நிலையே கனவு நிலை. (ஜாக்ரத்)

ஜாக்ரத் நிலையில் அதிகம் வாழ்பவர்களின் எண்ணக்கை வெறும் 1 சதவீதம்தான். மற்றவர்களெல்லாம் கண்களைத் திறந்திருந்தாலும், ஜாக்ரத் என்ற நிலையில் இருப்பதாக சொன்னாலும், அவர்கள் கண்களைத் திறந்து கனவு காண்பவர்களே இருக்கின்றார்கள்.
நான் என்ற விழிப்புணர்வும் இல்லாமல், எண்ணமும் இல்லாமல் உள்ள நிலை ஆழ்ந்த தூக்கம்'(சுசுப்தி)
சமாதி நிலை-துரியம்
இது நான் புதியது, மற்ற மூன்றையும் நாம் எல்லோருமே அனுபவித்து இருப்போம், மற்ற மூன்று நிலையையும், நாம் நம் தினசரி வாழ்க்கையில் சந்திக்கின்றோம்.
இந்த மூன்று நிலைக்குள்தான், நம் வாழ்க்கையின் ஓட்டம் ஓடிக்கொண்டே இருக்கிறது. சிலபேர் நனவு நிலையில் நிறைய நேரம் இருப்பார்கள். சிலபேர் கனவு நிலையில் கனவு நிலையில் நிறைய நேரம் இருப்பார்கள். யார் எதில் வேண்டுமானாலும், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இருப்பார்கள்.
இந்த நான்காவது நிலை, நாம் யாரும் பார்த்திடாத, சாதாரண மனிதர்கள் அனுபவித்திராத நிலை.
இதில் மட்டும்தான், 'நான்' என்கின்ற விழிப்பு மட்டும் இருக்கும். ஆனால் எண்ணங்கள் இருக்காது.
இதைத்தான் தியான நிலை என்று சொல்கிறோம்.
ஆனந்த நிலை, நித்தியானந்த நிலை என்ற பெயரிலும் சொல்லலாம்.
கடவுள் நிலை
புத்தநிலை
சிவநிலை
ஞானநிலை
கிருஷ்ணநிலை என்று எந்த பெயரிட்டு வேண்டுமானாலும் சொல்லலாம்.
இந்த நிலையில் இருக்கும் ஒருவரை பூமியில் இருக்கும் ஒவ்வொரு நொடியும் பூமியும் கொண்டாடும். ஆனந்தக் கூத்தாடும், அவர்களின் பாதம் தன்மீது படவேண்டும் என்பதற்காகவே அது உற்சாகமாய் சுற்றும். இந்த நிலையை உணர்வதற்கான நுட்பத்தைத்தான் தியானம் என்று சொல்கிறோம்.
'நான் என்கின்ற விழிப்புணர்வு இருக்கும். எண்ணங்கள் இருக்காதா?' என்பது சாதாரணமாகவும், மிக சின்ன விஷயமாகவும் தோன்றலாம்.

இது எப்படி அவ்வளவு உயர்ந்த நிலையாக இருக்க முடியும்? என்று மனம் சந்தேகிக்கும்.
ஒரு சின்ன உதாரணம் மூலமாக ஜாக்ரத் என்றழைக்கப்படும் முதல் நிலைக்கும், துரியம் எனும் நான்காம் நிலைக்கும் இருக்கும் மிகப் பெரிய வித்யாசத்தை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.
நீரும், மண்ணும் தனித்தனியாய் இருக்கும்வரை இரண்டுமே தூய்மையானவை....
இரண்டும் ஒன்றான நிமிடமே நீரும், மண்ணும் சேறாகிவிடும்.

இதுதான் மனிதர்கள் ருசிக்கும் சாதாரணமான ஜாக்ரத் நிலை. முதல் நிலை, ஆனால் துரியநிலை என்பது நீரோடு மண் கலக்காத நிலை. நீர் மட்டும் தனியாய் இருந்தால் இது அமிர்தம்.
அதேப்போல்தான் விழிப்புணர்வு மட்டும் தனியாய் இருந்தால் அது அமிர்தம்.
அது ஆனந்தம் பொங்கும் தெயவநிலை. அது துரிய நிலை. ஜவன்முக்த நிலை.

விழிப்புணர்வோடு எண்ணங்கள் சேரும்போதுதான் சொர்க்க உணர்வில் வாழவேண்டிய மனிதம், நரக உணர்வில் மாட்டிக்கொள்கின்ற சேறாய் மாறி விடுகிறான். கலங்கி இருக்கும் நீரில் சிறிதளவு சுண்ணாம்பு சேர்த்தால் கலங்கிய நீர் தெளிந்த நீராகிவிடும்.
அதேபோலத்தான் எண்ணங்கள் எனும் மண்ணை அமிர்தமான விழிப்புணர்வு எனும் நீரில் இருந்து பிரித்துவிட்டால், உங்களுக்குள்ளும் அந்த அமிர்த நிலையை, ஆரோக்கிய நிலையை துரிய நிலையை :ஜீவன்முக்த நிலையை உருவாக்கிவிட முடியும்.
இதை உருவாக்க சேர்க்கப்படும் சுண்ணாம்புதான் நித்ய தியானம். ஒரு நாளில் குறைந்தது மூன்று மணிநேரமாவது உங்களுடைய உணவு, உடை, காலை கடன்களுக்காக செலவிடுகிறார்கள்.
இதோடு ஒரு அரை மணி நேரம்மட்டும் ஜீவன் முக்தியை வாழ்வதற்கு சேர்த்தால் வாழ்வின் இலட்சியப் பயணம் ஆரம்பித்து விடும்.
இதைத் தொடர்ந்து செய்யச் செய்ய உங்கள் வாழ்வின் லட்சியம் தன்னால் ஆழமாகும், நீளமாகும்.
இந்த மனித உடலில் மட்டும் பலமுறை இந்த பூமிக்கு வந்திருக்கின்றீர்கள்.
இதுவரை பொறுமையாக இருந்த பூமி, 'எத்தனை முறை மீண்டும்மீண்டும் பிறந்து பிறந்து வருவாய்?. என்று கேட்டால் என்ன சொல்வீர்கள். திடிரென உனக்கு இங்கு இடமில்லை என்று சொல்லிவிட்டால் என்ன ஆகும்.
தெரிந்து கொள்ளுங்கள். நமக்கு இயற்கை நேரடியாகச் சொல்லும் சிக்னல், பூமி நமக்கு விடுக்கும், எச்சரிக்கை நோட்டீஸ்தான். இயற்கை சீற்றஙங்கள். சுனாமி, குளோபல் வாணிங்.
ஒருவிஷயத்தை நன்றாகப் புரந்துகொள்ளுங்கள்.
உங்கள் குடும்பத்தில் யாருக்காவது உடல்நிலை சரியில்லை என்றால், அது எப்படி மற்ற குடும்பத்தினரின் மனநிலையைப் பாதிக்குமோ, அதேபோலத்தான் உங்களுடைய துக்கம், இந்தப் பிரபஞ்ச குடும்பதையம் பாதிக்கும். பிரபஞ்ச உணர்வை சமச்சீரற்றதாக்கும்.
குடும்பத்தின் நன்மைக்காக அதன் உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்பெடுத்தால் தான் குடும்பம் வாழையடி வாழையாக தழைக்கும்.
அதுபோல் இந்த பிரபஞ்ச குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணமுடையவர்கள் அனைவரிடமும் நான் பகிர்ந்து கொள்ளும் செய்தி. உங்களையும் உங்கள் குடும்பத்தையும் இந்த பூமியையும் காப்பாற்றுவதற்கு உங்களைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரையும் ஜீவன் முக்தர்களாக்குங்கள்.

----

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களுரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.
எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com










# உதயன்




உதயம் 1315 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday June 18, 2021

## ‘உதயன்’ 25வது ஆண்டு வெள்ளி விழாச் சிறப்பிதழ் 06-08-2021 வெள்ளிக்கிழமை மலர்கிறது




உங்கள் அபிமானத்திற்குரிய உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் எதிர்வரும் 06-08-2021 வெள்ளிக்கிழமை வெளிவருகின்றது. தமிழ் பேசும் நல்லுலக நாடுகளிலிருந்து சிறப்புக் கட்டுரைகள், இலக்கியப் படைப்புக்கள் வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றோடும் அதிக பக்கங்களோடும் வாசகர்களையும் வர்த்தக அன்பர்களையும் எழுத்தாள நண்பர்களையும் மகிழ்விக்க வருகின்றது ‘உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழ்.” இந்த சிறப்பிதழில் தங்கள் படைப்புக்கள் இடம்பெற விரும்பும் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களை அனுப்பலாம். மேலும் தங்கள் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரித்து எமக்கு ஆதரவளிக்கவும் வாழ்த்தவும் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்- 416 732 1608 அல்லது 416 752 1524

## “பிரதமர் மோடியை சந்தித்தது மனதுக்கு நிறைவான ஒரு நிகழ்வாக இருந்தது”

### சென்னை திரும்பிய முதல்வர் ஸ்டாலின் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு

- (எமது சென்னைச் செய்தியாளர் அருண்)



“தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று ஆட்சியை அமைத்திருக்கிறது, புதிய அமைச்சரவை என்னுடைய தலைமையில் அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பிறகு, முதன்முதலில் டெல்லி தலைநகருக்கு நான் வந்திருக்கிறேன். இந்த மாலை நேரத்தில் இங்கு வருவதற்கு முன்பு மாண்புமிகு பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களை சந்தித்துவிட்டு வந்திருக்கிறேன். என்னைப் பொறுத்தளவில் பிரதமர் அவர்களைச் சந்தித்தது ஒரு மனதுக்கு நிறைவான ஒரு நிகழ்வாக இருந்தது என்றே கூறுவேன்.”

இவ்வாறு நேற்று வியாழக்கிழமையன்று புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைச் சந்தித்த பின்னர் சென்னை திரும்பிய தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் செய்தியாளர்களிம் தெரிவித்தார்.

(விபரமான செய்தியும் படங்களும் எமது இணையத்தளங்களாக www.uthayannews.ca அல்லது **www.nanban.ca** ஆகியவற்றில் பார்வையிடலாம்)

## கனடா வாழ் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்களுக்கு தமிழ்நாட்டில் வழங்கப்பெற்ற ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’



கனடா வாழ் சிவாச்சாரியப் பெருமகனார் சிவாகம கலாநிதி, சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சாரியார் (சுன்னாகம்) அவர்களுக்கு தமிழ்நாட்டில் வழங்கப்பெற்ற ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ கனடா இந்துப் பெருமக்களை மாத்திரமல்ல ஏனைய மதங்களைப் பின்பற்றும் பல அன்பர்களுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 2ம் பக்கத்தில்)*

## எழுத்தாளர் தம்பிஐயா தேவதாஸ் அவர்களுக்கு கனடாவில் ‘சமூக நற்பணி ஊடகவியலாளர்’ பட்டம்



பிரபல இலங்கை எழுத்தாளரும் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஈழ தம்பிஐயா தேவதாஸ் அவர்களுக்கு கனடாவி-ல் ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானம் ‘சமூக நற்பணி ஊடகவியலாளர்’ பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 2ம் பக்கத்தில்)*

### MPP Logan Kanapathi hosts Virtual Education Roundtable with Minister of Education Stephen Lecce

## ஒன்றாரியோ எம்.பி.பி லோகன் கணபதி கல்வி அமைச்சருடன் இணைந்து நடத்திய பயனுள்ள கலந்துரையாடல்

ஜூன் 15 கடந்த செவ்வாய்கிழமையன்று அன்று, தமிழ் பேசும் ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் திரு லோகன் கணபதி ஒன்றாறியோவின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெக்சேயுடன் இணைந்து கல்வித்திட்டம் சார்ந்த கலந்துரையாடலை இணைய வழி ஊடாக நடத்தினார்.




மேற்படி கலந்துரையாடலில், 80 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், ஆகியோருடன் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டபோது அங்கு யோர்க் பிராந்தியத்தில் இருந்து ஒன்றாறியோ அரசாங்கம் கல்வி ஆண்டுக்கு மேற்கொண்டுள்ள மாற்றங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பெற்றது.
*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

